இறை நம்பிக்கை

நம்பிக்கைக்குரிய நாயனே! நம்பியவர்களைக் கலங்க வைக்காத ஏகனே! உன்னை நான் பாராட்டுகிறேன். பாராட்டுகள் அனைத்தும் உனக்கே உரித்தானவை. நீ மனிதனைப் படைத்து, அவன் வாழ்க்கைக்கு வேண்டிய அனைத்தையும் அமைத்துக் கொடுத்திருக்கிறாய். தம் வாழ்க்கையை சிறப்புடன் அமைத்துக் கொள்வதற்காகச் சிலர் அரும்பாடு படும் அதே நேரத்தில், வேறு சிலர் உன்மீது முழு நம்பிக்கை வைத்துப் பெருமிதத்துடன் வாழ்கிறார்கள். இவர்கள் உன் மீது முழு நம்பிக்கை வைக்கிறார்கள். எனவே நீ இவர்களின் எண்ணங்கள் அனைத்தையும் நிறைவேற்றுகிறாய்.

இறை நம்பிக்கை என்பது இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்று; அதே நேரத்தில் இறை வழி நடப்பவர்களுக்கு இறுதி எல்லைகளில் ஒன்று. முறைப்படி இறைவன் மீது நம்பிக்கை வைப்பவர்கள் மிகக் குறைவு. இதைச் சரிவர உணர்ந்து கொள்வதே சிரமம், உணர்ந்து செயலாற்றுகிறவர்களைப் பற்றிக் கேட்க வேண்டுமா?

இறைவன் மீது எவ்வாறு நம்பிக்கை வைக்க வேண்டும்? உலகைப் படைத்தவன் அவன். உங்களையும் என்னையும் படைத்தவன் அவன். நமக்கு உணவையும் பசியையும் படைத்தவனும் அவன் தான். சம்பாத்திய முயற்சிக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டு, "இறைவனே! என் பசிக்கு உணவு கொடு!" என்று ஓலமிடலாமா?

இறை நம்பிக்கை என்றால் என்ன? இறைவன் மீது முழு நம்பிக்கை வைப்பவர்கள் எதற்காகச் சிரமப்பட்டு உழைக்க வேண்டும்? அதற்குத் தேவை என்ன? நம்பியவர்களுக்குத் துரோகம் செய்யாத இறைவன் மனிதனின் தேவையை முடித்துக் கொடுக்க மாட்டானா?

இவ்வாறு இறை நம்பிக்கை குறித்து எண்ணற்ற வினாக்கள் எழுப்பப்படுகின்றன. முறைப்படி அனைத்தையும் நாம் ஆராய்வோம். இறை நம்பிக்கையுள்ளவர்கள் எப்படி நடந்தார்கள். அவர்கள் அது பற்றி என்ன சொன்னார்கள்.

ஏன் சொன்னார்கள். நீங்களும் நானும் இறைவன் மீது எப்படி-எந்த அளவுக்கு நம்பிக்கை வைக்க வேண்டும் என்பன போன்றவற்றை உரிய இடங்களில் ஆராய்வோம்.

2. குர்ஆன் பேசுகிறது

ஆம், இறை நம்பிக்கை குறித்துக் குர்ஆன் என்ன பேசுகிறது என்று முதலில் நாம் பார்க்க வேண்டும். அது தெய்வ நூல். அதன் கருத்துக்கு மாறுபட்ட அனைத்தும் குப்பையில் போட வேண்டியவை. எனவே, திருக்குர்ஆனின் கருத்துக்கு நாம் முதலிடம் கொடுப்போம். அப்புறம் பெருமானாரின் பொன் மொழிகளையும் நபித்தோழர்களின் நடைமுறைகளையும் ஆராய்வோம்.

அடியில் இடம்பெரும் கருத்துகள் அனைத்தும் திருக்குர்ஆனில் உள்ளவை.

''நீங்கள் உண்மை முஸ்லிம்களாக இருந்தால் இறைவனை நம்புங்கள்" இறை நம்பிக்கைக்கும் உண்மை முஸ்லிமுக்கும் இடையிலுள்ள தொடர்பு இங்கு வலியுறுத்தப்படுகிறது.

'' ஒருவன் இறைவனை நம்பினால், அவனுக்கு அது போதுமானது!" இறைவனை நம்பினோர் கைவிடப்படார் என்ற கருத்து இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது.

''இறைவனைத் தவிர்த்து நீங்கள் யாரை உதவிக்கு அழைக்கிறீர்களோ அவர்கள் உங்களைப் போன்ற அடிமைகளே" மனிதனுக்கு உதவி செய்யத் தகுதியானவன் இறைவன் ஒருவனே. மனிதனுக்கு மனிதன் செய்யும் உதவி குறிப்பிடத் தக்கதல்ல. இறைவனை நீங்கள் நம்புங்கள் அவன் உங்களுக்கு உதவி செய்யக் கூடும். உங்களைப் போன்ற சாதாரண மனிதர்களை நம்பிவிடாதீர்கள். உங்களுக்கு ஏற்பட்டிருப்பது போல் அவர்களுக்கும் பல தேவைகள் ஏற்பட்டிருக்கக் கூடும். தம் தேவைகளையே முடித்துக் கொள்ளாத அவர்கள் உங்கள் தேவைக்கு எப்படி உதவப் போகிறார்கள்? அவர்கள் மீது எப்படி நம்பிக்கை வைக்கலாம்? இந்தக் கருத்தை நமக்கு இந்த இறைவசனம் கொடுக்கிறது.

"இறைவனைத் தவிர்த்து நீங்கள் எவற்றை வணங்குகிறீர்களோ, அவற்றால் உங்களுக்கு உணவு கொடுக்க முடியாது. எனவே, இறைவனிடமே உணவைத் தேடுங்கள்; அவனையே வணங்குங்கள்!" இங்கு சிந்தனைக்கு விருந்து கொடுக்கப் படுகிறது. இறை நம்பிக்கை அடிப்படையிலேயே இறை வணக்கம் உருவாகிறது. இறைவனை முறைப்படி நம்பியவர்கள் அவனின்றி அணுவும் அசையாது என்பதை முழு மனதுடன் ஏற்றுக் கொண்டவர்கள், கண்டிப்பாய் அவனை வணங்குவார்கள். அவர்களுக்கு உண்மை தெரியும். அவனைத் தவிர்த்து வேறு யாரும் எதுவும் இந்த உரிமையைப் பெறவில்லை. நம்பிக்கை என்பது இறைவனுக்கு மட்டுமே சொந்தமான ஒன்று. என்றைக்குமே யாரையுமே அவன் மோசம் செய்ய மாட்டான். ஏனெனில் மனிதனைப் போல அவன் சுயநலம் கொண்டவனல்லன். எனவே உங்கள் முழு நம்பிக்கைக்கு அருகதையுள்ளவன் இறைவன் ஒருவனே!

திருமறையின் கருத்துக்கள் மிக ஆழமானவை இது போன்ற சிறிய நூல்களில் அவற்றின் உட்பொருள்கள் அனைத்தையும் இடம் பெறச்செய்வது சாத்தியமில்லை ஆயுள் முழுவதும் எழுதினாலும் அவற்றிற்கு வரம்பு காண முடியாது; என்றாலும் இறைவன் மீது மனிதன் வைக்கும் ஆதாரங்களாக இறை வசனங்கள் சிலவற்றை மேலே குறிப்பிட்டேன்; இவ்வளவு போதும்.

மனிதன் எதை நம்புகிறான் எதை நம்பவில்லை என்பதைத் தெளிவாக எழுதமுடியாது. சிலர் வான சாஸ்திரத்தையும் ரேகை இயலையும் நம்புகிறார்கள். வேறு சிலர் தம்முடைய உடல் பலத்தையும் செயல் பலத்தையும் நம்புகிறார்கள். இவர்கள் தம் கையை நம்பி வாழ்கிறவர்கள். மற்றும் சிலர் மற்றவர்களின் உழைப்பையும் உதவியையும் நம்புகிறார்கள். இவர்கள் அனைவரும் தத்தம் கொள்கைக்கு தேவையான ஆதாரங்களைத் தேடியெடுத்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

வலக்கரத்திலுள்ள நேர்கோடு ஒன்று நடுவிரல் வரை சென்றுவிட்டால் அது செல்வத்தின் அறிகுறியென்றும், அந்தக்கோடு இடையில் துண்டிக்கப்பட்டு இருந்தால் அது வறுமையின் பிரதிபலிப்பு என்றும் ரேகை நிபுணர்கள் சொல்வார்கள். இதை நம்புகிறவர்கள் பலர். அவர்களின்

கையைப் பார்த்த ரேகை நிபுணர் ஒருவர், " உங்களுக்கு இன்னும் இரண்டு ஆண்டுகளில் திரண்ட செல்வம் கிடைக்கப் போகிறது!" என்று சொல்லி விட்டால் போதும். இவர்கள் இரண்டு ஆண்டுகள் வரை அந்தக் கற்பனைச் செல்வத்தை எண்ணியபடி வானத்தைப் பார்த்துக் கொண்டிருப்பார்கள். இதற்கிடையில் அவர்கள் அந்தச் செல்வத்தை அடைவதற் காக எத்தகைய முயற்சியையும் எடுப்பதில்லை.

கையிலிருக்கும் கோடுகள் இறைவனால் உருவாக்கப் பட்டவை. அவற்றை இறைவனின் எழுத்துக்கள் என்றும் சொல்லலாம். அவற்றிற்கு ஏதேனும் பொருள் இருக்கத்தான் வேண்டும். என்றாலும் அந்தப் பொருளைச் சரிவரத் தெரிந்து கொண்டவர்கள் மிகவும் அரிது என்றே நான் எண்ணுகிறேன். இந்தத்துறையில் அனுபவம் பெற்றவர்கள் எங்கேயாகிலும் இருக்கலாமே தவிர எங்கும் இருக்க முடியாது. அவர்களைத் தேடிபிடிப்பதே சிரமம். தேடிப் பிடித்து விட்டாலும் அவர்களிடமிருந்து உண்மையை வெளியில் கொண்டு வருவது மிகச் சிரமம்.

இந்தத் தொல்லைகள் எல்லாம் எதற்கு? கைக் கோடுகளை நம்புவதைவிட, அவற்றை படைத்த இறைவனை நம்புவது சிறந்ததல்லவா?

என்றாலும் மனிதன் இதுபோன்ற காரியங்களில் பெரிதும் அக்கறை செலுத்துகிறான். அனைத்துக்கும் இறை வனே காரணகர்த்தா என்பதை மனிதன் நம்பினாலும், அந்தக் காரணகர்த்தாவின் மீது பொறுப்பை போட்டு விட்டுப் பேசாமலிருப்பதற்கு அவன் மனம் இடம்தர மறுக்கிறது.

"அனைத்தையும் ஒதுக்கிவிட்டு இறைவன்மீது பொறுப்புகள் முழுவதையும் நீங்கள் போட்டுவிட்டால், அவன் உங்களுக்குத் தேவையான அனைத்தையும் கொடுப் பான்..." என்று பெருமானார் கூறினார்கள். இத்தகைய இறைநம்பிக்கையுள்ளவர்கள் அந்தக் காலத்தில் அதிகமாக இருந்தார்கள். அவர்கள் பெருமானாரை நேருக்கு நேர் நின்று பார்த்தவர்கள்; அருகில் உட்கார்ந்து உரையாடிய வர்கள். எத்துணைப் பெரிய பேற்றை அவர்கள் பெற்றிருந் தார்கள்! எவ்வளவு ஆழமான இறை நம்பிக்கையை அவர்கள் அடைந்திருந்தார்கள்!

அவர்கள் மற்ற எவரையும் பின்பற்றவில்லை. மேற் குறிப்பிட்ட எந்த வகுப்பிலும் அவர்கள் சேரவில்லை. வான இயலுக்கும் ரேகை சாஸ்திரத்துக்கும் அவர்கள் முக்கியத்து வம் கொடுக்கவில்லை. செயல் பலத்துக்கும் அவர்கள் பெருமை கொடுக்கவில்லை. பணத்தைக்கூட அவர்கள் மதிக்கவில்லை. பெட்டியிலுள்ள செல்வத்தை எல்லாம் அவர்கள் இறைவழியில் தர்மம் செய்தார்கள்!

"கையிலிருக்கும் பணத்தைவிட இறைவன் உங்களுக்குக் கொடுக்கப்போகும் நல்லருளை அதிகமாக நம்புங்கள். மக்களுக்கு மத்தியில் நீங்கள் செல்வனாக இருக்க ஆசைப் பட்டால் இப்படிச் செய்யுங்கள்!" என்றும் பெருமானார் கூறியிருக்கிறார்கள்.

இப்படி நம்புவது சிரமமான காரியம்தான். என்றாலும் அதை அசாத்தியம் என்றும் சொல்லிவிட முடியாது. ஏனெனில் இந்த வழியில் நடந்து காட்டியவர்கள் வரலாற்று ஏடுகளில் காணப்படுகிறார்கள்.

அறவழியை மக்களுக்குப் போதித்த குற்றத்திற்காக இப்ராஹீம் நபி இயந்திரத்தின் மூலம் தீக்குழிக்கு வீசப் பட்டார்கள். வானளாவி உயர்ந்து துடிக்கும் தீ நாக்குகளுக்கு மத்தியில் அவர்கள் வந்து விழுந்தபோது வானவர் ஜிப்ரயீல் எதிரில் தோன்றினார். "என்னுடைய உதவி உங்களுக்குத் தேவையா? உதவக் காத்திருக்கிறேன்..."

"உம்முடைய உதவியா!" என்று இப்ராஹீம் நபி ஆச்சரியத்தோடு கேட்டார்கள். "உம் உதவி எனக்குத் தேவை யில்லை. இறைவன் எனக்குப் போதுமானவன், அவனிடம் என் பொறுப்புகள் முழுவதையும் நான் ஒப்படைத்து விட்டேன். பொறுப்பாளர்களில் அவன் மிகச் சிறந்தவன்..."

தாவூத் நபிக்கு இறைவன் அனுப்பிய செய்தி அடியில் இடம் பெறுகிறது; "தாவூதே! அகிலம் முழுவதும் எதிர்த்து நின்று சதிசெய்தாலும், என்மீது பூரண நம்பிக்கையுள்ள மனிதனை நான் காப்பாற்றுவேன்!"

மனிதனுக்கும் இறைவனுக்கு மிடையில் உருவாகும் இந்தத் தொடர்பை வரலாற்றுத் துணுக்கு ஒன்று தெளிவுபடுத்துகிறது. துறவி இப்ராஹீம் பின் அத்ஹம் ஒரு பாதிரியாரைக் கேட்டார். "நீர் எங்கிருந்து சாப்பிடுகிறீர்."

பாதிரியாரின் விடை பட்டெனத் தெறித்தது. "எனக் கென்ன தெரியும்? நீங்கள் இந்தக் கேள்வியை என்னிடம் கேட்டிருக்க வேண்டியதில்லை. இறைவனிடம் கேளுங்கள். அவன் எனக்கு எங்கிருந்து..எப்படி உணவளிக்கிறான் என்று!

ஹரம் பின் ஹய்யான், உவைஸுல் கர்னீயுடன் உரையாடிக் கொண்டிருந்தார்.

"நான் எங்கு இருக்க வேண்டும் என்று நீங்கள் சொல்கிறீர்கள்?" என்றார் ஹரம்.

"சிரியாவை நான் விரும்புகிறேன். நீங்கள் அங்கு இருக்க வேண்டும் என்றுதான் நான் விரும்புகிறேன்"

ஹரம் திடுக்கிட்டார். அவருக்கு அது புதிய இடம். சிரியாவில் அவருக்கு வியாபாரம் எதுவும் கிடையாது. எனவே அவருக்கு அங்கு வருமானம் கிடைக்க வழியில்லை. "சிரியாவிலா! அங்கு என்னால் எப்படி வாழ முடியும்? வருமானத்திற்கு வழியில்லையே!"

உவைஸ் ஏறிட்டுப் பார்த்தார். அவர் கண்களில் வெறுப்பு நிழலிட்டது. "சீ! இதயங்கள் கெட்டுப் போய் விட்டன!.... உங்கள் இதயத்தில் சந்தேகம் தோன்றி விட்டது. எனவே, அறிவுரை கூறுவதில் அர்த்தமில்லை; பயனுமில்லை."

மேற்குறிப்பிட்ட வரலாற்றுத் துணுக்குகள், சம்பா ஷனைத் துண்டுகள் உங்களுக்குத் தெளிவைக் கொடுக்கும் என்று நான் நம்புகிறேன்.

3. இறைவனே பொறுப்பாளி

: இறை நம்பிக்கை என்றால் என்ன என்பதை அறிஞர் குலம் பெரிதும் ஆராய்ந்திருக்கிறது. அறிஞர்கள் ஒவ்வொரு வரும் தமக்குப்பட்டதை வெளியிட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களில் ஒருவருடைய கருத்து மற்றொருவரின் கருத்துக்கு மாறுபடுகிறது. இது குறித்து அவர்களின்மீது நம்மால் குற்றம் சாட்ட முடியாது. ஏனெனில் அவர்கள் ஒவ்வொருவரும் தாம் பெற்ற அனுபவத்தைக் கருத்தாக வெளியிட்டார்கள்.

அந்த அறிஞர்களின் கருத்துக்களை இங்கே விவரிப்பது தேவையற்ற ஒன்று என்றாலும் இந்தப் பிரச்சினைக்கு ஒரு முடிவு காண வேண்டுமல்லவா? இதோ நாம் ஒரு முடிவு காணுவோம்.

இறை நம்பிக்கை என்பது, பல படித்தரங்களைக் கொண்ட ஒரு மன நிலை. இதை நீங்கள் தெளிவாக உணர்ந்துகொள்ள வேண்டும் என்றால் ஓர் உவமானத்தை எடுத்துக் கொண்டு தான் ஆக வேண்டும்.

நீங்கள் செய்த குற்றத்தை மறைப்பதற்காகவோ நீங்கள் நிரபராதி என்பதை நிரூபிப்பதற்காகவோ வழக்கறிஞரின் உதவியை நாடுகிறீர்கள். அவர்தான் உங்களை நீதி மன்றத்தில் பெருமை அடையச் செய்கிறார். உங்கள் சிக்கல்கள் முழுவதையும் அவரிடம் நீங்கள் கூறி விடுகிறீர்கள். உங்கள் வெற்றிக்கும் தோல்விக்கும்-நன்மைக்கும் தீமைக்கும் அவரையே நீங்கள் பொறுப்பாளியாக்கி விடுகிறீர்கள்.

கைதிக் கூண்டில் நிற்கும் ஒருவன் தன்னுடைய வழக்கறிஞரை எப்படி நம்புகிறானோ அப்படியே நீங்கள் இறைவனை நம்ப வேண்டும். இதையே நான் இறை நம்பிக்கை எனக் குறிப்பிடுகிறேன். வழக்கறிஞர் காட்டும் வழியில் கட்சிக்காரன் கண்ணை மூடிக் கொண்டு நடப்பது போல, இறைவன் வகுத்த வழியில் நீங்கள் கண்ணை மூடிக் கொண்டு நடைபோட வேண்டும். தன் வெற்றிக்கு வழக்கறிஞரே பொறுப்பாளி என்று கட்சிக்காரன் நம்புவது போல், உங்கள் முன்னேற்றங்கள் அத்தனைக்கும் இறைவனே உண்மையான பொறுப்பாளி என்று நீங்கள் நம்பவேண்டும். ஏனென்றால் அவன், பேரரசன், சர்வசக்தன். எனவே அவனின்றி அணுவும் அசையாது.

வழக்கறிஞர் ஒருவரைத் தவிர்த்து வேறு யார்மீதும் கட்சிக்காரன் நம்பிக்கை வைப்பதில்லை. அவர் பேச்சைத் தவிர்த்து வேறு யாருடைய பேச்சுக்கும் அவன் மதிப்புக் கொடுப்பதில்லை. இதைப்போன்று இறைவன் ஒருவனைத் தவிர்த்து வேறு யார் மீதும்-எதன் மீதும் நீங்கள் நம்பிக்கை வைக்கக் கூடாது. அவன் வார்த்தையை நீங்கள் முழு மனத்துடன் மதிக்க வேண்டும். ஏனென்றால் அவன் வார்த்தையில் தான் அகிலத்தின் தத்துவங்கள் அனைத்தும் அடங்கி இருக்கின்றன.

இந்த நிலையை நீங்கள் அடைந்து விட்டால் உங்களை 'இறை நம்பிக்கையாளர்' என்று நான் துணிந்து கூறுவேன்.

மேற்குறிப்பிட்ட உவமானத்தை இன்னும் சற்று விரிவாக நாம் இப்போது ஆராய்வோம்.

வழக்கறிஞர் ஒருவர் கட்சிக்காரன் முழு நம்பிக்கைக்கு உரியவராயிருப்பது என்னவோ உண்மைதான், என்றாலும் வழக்கறிஞருக்குச் சில தகுதிகள் இருக்க வேண்டும். இந்தத் தகுதிகள் இல்லாத வழக்கறிஞரை யாரும் நம்ப மாட்டார்கள்; எந்தக் கட்சிக்காரனும் காலில் விழுந்து கெஞ்சமாட்டான்.

1. வழக்கறிஞருக்கு இருக்க வேண்டிய முதற்தகுதி நேர்மை. நேர்மையையும் முரணையும் உணர்ந்து கொள்ளாத வழக்கறிஞரால் நிச்சயமாக வெற்றியடைய முடியாது. தாம் மேற்கொண்டிருக்கும் வழக்கு சம்பந்தமான எல்லா விவரங்களையும் அவர் தெரிந்து வைத்திருக்க வேண்டும். எந்தக் கட்டத்தில் சர்க்கார் தரப்பு வழக்கறிஞர் குறுக்குக் கேள்வி கேட்பார். எந்தச் சம்பவத்தை அவர் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துவார் என்றெல்லாம் தெரிந்திருக்க வேண்டும். வழக்கு சம்பந்தமான சிறிய பெரிய விவரங்கள் அத்தனையும் அவர் மனத்தில் பசுமையுடன் இருக்க வேண்டும்.

2. வழக்கறிஞருக்கு இருக்கவேண்டிய இரண்டாம் தகுதி துணிவு. ஏனெனில் கோழைகளுக்கும் தொடை நடுங்கி களுக்கும் வாதாடும் திறமை கிடையாது. எனவே ஒரு வழக்கை நடத்த துணியும் வழக்கறிஞர் தமக்குச் சாதகமான விவரங்களை அப்பட்டமாக எடுத்துக் கூறுமளவுக்கு துணிச்சல் பெற்றிருக்க வேண்டும்.

வழக்கறிஞர் என்று பாராட்டப்படும் எத்தனையோ பேர் உரிய நேரத்தில் உரிய விவரத்தைக் கூறாமல் வீட்டுக்கு வந்து தலையில் அடித்துக் கொள்கிறார்கள். இத்தகையவர் களுக்குச் சாதகமாக எது கிடைத்தாலும் அதை அவர்களால் முறைப்படிப் பயன்படுத்த முடியாது. ஏனெனில் கோழைமை என்பது ஒரு விஷம். அது மனிதனின் நாவன்மைக்குக் குழி தோண்டி விடும். எனவேதான் வழக்கறிஞர்கள் உண்மையைத் தெளிவுபடுத்தி ஜூரர்களின் கவனத்தையும் நீதிபதியின் கவனத்தையும் ஏக காலத்தில் கவரும் அளவுக்குத் துணிவு

பெற்றிருக்க வேண்டும். இல்லையேல் அவர்களால் நீதி மன்றத்தில் நின்று வாதாட முடியாது.

உங்களுக்காக வாதாடும் வழக்கறிஞர் எப்படி இருக்க வேண்டும் தெரியுமா? காரியத்தில் கண்ணாக இருக்க வேண்டும். சர்க்கார் தரப்பு வாதங்களை எல்லாம் அவர் ஊன்றிக் கவனிக்க வேண்டும். அந்த வாதங்களில் சிற்சில தவறுகள் தோன்றக் கூடும், அப்போது அந்தத் தவறுகளை உங்கள் வழக்கறிஞர் மனத்தில் பதித்து வைத்து உரிய நேரத்தில் மறுப்புத் தெரிவிக்க வேண்டும். இதற்குப் பட்டப் படிப்பு இருந்தால் மட்டும் போதாது; துணிச்சலும் இருக்கவேண்டும்.

நாணம், அச்சம், குழப்பம் முதலிய எதுவும் அவருக்கு இருக்கக்கூடாது. நாணத்தினால் தோல்வி அடைந்தவர்கள் அநேகர். அச்சத்தின் காரணமாக எத்தனையோ பேர் சுய மரியாதையைக் குலைத்துக்கொண்டிருக்கிறார்கள். குழப்பம் கொண்டவர்களால் துணிவுடன் பேச முடியாது. அப்படிப் பேசினாலும் மற்றவர்கள் பார்த்துச் சிரிப்பதற்கு அது வழி வகுத்து விடும்.

எனவே, உங்கள் வழக்கை வெற்றிகரமாக நடத்துவதற் கென்று நீங்கள் ஒரு வழக்கறிஞரைத் தேடிப் பிடிக்கும் போது அவரிடம் தேவையான துணிச்சல் இருக்கிறதா என்று பார்த்துக் கொள்ளுங்கள்.

3. நாவன்மை. ஒரு வழக்கறிஞருக்கு இருக்கவேண்டிய மூன்றாம் தகுதி இது. இது மிகவும் முக்கியமான தகுதி என்று நான் எண்ணுகிறேன். நாவன்மை என்பது சக்தி வாய்ந்த ஒன்று. அதன் உதவியால் பேரரசு நிறுவியவர்கள் எத்தனை யோ பேர். அதை அடிப்படையாக வைத்து நாட்டையே துண்டாடியவர்கள் அநேகர்.

நாவன்மை யாருக்கு இருந்தாலும், யாருக்கு இல்லாவிட்டாலும், வழக்கறிஞர்களுக்கு அது மிக அவசியம். பேசத்தெரியாதவர்களும் உளறத் தெரிந்தவர்களும் 'வழக்கறிஞர்' என்ற பட்டத்தைத் தூக்கி எறிந்து விடுவதுதான் நல்லது.

ஒவ்வொரு தரத்தாருக்கும் ஒவ்வொரு தகுதி தேவைப் படுகிறது. வழக்கறிஞர்கள் மேற்கொண்டிருப்பது நாவன்மை யை மையமாகக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கும் தொழில். எனவே, நாவன்மையற்றவர்களால் இந்தத் துறையில் உயர்ந்து விளங்க முடியாது.

ஆரந்த ஞானமும் நுண்ணிய கண்ணோட்டமும். வழக்கறிஞர்களுக்கு இருக்க வேண்டியதுதான். அதே சமயத்தில் நாவன்மையும் அவசியமாகும். அப்போதுதான் அவர்களால் தம் கட்சியைத் தெளிவுபட விளக்கிக்காட்ட முடியும்.

4. அன்பு! ஒன்றும் ஆச்சரியப்படவேண்டாம். வழக்கறிஞருக்கு இருக்க வேண்டிய தகுதிகளில் இதுவும் ஒன்றுதான். அவர் முழு அன்புள்ளவராக இருக்க வேண்டும். உங்கள்மீது, அல்லது வழக்குக்கென்று நீங்கள் கொடுக்கும் பணத்தின்மீது, அவருக்குப் போதிய அன்பு இருக்க வேண்டும். இந்த அன்பு அக்கறையாக உருமாறுகிறது.

உங்கள் வழக்கறிஞர் சிறந்த ஆராய்ச்சியாளராக இருக்கலாம். அவரை அகிலமே பாராட்டுகிறது என்றும் வைத்துக் கொள்ளுங்கள். அவர் மேற்கொண்ட எந்த வழக்கும் தோல்வியைக் கண்டதில்லை என்று வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளுங்கள். ஆனால், அவருக்கு உங்கள்மீதோ உங்கள் பணத்தின் மீதோ அக்கறை இல்லையெனில், அவரால் உங்களுக்குக் கணிசமான பயன் எதுவும் ஏற்படமுடியாது. அவரை உங்களால் மனப் பூர்வமாக நம்பவும் முடியாது.

ஆகவே நேர்மையுணர்வு, துணிவு, நாவன்மை, அன்பு ஆகிய நான்கு தகுதிகளும் வழக்கறிஞருக்கு இருக்க வேண்டும். இருந்தால் மட்டும் போதாது. அந்த நான்கு குணங்களும் அவரிடம் இருக்கின்றன என்பதை நீங்கள் நம்பவும் வேண்டும். வழக்காடுவது அவர்தான். என்றாலும் பொறுப்புகள் அனைத்தையும் ஒப்படைப்பது நீங்களல்லவா? அவரது திறமையில் உங்களுக்கு முழு நம்பிக்கை ஏற்படும் வரை உங்களால் அவரைக் கண்டிப்பாய் நம்ப முடியாது.

எனவே, வழக்கறிஞருக்குத் திறமை இருப்பதுபோல், உங்களுக்கு அவரது திறமையில் நம்பிக்கையும் இருக்க வேண்டும். அவருக்குத் திறமை எத்துணை முக்கியமோ, அத்துணை முக்கியம் உங்களுக்கு அவர்மீது நம்பிக்கை.

இந்தத் திறமைகள் அத்தனையும் ஒவ்வொரு வழக் கறிஞரிடமும் இருக்க முடியாது. சிலருக்கு நாவன்மையும் துணிவும் இருக்கும். வேறு சிலர் நேர்மையுணர்வையும் நாவன்மையையும் பெற்றிருப்பார்கள். மிகச் சிலரே மேற் குறிப்பிட்ட நான்கு தகுதிகளையும் ஏக காலத்தில் பெற்றிருப் பார்கள். அவர்கள் தம் துறையில் மற்றவர்களை விட உயர்ந்து விளங்குவார்கள். ஆனால், இத்தகையவர்கள் மிகச் சிலர் என்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது.

உங்கள் வழக்கறிஞர் இந்த நான்கு தகுதிகளையும் பெற்றிருக்கிறாரா என்பதை நீங்கள் முதலில் கவனித்துக் கொள்ள வேண்டும். பெற்றிருக்கிறார் என்றால் உங்கள் வழக்குக்கு அவரைத் துணிந்து பொறுப்பாளியாக்குங்கள். சர்க்கார் தரப்பு வழக்கறிஞர்கள் இந்தத் தகுதிகளில் குறையுள்ளவர்களாயிருக்கும்வரை அவர்களால் உங்கள் வழக்கறிஞரைத் தோற்கடிக்க முடியாது. அதே சமயத்தில் உங்கள் வழக்கறிஞர் குறையுள்ளவராகவும் எதிர்த் தரப்பு வழக்கறிஞர்கள் நிறைவுள்ளவர்களாகவும் இருந்தால் உங்களால் என்றைக்கும் வெற்றியைக் காண முடியாது. அவரால் அவர்களை மடக்க முடியாது. இத்தகைய வழக்கறிஞரை உங்களால் நம்பவும் முடியாது. ஏனெனில் வழக்கறிஞருக்கு இருக்க வேண்டிய தகுதிகள் அவரிடம் முழு உருவத்துடன் இடம் பெறவில்லை. எனவே அவரைச் சிறந்ததொரு வழக்கறிஞர் என்றும் குறிப்பிடுவதற்கில்லை.

சட்டத்தின் பிடியில் அகப்பட்டுக் கொண்டிருக்கும் கைதியொருவன் வழக்கறிஞரை நம்புவதுபோல், நீங்களும் நானும்-ஏன், உலகிலுள்ள ஒவ்வொரு மனிதனும் இறை வனை நம்பவேண்டும். மேற்குறிப்பிட்ட நான்கு தகுதிகளும் இறைவனிடம் மிகச் சிறந்த முறையில் அமைந்திருக்கின்றன.

முதற் தகுதி நேர்மையுணர்வு, இறைவன் நேர்மை யானவன் என்பதை நிரூபிக்க வேண்டிய தேவை கிடையாது. ஏனெனில் மனிதனுக்கு நேர்மையைக் கற்றுக்கொடுத்தவன் இறைவன். அவன் கண்ணோட்டம் அகிலமனைத்தையும் அளந்து பார்க்கும் பேராற்றலுடையது. அவனது ஆட்சியில் நிரபராதிகள் தண்டனை பெற மாட்டார்கள். குற்றவாளிகள் தண்டனைக்குத் தப்பமாட்டார்கள்.

நேர்மை குறித்து மனிதன் கொண்டிருக்கும் கருத்து நாளுக்கு நாள் மாறுபடக் கூடியது. அவன் அறிவு வளர வளர அவனுடைய நேர்மையுணர்வும் வளர்கிறது. ஒரு காலத்தில் நேர்மையாகக் கருதப்பட்ட ஒன்று மற்றொரு காலத்தில் அநீதி என்று ஒதுக்கித் தள்ளப்படக் கூடும்.

ஆனால் இறைவனின் அறிவு வரம்பற்றது. அவன் மனிதனுக்கு வகுத்துக் கொடுத்திருக்கும் நேர்மை வழி மிகச் சிறந்தது. அது என்றைக்கும் மாறாது. கால ஓட்டம் அதை மாற்றாது.

ஒரு வழக்கிலுள்ள சாத்திய அசாத்தியங்களை ஆராய்ந்து கண்டுபிடிப்பது வழக்கறிஞருக்குத் தலை வேதனை கொடுக்கக் கூடிய பிரச்சினை. கட்சிக்காரர் கூறும் குறிப்புகளில் எது சாதகமானது, எது பாதகமானது என்பதைக் கண்டு பிடிப்பதற்குள் அவர் மூளையே குழம்பிப்போய் விடுகிறது. உண்மையை ஆராயும் பொருட்டு அவர் பல நாள் தூக்கத்தைத் துறக்க வேண்டியிருக்கிறது. அல்லும் பகலும் அவர் வழக்கு குறித்து ஆராய வேண்டிய நிலைமை எற்படுகிறது.

இப்படி எல்லாம் சிரமம் அனுபவித்த பிறகும் ஒரு சிலர் தம் கண்ணோட்டத்தில் தவறி விடுகிறார்கள். உண்மை என்று அவர்கள் கருதிய ஒன்று நீதி மன்றத்தில், வழக்கறிஞர்களுக்கு மத்தியில் விரும்பத் தகாத பல விளைவுகளை ஏற்படுத்தி விடுகிறது.

ஆனால் இறைவனின் கண்ணோட்டம் எத்தகைய குழப்பத்தையும் ஏற்றுக்கொள்ளாது. அவன் பார்வைக்கு எதுவும் தப்ப முடியாது. உங்கள் செயலை அவன் பார்த்துக் கொண்டேயிருக்கிறான். நாலு பேருக்கு மத்தியில் நீங்கள் பேசும் ஹாஸ்யத்திலிருந்து உங்களுக்கே தெரியா மல் உங்கள் அடி மனத்தில் தோன்றும் மெல்லிய எண்ணங்கள் வரை அனைத்தையும் அவன் அறிகிறான். குமுறி வெடிக்கும் எரிமலையிலிருந்து கதறித் துடிக்கும் மனித நெஞ்சுவரை அனைத்தையும் அவன் பார்க்கிறான். "நீங்கள் பகிரங்கமாகக் கூறுவதையும் மர்மமாக நீங்கள் மறைத்து வைப்பதையும் இறைவன் அறிகிறான்" என்னும் திருமறைக் கருத்தை நீங்கள் கேட்டதில்லையா?

"அவன் அறிவு அனைத்தையும் சூழ்ந்து நிற்கிறது" என்று திருக்குர்ஆன் பேசுவது உங்களுக்குக் கேட்கவில்லையா?

"அவன் கரையற்ற அறிவுடையோன். வரம்பற்ற ஆற்றலுடையோன்..." என்ற கருத்தை நீங்கள் திருமறையில் பார்த்ததில்லையா?

...எனவே இறைவனின் அறிவைப்பற்றியோ அவனது நேர்மை யுணர்வைப் பற்றியோ நாம் ஒன்றும் வாதிக்க வேண்டியதில்லை. நேர்மையைக் காட்டியவன் நேர்மையை உணர்ந்துதானே இருக்க வேண்டும்?

வழக்கறிஞருக்கு இருக்க வேண்டிய இரண்டாம் தகுதி துணிவு. வழக்கறிஞருக்கு நீங்கள் கொடுக்கும் பணம் வழக்கு விவகாரங்களில் அவருக்குத் துணிச்சலை ஏற்படுத்தலாம். ஆனால், அவரும் மனிதர்தான். எனவே தம் மனத்தை ஆட்கொள்ள முடியாத அளவுக்கு என்றைக் காகிலும், துயரம் ஏற்படக்கூடும். சொந்த அமைதிக்கே பாடுபடும் அவரால் உங்களுக்கு எவ்வாறு அமைதியைக் கொண்டு வர முடியும்? குழம்பிய மனத்தை வைத்துக்கொண்டு அவரால் உங்களுக்கு எப்படித்தான் வாதாட முடியும்?

ஆனால் இறைவன் குழப்பமற்றவன். எவராலும் அவனை அடக்கியாள முடியாது. எனவே அவன் யாருக்கும் பயப்பட வேண்டியதில்லை. அவன் பேச்சை நீங்கள் கேட்டதில்லையா? முரண் வழி நடந்தவர்களையும் முற்போக்கு வாதம் புரிந்தவர்களையும் அவன் எத்தனை வன்மையாகக் கண்டிக்கிறான் என்பதை நீங்கள் அறிந்து கொள்ள ஆசைப்படுகிறீர்களா?

"இறைவனின் தண்டனை கடினமானது!" என்று அவன் எச்சரிக்கை விடுப்பதை நீங்கள் கேட்க ஆசைப்படுகிறீர்களா?

நல்லவர்களையும் நன்மை புரிந்தவர்களையும் அவன் எப்படி எல்லாம் பாராட்டுகிறான் என்பதை நீங்கள் உணர்ந்து கொள்ள ஆசைப்படுகிறீர்களா? திருக் குர்ஆனைப் புரட்டிப் பாருங்கள். வரிக்கு வரி அது இறைவனின் துணிச்சலைக் காட்டுகிறது. வார்த்தைக்கு வார்த்தை அது அவன் பெருமையைப் பறை சாற்றுகிறது.

வழக்கறிஞருக்கு இருக்கவேண்டிய மூன்றாம் தகுதி நாவன்மை. இறைவனின் நாவன்மையை நிரூபிப்பதற்கு திருக்குர்ஆனின் ஒருசிறு வசனம் போதுமானது. அதைப் போன்று அத்துணை வன்மையாக எவராலும் பேசவும் முடியாது; எழுதவும் முடியாது. "இதில் உங்களுக்குச் சந்தேகமிருந்தால் இதைப்போன்று மற்றொரு குர்ஆனைக் கொண்டு வாருங்கள், பார்க்கலாம்" என்று இறைவன் இன்றைக்கும் சவால் விடுகிறான்.

வழக்கறிஞருக்கு இருக்கவேண்டிய கடைசித் தகுதி அன்பு. வழக்கறிஞருக்கு உங்கள்மீது இருக்கும் அன்பைவிட நீங்கள் கொடுக்கும் பணத்தின் மீது அன்பும் அக்கறையும் அதிகம். எனவே பணமற்றவன் வழக்கறிஞரின் அன்பைப் பெற முடியாது; இதனால் அவன்மீது அவருக்கு அக்கறையும் ஏற்பட முடியாது. இந்த அன்பும் அக்கறையும் பெரும்பாலும் பணத்தையே மையமாகக் கொண்டிருக்கின்றன.

ஆனால் இறைவன் பணத்திற்கு அடிமையல்ல. பணத்தைக் காட்டி அவனை எவரும் அடிமைப்படுத்த முடியாது. ஏனெனில் அனைவரும்-அனைத்தும் அவன் அடிமைகள், அவன் அடிமையல்ல; அதிபதி.

எனவே அவன் அன்பு சுயநலமற்றது. ஏழை முதல் பணக்காரர் வரை-அறிஞர் முதல் பாமரர் வரை எல்லோருக்கும் அவன் அன்பு செலுத்துகிறான். "அவன் அன்பாளர்களுக்கெல்லாம் அன்பாளன்" என்று திருக்குர்ஆன் தெளிவுபடுத்துகிறது.

ஆகவேதான் இறைநம்பிக்கையாளர்கள் தம் பொறுப்புகள் அனைத்தையும் இறைவனிடம் ஒப்படைத்து விடுகிறார்கள் - கட்சிக்காரன் ஒருவன் தன் பொறுப்புகள் முழுவதையும் வழக்கறிஞரிடம் ஒப்படைத்து விடுவது போல! கட்சிக்காரனின் நம்பிக்கையை விட இந்த மகான்களின் நம்பிக்கை சிறந்தது. ஏனெனில் வழக் கறிஞரைப் படைத்தவனும் இறைவன்தான்.

அவர்கள் தமக்கென்று தனிப்பட்ட முறையில் கவலைகளை வைத்துக் கொள்ளாததால் பற்றற்று வாழ்கிறார்கள். இன்பத்தையும் துன்பத்தையும் இறைவனின் தீர்ப்புகள் என்று நம்புவதால் அவர்கள் வாழ்க்கையில் வெற்றி மாலை சூடுகிறார்கள். இறைவனைச் சர்வ சக்தன் என்று நம்புவதால்

அவனிடம் அவர்கள் மண்டியிடுகிறார்கள். மா மன்னனுக்கு மண்ணகம் முழுவதும் மண்டியிட வேண்டியதுதானே! பல கோடி இன்பங்களை அள்ளிக் கொடுத்த அவனுக்குப் பக்தர்களின் இதயங்கள் பூரிப்புடன் தலை வணங்குகின்றன. இதை நான் கிடைத்தற்கரிய பேறு என்று குறிப்பிட விரும்புகிறேன்.

உங்கள் உள் மனத்தை நீங்களே கேட்டுப் பாருங்கள் இறைவன்மீது உங்களுக்கு முழு நம்பிக்கை இருக்கிறதா? பொறுப்புகள் அனைத்தையும் அவனிடம் ஒப்படைத்து விட்டு பற்றற்ற வாழ்வு உங்களால் வாழ முடியுமா? படைப்புகள் அனைத்தையும் மறந்துவிட்டு படைத்தவன் மீது முழு நம்பிக்கை வைப்பது மிகப் பெரும் பேறு. இந்தப்பேறு உங்களுக்கு எப்போதாகிலும் கிடைத்ததுண்டா? நெஞ்சைத் தொட்டுப்பாருங்கள்.

இந்த மன நிலை இதுவரை உங்களுக்குக் கிடைக்க வில்லை என்றால், இறைவனின் ஆற்றல்களில் உங்களுக்கு முழு நம்பிக்கை இல்லை என்பதே பொருள். ஆனால் இதே காரணம் எல்லா நூல்களிலும் பொருந்துவதில்லை.

உயிரற்ற வெற்றுடல் மீண்டும் உயிர் பெற்று இயங்காது என்று உங்களுக்கு நன்றாக தெரியும். அதில் உங்களுக்கு நம்பிக்கையும் உண்டு. இறைவன் நாடினால் அந்தப் பிணத்திற்கு உயிர் கொடுக்க முடியும். என்றாலும் பெரும்பான்மை அவன் இறந்தவர்களுக்கு உடனுக்குடன் உயிர் கொடுப்பதில்லை. இப்படி இருந்தும் இரவு நேரத்தில் பிணத்துடன் தனித்து இருப்பதற்கு நீங்கள் ஏன் நடுங்குகிறீர்கள்? நான் ஆச்சரியப்படுகிறேன். உயிரும் உடலும் சேர்ந்த ஒரு மனிதனுடன் இரவெல்லாம் தனித் திருந்து உரையாடும் நீங்கள், உயிரற்ற வெற்றுடலுக்கு ஏன் பயப்படுகிறீர்கள்?

கையிலிருக்கும் பேனா நச்சுப் பாம்பாக மாற முடியாதது போல் கட்டிலில் கிடத்தப்பட்டிருக்கும் பிரேதம் உயிர்பெற்று எழ முடியாது என்று உங்களுக்குத் தெரியும். என்றாலும் உங்கள் உள்மனம் உங்களைத் தன் விருப்பப்படி எல்லாம் ஆட்டுகிறது. உங்கள் நடுக்கத்துக்குக் காரணம் மன உணர்ச்சியே தவிர உங்கள் அவ நம்பிக்கையல்ல.

பயங்கரமான படுகொலையைக் கண்டவன் அறுசுவை உண்டியைப் பார்த்து வாந்தி எடுக்கிறான். இதற்கும் மன உணர்ச்சிதான் காரணம்.

சிலர் இறைவனை முழுமனத்துடன் நம்பினாலும் மன உணர்ச்சியின் காரணமாக அவர்களால் முறைப்படிச் செயலாற்ற முடிவதில்லை. எனவே இறைவனைத் தவிர்த்து மற்ற அனைத்தையும் உங்களால் ஒதுக்கித் தள்ள முடியவில்லை என்றால் அதற்கு இத்தகைய மன உணர்ச்சியும் காரணமாக இருக்கக்கூடும்.

நீங்கள் அவனை நம்பினாலும் நம்பாவிட்டாலும், முழு நம்பிக்கைக்குரியவன் இறைவன் ஒருவனே. அவனை நம்பினோர் கைவிடப்படார். உண்மையான பொறுப்பாளியும் அவனே. ஏனெனில் அவன் அதிபதி. மற்ற அனைவரும் அவன் அடிமைகள். அடிமைகளால் நிறை வேற்ற முடியாத பொறுப்பை அதிபதியால் நிறைவேற்ற முடியும்.

4. வழக்கறிஞரும் வல்ல நாயனும்

கட்சிக்காரன் ஒருவன் வழக்கறிஞரை எப்படி நம்புகிறானோ அப்படி இறை நம்பிக்கையாளர்கள் இறைவனை நம்புகிறார்கள் என்று நான் குறிப்பிட்டேன். ஆனால் இறை நம்பிக்கையை இப்படி ஒரே படித்தரத்தில் கட்டுப்படுத்திவிட முடியாது. அதற்குப் பல்வேறு படித்தரங்கள் இருக் கின்றன. குறிப்பாக இறைநம்பிக்கையாளர்களை மூன்று பிரிவினராகப் பிரிக்கலாம்.

முதற் பிரிவினர்: ஒரு கட்சிக்காரனுக்கும் ஒரு வழக் கறிஞருக்குமிடையிலுள்ள தொடர்பு, இந்தப் பிரிவினருக்கும் இறைவனுக்குமிடையில் இருக்கும். கடந்த சில பக்கங்களில் இந்தத் தொடர்பு பற்றிய முழு விவரம் இடம் பெற்றிருக்கிறது. இந்தப் பிரிவினரை மீண்டும் விளக்க வேண்டிய தேவையில்லை என்று நான் எண்ணுகிறேன்.

இரண்டாம் பிரிவினர்: இவர்களின் நம்பிக்கை இன்னும் ஆழமானது. ஒரு குழந்தை தன் தாயை எப்படி நம்புமோ அப்படியே அவர்கள் இறைவனை நம்புவார்கள். தெருவில்

விளையாடிக் கொண்டிருக்கும் குழந்தை சறுக்கி விழுந்ததும் தாயைப் பார்த்து அழுவதுபோல், அவர்கள் தமக்கு ஏற்பட்டிருக்கும் இன்னல்களைத் தவிர்ப்பதற்காக இறைவனை உதவிக்கு அழைப்பார்கள். சர்க்கரை மிட்டாயைச் சுவைக்கும் குழந்தை தன் மகிழ்ச்சியைத் தாய்க்குத் தெரியப்படுத்துவது போல், அவர்கள் தாம் பெற்ற பேறுகள் குறித்து இறைவனுக்கு நன்றி தெரிவிப்பார்கள். தனக்குத் தேவைப்பட்டதை குழந்தை தாயிடம் கேட்பதுபோல், அவர்கள் தம்முடைய தேவைகளை இறைவனிடம் கேட்டுப் பெறுவார்கள்.

குழந்தைக்குத் தாயைத் தவிர்த்து வேறு யாரையும் அவ்வளவாகத் தெரியாது. தாயைத்தான் அது நம்பும். தாயிடம் தான் அது ஒதுங்கும். தாயுடன்தான் அது பழகும். இதே போன்று அவர்கள் இறைவனையே நம்புவார்கள். இறை வனிடமே ஒதுங்குவார்கள். இறைவனுடனேயே பழகுவார்கள்.

எடுத்ததற்கெல்லாம் குழந்தையின் வாயிலிருந்து அம்மா என்ற வார்த்தை வெளி வருவதுபோல் அவர்கள் எடுத்ததற் கெல்லாம் 'அல்லாஹ்' என்ற வார்த்தையை வெளியிடு வார்கள். இது இரண்டாம் படித்தரம்.

முதல் படித்தரத்திற்கும் இரண்டாம் படித்தரத்திற்குமிடை யில் முக்கியமான ஒரு வேற்றுமை உண்டு. முதற்பிரிவினர் இறைவனை நம்பினாலும் தம்மை அவர்கள் கட்டோடு மறந்துவிடுவதில்லை. ஆனால், இவர்கள் தம்மையே மறந்து விடுகிறார்கள். முதற் பிரிவினர் இறைவனை நம்புவதோடு முயற்சிக்கும் மதிப்புக் கொடுக்கிறார்கள். ஆனால் இரண்டாம் பிரிவினர் இறைவனை நம்புவதோடு சொந்த முயற்சியைத் துறந்து விடுகிறார்கள். ஆனால் இறையன்பைப் பெறுவதற்கு மட்டுமே முயற்சி செய்வார்கள். வேறு எந்த முயற்சிக்கும் அவர்களிடம் மதிப்புக் கிடையாது. அனைத்துக்கும் இறைவனின் உதவியைத் தேடுகிறார்கள்-குழந்தை ஒன்று அத்தனைக்கும் தாயின் உதவியைத் தேடுவதுபோல்!

இந்தப் படித்தரத்தைத் தான் சஹ்ல் என்ற பெரியார் தம் உரையாடலில் சுட்டிக் காட்டுகிறார். "இறை நம்பிக்கைக்கு மூன்று படித்தரங்கள் இருக்கின்றன. அவற்றில் நடுத் தரமானது எது?" என்று ஒருவர் கேட்டார்.

சஹ்ல் வெளியிட்ட விடையில் மூன்றே மூன்று வார்த்தைகள் இருந்தன: "முயற்சியையும் உரிமையையும் துறப்பது!"

மூன்றாம் பிரிவினர்: இவர்கள் மற்ற அனைவரையும்விட உயர்ந்தவர்கள். இவர்களின் படித்தரம் முந்திய இரண்டு படித்தரங்களைக் காட்டிலும் மேலானது. "இறை நம்பிக்கையில் மிக உயர்ந்த படித்தரம் எது?" என்று சஹ்ல் வினவப்பட்ட போது அவர் மௌனம் சாதித்தார். விளக்க மறுத்து விட்டார். ஏனெனில் இது விளக்கத்துக்குக் கட்டுப்படாத படித்தரம்.

ஒரு பிரேதத்துக்கும் அதைக் குளிப்பாட்டுகிறவருக்கு மிடையில் எத்தகைய தொடர்பு இருக்கிறதோ அத்தகைய தொடர்பு இந்த மூன்றாம் பிரிவினருக்கும் இறைவனுக்கு மிடையில் இருக்கும்.

பிணம் இயக்கமில்லாத ஒன்று. அதைக் குளிப்பாட்டுகிறவர்தான் அத்தனைக்கும் பொறுப்பாளி. அவர்தான் அதன் முகத்தைக் கழுவவேண்டும். அவர்தான் காலுக்கும் கைக்கும் தண்ணீர் சேர்க்க வேண்டும். குளிப்பாட்டுகிறவர் இல்லை என்றால் பிரேதம் கட்டிலிலேயே கிடக்க வேண்டியதுதான்.

இதே போன்று இந்த மூன்றாம் பிரிவினர் தம் இயக்கம் அனைத்துக்கும் இறைவனே பொறுப்பாளி என்று நம்புகிறார்கள். அவனின்றித் தம்மால் தனித்து இயங்க முடியாது என்பது அவர்கள் உறுதி.

இவர்கள் தம் தேவைகளை இறைவனிடம் கூறி உதவி கோரமாட்டார்கள். இறைவனுக்குத் தெரியாதா அவர்களின் தேவை? தன்னைக் குளிப்பாட்டுமாறு பிரேதம் வாய்திறந்து சொல்வதில்லையே!

இந்தக் கட்டத்தில் நம்மைப் பார்த்து நீங்கள் கேட்கிறீர்கள்; "முதற் பிரிவினரைப் பற்றியும் இரண்டாம் பிரிவினரைப் பற்றியும் நான் ஓரளவு தெரிந்து கொண்டு விட்டேன். ஆனால் இந்த மூன்றாம் பிரிவினர் சம்பந்தப்பட்ட விளக்கம் குழப்பத்தை உருவாக்குகிறது. இப்படி ஒரு சாரார் இருக்க முடியும் என்பதை என்னால் நம்ப முடியவில்லை. விளக்கம் தர முடியுமா?"

உண்மையில் இந்தப் படித்தரம் குழப்பக் கூடியது தான், இதைப்பற்றிய முழு விவரம் 'ஏகத்துவம்' என்ற நூலில்

இடம்பெற்றிருக்கிறது. ஆனால் இத்தகைய மனநிலை கொண்டவர்கள் இருக்கவே முடியாது என்றும் சொல்லிவிட முடியாது. நூற்றுக்கு இருபது முப்பது பேர் இல்லாவிட்டாலும் ஆயிரத்துக்கு ஒருவராவது அவசியம் இருப்பார்கள்.

முதற் பிரிவினரைப் பற்றி நான் ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. அவர்கள் மக்கட்திரளில் அதிகமாக இருப்பார்கள். அவர்களில் நீங்களும் ஒருவராக இருக்கலாம். இரண்டாம் பிரிவினர் அபூர்வமானவர்கள் இவர்களை மக்கட்தொகையில் அதிகமாக எதிர் பார்க்க முடியாது. உங்களைக் குழப்பக்கூடிய மூன்றாம் பிரிவினர் மிக அபூர்வம் என்றாலும் அசாத்தியம் என்றும் சொல்லிவிட முடியாது. தமக்கு எத்தகைய இயக்கமும் கிடையாது என்று நம்பும் இவர்கள் குறைந்தது நாட்டுக்கு ஒருவராவது இருக்கத்தான் செய்வார்கள்.

அப்படியானால் மற்றொரு வினா இங்கு உருவாகிறது: "இறை நம்பிக்கையுள்ளவர்கள் சொந்த முயற்சியையே துறந்துவிட வேண்டியதுதானா?"

இறை நம்பிக்கை என்பது கடல்போன்றது. அதை சரிவர உணர்ந்தவர்கள் மிகச் சிலரே இருக்க முடியும். இதிலுள்ள சிக்கல்களை நீங்கள் எளிதாகக் களைய வேண்டும் என்பதற்காக 'ஏகத்துவம்' என்ற நூலில் தேவையான விவரங்களை நான் எழுதியிருக்கிறேன். அந்த நூலைப் படித்துப் பாருங்கள். அப்புறம் இந்த நூல் உங்களுக்கு மிகத் தெளிவாகப் புரியும். தயவு செய்து இந்த நூலை மேலெழுந்தவாறாகப் படிக்காதீர்கள். இது ஆழ்ந்து படிக்கவேண்டிய நூல். ஏனெனில் இஸ்லாத்தின் தத்துவங்களில் பெரும்பகுதி இதில் இடம் பெற்றிருக்கிறது.

எனவே நீங்கள் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக அடியில் சில விவரங்களை எழுதப்போகிறேன் அந்த விவரங்கள் உங்கள் குழப்பத்துக்கு நல்லதொரு விடையைக் கொடுக்கும் என்று நினைக்கிறேன்.

"இறைவனை நம்பிக்கொண்டு முயற்சி செய்யாமலிருப்பது சரியா?" என்பது உங்கள் வினா. இதில் நியாயமும் இருக்கத்தான் செய்கிறது. கடந்த சில பக்கங்களில் நான் கூறியவை அனைத்தையும் நினைவுபடுத்திக்கொண்டு மேலே படியுங்கள்.

இறை நம்பிக்கைக்கு நான் மூன்று படித்தரங்களை ஏற்படுத்தியிருக்கிறேன். நினைவிருக்கிறதா? இல்லாவிட்டால் அந்தப் பகுதியை மீண்டும் படித்துப் பாருங்கள்.

வழக்கறிஞரைக் கட்சிக்காரன் நம்புவதுபோல் இறை வனை நம்புகிறவர்கள் முதல் படித்தரத்தினர். கட்சிக்காரன் வழக்கறிஞரை நம்பினாலும் எல்லாக் காரியங்களுக்கும் அவரை அவன் பொறுப்பாக்கி விடுவதில்லை. அவர் காட்டிய வழியில் செல்லும்போது அவனுக்கு முயற்சி தேவைப்படு கிறது. அவர் சம்பந்தப் படாத எத்தனையோ காரியங்களை அவன் செய்ய வேண்டியிருக்கிறது. எனவே முதல் படித்தரத் தினர் முயற்சியைத் துறப்பதில்லை. வழக்கறிஞரின் சொல்லை மதித்துக் கட்சிக்காரன் செயலாற்றுவதுபோல் இவர்கள் இறைவனின் கட்டளையை மதித்துச் செயலாற்றுவார்கள். இந்த வழியில் அவர்கள் முயற்சி செய்வார்கள். எனவே இவர்களிடம் இறை நம்பிக்கையும் சொந்த முயற்சியும் இரண்டறக் கலந்து நிற்கின்றன. இவர்கள்குறித்து நீங்கள் குழம்ப வேண்டியதில்லை. சில விஷயங்களுக்கு இறைவனைப் பொறுப்பாளியாக்கும் இவர்கள் வேறு சில காரியங்களுக்குச் சொந்த முயற்சியைப் பயன்படுத்துவார்கள்.

இந்த நம்பிக்கையுணர்வு எவ்வளவு நேரத்திற்கு நீடித்து நிற்கும்? மற்ற இரண்டு நம்பிக்கைகளையும்விட இது அதிக நேரம் நீடித்து நிற்கும். நோயாளியின் முகத்தில் படிந்திருக்கும் மஞ்சள் நிறத்தைப் போல் இந்த நம்பிக்கை நீண்ட நாட்களுக்கு நிலைத்து நிற்கும்.

ஒரு குழந்தை தன் தாயை நம்புவதுபோல் இறைவனை நம்புகிறவர்கள் இரண்டாம் பிரிவினர். இந்த நம்பிக்கை அதிக நேரம் நீடிப்பதில்லை. வெட்க உணர்வு கொண்டவனின் முகத்தில் தோன்றும் வெளிறலைப்போல் இந்த நம்பிக்கை குறுகிய நேரத்தில் மறைந்துபோய் விடும்.

ஆனால் இவர்கள் முயற்சியைத் துறந்து விடுகிறார்கள் என்பது உண்மைதான். சஹ்ல் என்ற பெரியாரும் இதைத் தான் சற்று முன் சுட்டிக் காட்டினார். ஆனால் இவர்கள் கட்டோடு முயற்சியைத் துறந்துவிடுவதில்லை. இறைவனின் அன்பைப் பெறுவதற்கும் அவன் அருளை அடைவதற்கும் அவர்கள் தம் முயற்சி முழுவதையும் செலுத்துவார்கள். வேறு எந்த

முயற்சிக்கும் அவர்கள் மதிப்பு கொடுப்பதில்லை. எனவே இந்தப் படித்தரத்திலும் முயற்சி இருக்கத்தான் செய்கிறது.

நீங்கள் நன்கு கவனித்து பார்க்க வேண்டியது மூன்றாம் படித்தரம். இந்தப் பிரிவினர் முந்திய இரு பிரிவினருக்கும் மாறுபட்டவர்கள். மக்கட் திரளில் இவர்கள் அதிகமாக இருக்க மாட்டார்கள். ஒரு பிரேதத்துக்கும் அதைக் குளிப்பாட்டு பவருக்கு மிடையிலுள்ள தொடர்பு. இவர்களுக்கும் இறைவனுக்குமிடையில் இருக்கும். இவர்கள் தமக்கென்று எத்தகைய இயக்கமும் கிடையாது என்று நம்புகிறார்கள்.

இந்த மனோ நிலை பளிச்சிட்டு மறைந்து போய்விடும் அதிர்ச்சி ஏற்படும்போது ஒரு மனிதனின் முகத்தில் தோன்றும் அறிகுறியைப் போல் இந்த மனோ நிலை மிகக் குறுகிய நேரத்திற்கே நீடிக்கும். இந்தக் குறுகிய நேரத்தில் அவர்களின் நிலை விசித்திரமாக இருக்கும். அப்போது அனைத்தையும் மறந்த போதையில் அவர்கள் இருப்பார்கள். இந்தக் குறுகிய நேரத்தில் அவர்கள் எந்த முயற்சிக்கும் மதிப்புக் கொடுப்பதில்லை. அவர்களால் முயற்சி செய்யவும் முடியாது. தம்மையே மறந்துவிட்ட அவர்கள் வேறு எதைத்தான் மனத்தில் வைத்துக் கொள்ளப் போகிறார்கள்? ஆனால் இந்தச் சூழ்நிலை அதிக நேரம் நீடிக்காது. இந்த நிலைமை மாறியதும் அவர்களிடம் முயற்சி ஏற்பட்டு விடும்.

ஓடியாடி முயற்சி செய்வது மனிதனின் இயற்கை. திடீரென்று தோன்றும் மன நிலையின் காரணமாக அவர்கள் சிறிது நேரத்திற்கு அந்த இயற்கையுணர்வைத் துறந்து விடுகிறார்கள். அவ்வளவுதான்.

5. பெரியோரைப் பற்றி

இறை நம்பிக்கை குறித்துப் பெரியோர் தமது அனுபவங் களை எல்லாம் அடியில் உதிர்க்கிறார்கள். ஒவ்வொருவரின் பேச்சிலிருந்தும் ஒவ்வொரு தத்துவம் தெறிக்கிறது.

"இறை நம்பிக்கை என்றால் என்ன?" என்று அபூ மூஸா தைலமீ வினவினார். வினவப்பட்டவர் அபூ யஸீத் பிஸ்தாமீ.

''அதைப் பற்றி உம் கருத்துத்தான் என்ன? முதலில் அதைச் சொல்லும், அப்புறம் என் கருத்தை நான் சொல்கிறேன்!''

''வலப்புறம் வனவிலங்குகளும் இடப்புறம் நச்சரவங்களும் படை எடுத்தால் கூட மனக்கலக்கம் ஏற்படக்கூடாது. இதுதான் இறை நம்பிக்கை என்று நம் நண்பர்கள் சொல்கிறார்கள்...''

அபூ யஸீதின் விடை அடியில் இடம் பெறுகிறது: "ஒரு விதத்தில் இது சரியான பொருள்தான். இறை நம்பிக்கையாளர்கள் இன்பத்துக்கும் துன்பத்துக்குமிடையிலுள்ள வேற்றுமையை மறந்துவிட வேண்டும். இன்பத்தில் மகிழ்வதும் துன்பத்தில் அலறுவதும் இறை நம்பிக்கையாளர்களுக்கு அழகல்ல. இந்த இரண்டு நிலைகளையும் ஒரே கண்ணோட்டத்துடன் பார்க்க வேண்டும்; அனுபவிக்க வேண்டும். உம்மால் இப்படி நடக்க முடியவில்லை என்றால், உம் உள்ளத்தில் நிச்சயமாக இறை நம்பிக்கை கிடையாது".

அபூ யஸீத் தெளிந்த ஞானமுள்ளவர். பெரும்பான்மை மிக நுண்ணிய கருத்துக்களையே அவர் வெளியிடுவார். இங்கு அவர் தம் வழக்கப்படி மிக ஆழமான தத்துவம் ஒன்றை நமக்குத் தருகிறார். இன்பத்தையும் துன்பத்தையும் படைத்தவன் இறைவன். இவ்விரண்டுமே தேவைதான். எனவே அவை இரண்டையும் ஒரே கண்ணோட்டத்துடன் அனுபவிக்க வேண்டும். உண்மையான இறை நம்பிக்கையாளர்கள் இவ்விரண்டிற்குமிடையில் பாகுபாடு செய்வது கூடாது. அவர்கள் நச்சரவத்துக்கோ வன விலங்குக்கோ பயப்படக் கூடாது; தற்காப்புக்கென்று எத்தகைய முயற்சியும் எடுக்கக்கூடாது.

ஆனால் இது மிக உயர்ந்த படித்தரம். மூன்றாம் படித்தரத்தவர்கள் இப்படி நடக்கலாம். அவர்களுக்குத்தான் அது சாத்தியம் என்றாலும் முதல்படித்தரத்தவர்கள் நச்சரவத்திலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள முயற்சி செய்வது தவறல்ல.

முதல் 'கலீபா' அபூபக்ர் (ரலி) அவர்கள் பெருமானாருடன் ஃதவ்ர் என்ற குகைக்குள் ஒளிந்துகொண்டிருந்த போது பாம்புப் புற்றைத் தம் காலால் அடைத்தார்கள். அபூபக்ரும் பெருமானாரும் மக்காவைவிட்டு மதீனாவுக்குப் போகும் போது இந்தச் சம்பவம் நடந்தது. எதிரிகளின் கண்ணில் படாமல் இருப்பதற்காக அந்தக் குகைக்குள் ஒளியவேண்டி ஏற்பட்டது. இந்த நேரத்தில் அபூபக்ர் முதல் படித்தரத்தில் இருந்திருக்க வேண்டும். பெருமானார் மீது ஏற்பட்டிருந்த பேரன்பும் இதற்குக் காரணமாக இருக்கலாம்.

ஆனால் அவர்கள் நச்சரவம் பற்றியோ, புற்றை அடைத்திருக்கும் காலில் நச்சரவம் தீண்டிவிட்டால் ஏற்படும் விபரீதத்தைப் பற்றியோ கவலைப்படவில்லை. இதனால் இறை நம்பிக்கைக்கு ஒன்றும் பாதகம் கிடையாது.

அபூபக்ர் அவர்கள் உயர்ந்த படித்தரத்தில் உள்ளவர்கள் தான். ஆனால் குகையில் தங்கியிருந்தபோது அவர்கள் முதல் படித்தரத்தை அடைந்திருந்தார்கள் என்றே நான் எண்ணுகிறேன்.

அவர்கள் பாம்புப் புற்றை அடைத்தது உண்மைதான். ஆனால் தம் காலாலேயே அதை அவர்கள் அடைத்தார்கள் என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும். பெருமானாரை நச்சரவத்திலிருந்து காப்பாற்றுவதற்காகத் தம் உயிரையே அபூபக்ர் அவர்கள் அர்ப்பணிக்கத் துணிந்திருக்க வேண்டும்.

இத்தகைய முயற்சிகளால் இறை நம்பிக்கைக்கு எத்தகைய பங்கமும் ஏற்படாது என்பதை உரிய இடத்தில் நாம் ஆராய்வோம்.

அபூ அப்துல்லாஹ் குறஷீ உதிர்த்த முத்து அடியில் மின்னுகிறது. "எல்லா நேரத்திலும் இறைவனுடன் தொடர்பு கொண்டிருப்பதுதான் இறை நம்பிக்கை; உண்மையான நம்பிக்கையாளர்கள் அனைத்துக்கும் இறைவனையே பொறுப்பாளியாக்கிவிட வேண்டும். தனிப்பட்ட பொறுப்புகளையும் கவலைகளையும் விட்டுவிட வேண்டும்!"

எல்லா நேரத்திலும் இறைவனுடன் தொடர்பு கொள்ளுதல்: இது இறை நம்பிக்கையின் மூன்று படித்தரங்களுக்கும் பொதுவானது.

அனைத்துக்கும் இறைவனைப் பொறுப்பாளியாக்கி விட்டுத் தனிப்பட்ட பொறுப்புகளையும் கவலைகளையும் மறந்து விடுவது. இது மூன்றாம் படித்தரத்தவருக்கு மட்டுமே சொந்தமான ஒன்று. மற்றப் படித்தரத்தவர்களால் இப்படி

நிச்சயமாய் நடக்க முடியாது. முதற்படித்தரத்தினர் முயற்சிக்கு மதிப்புக் கொடுப்பவர்கள். எனவே அவர்கள் கவலையைத் துறப்பது சாத்தியமில்லை. இரண்டாம் படித்தரத்தினர் இறையருளுக்கு முயற்சி செய் பவர்கள். இவர்களுக்கும் கவலை இருக்கத்தான் செய்யும்.

ஆகவே, இறைவனையே அனைத்துக்கும் பொறுப்பாளி யாக்குவது மூன்றாம் படித்தரத்துக்கு மட்டும் சொந்தமான மன நிலையாகும். நெருப்புக் குழிக்கு வீசப்பட்ட இப்ராஹீம் நபி இந்தப் படித்தரத்தில்தான் இருந்தார்கள். எனவேதான் வானவர் ஜிப்ரயீல் ஓடி வந்து "என் உதவி தேவையா?" என்று கேட்டபோது அவர்கள், "உமது உதவியா! உமது உதவி எனக்குத் தேவையில்லை!" என்று பதிலளித்தார்கள்.

இப்ராஹீம் நபி இறை நம்பிக்கையின் உச்சியில் இருந்தார்கள். தம் காரியங்கள் அனைத்துக்கும் அவர்கள் இறைவனையே பொறுப்பாளியாக்கியிருந்தார்கள். எனவே ஜிப்ரயீலின் உதவியை அவர்கள் மறுத்துவிட்டார்கள்.

இந்த மனோநிலை எல்லோருக்கும் எல்லா நேரத்திலும் ஏற்பட்டு விடுவதில்லை. இந்த மன நிலை தோன்றுவதே அபூர்வம். அப்படித் தோன்றினாலும் சிறிது நேரத்திற்கு மேல் நீடித்து நிற்பது அதைவிட அபூர்வம். இந்த நிலையில் இருப்பவர்கள் இறைவனைத் தவிர்த்து மற்ற அனைத்தையும் மறந்து விடுவார்கள். மயக்கமும் குழப்பமும் நிறைந்த இந்தப் படித்தரத்தில் அவர்கள் காணும் இன்பம் வருணனைக்கு அப்பாற்பட்டது.

அபூசயீத் இறை நம்பிக்கைக்கு இப்படிப் பொருள் கொடுக்கிறார். "அமைதியற்ற புரட்சி; புரட்சியற்ற அமைதி!" -இந்தக் கருத்து இரண்டாம் படித்தரத்தையே சுட்டிக் காட்டுகிறது. இரண்டாம் படித்தரத்தினர் இறைவனின் பேரன்பை அடைவதற்காகத் தம் மனத்துடன் அமைதியே இல்லாமல் புரட்சிப் போராட்டம் நடத்த வேண்டியிருக் கிறது. இறைவனின் பேரன்பு கிடைத்ததும் அவர்களுக்குப் புரட்சியே இல்லாத அமைதி கிடைக்கிறது-தாயின் அரவணைப்புக்கு வந்துவிட்ட குழந்தைக்கு அமைதி கிடைப்பதுபோல்! தாயின் அரவணைப்பை எண்ணிக் குழந்தை தவிப்பதுபோல் அவர்கள் இறைவனின் பேரன்பை

எண்ணித் தவிப்பார்கள்! எனவே இவர்கள் அமைதியற்ற புரட்சியையும் புரட்சியற்ற அமைதியையும் அனுபவிக்க வேண்டியிருக்கிறது.

இறை நம்பிக்கை குறித்து அறிஞர்களின் கருத்துக்கள் ஏராளமாக இருக்கின்றன. அவை அனைத்தையும் இங்கு எழுதி முடிப்பது தேவையில்லாத ஒன்று. ஏட்டுச் சுவடிகளை மனனம் செய்வதைவிட உள்ளாற்றலைப் பயன்படுத்துவது மிகச் சிறந்தது என்று நான் நினைக்கிறேன். இதுவரை நான் எழுதிவந்தது உங்களுக்குப் போதுமானது என்று நான் எண்ணுகிறேன்.

இறைவனே நேர்மைக்கு வழி வகுப்பவன். அவன் அன்பாளன்; அருளாளன்.

6. செயல் முறைகள்

சாதாரண மனிதர்களுக்கும் இறை நம்பிக்கையாளர் களுக்குமிடையில் வேற்றுமை இருப்பதுபோல் முன்னவரின் செயல்களுக்கும் பின்னவரின் செயல்களுக்குமிடையில் வேற்று மையுண்டு. இறை நம்பிக்கையுள்ளவர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை இங்கு நாம் ஆராய்வோம்.

சொந்த முயற்சியைத் துறந்துவிட்டுக் கிழிந்த துணியைப் போல் போட்ட இடத்தில் கிடப்பதுதான் இறை நம்பிக்கை என்று சிலர் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இறை நம்பிக்கையாளர்கள் உயிரற்ற மரக் கட்டையைப் போல் நடந்து கொள்ள வேண்டும் என்று அவர்கள் தப்புக் கணக்குப் போடுகிறார்கள். இது முற்றிலும் தவறு.

இறை நம்பிக்கையும் முயற்சியும் ஒன்று சேர முடியாது என்று இவர்கள் ஏன் நம்புகிறார்கள் என்று நமக்குத் தெரியவில்லை! இறை நம்பிக்கையின் உச்சியில் நின்ற பெருமானார் எப்படி வாழ்ந்தார்கள் என்பதை இவர்கள் ஆராய்ந்தால் தம் கருத்தை மாற்றிக் கொள்வார்கள் என்று நான் நினைக்கிறேன்.

பெருமானார் முழு நம்பிக்கை கொண்டிருந்தார்கள். இறை நம்பிக்கையை அனைவருக்கும் கற்றுக் கொடுத்த வள்ளலார் அவர்கள். ஆனால் அதற்காக அவர்கள் முயற்சியைத் துறந்துவிடவில்லை. இறை நம்பிக்கையும் சொந்த முயற்சியும் அவர்களிடம் இரண்டறக் கலந்து நின்று காட்சியளித்தன.

மனிதனை இயக்கமுள்ளவனாகவும் முயற்சியுள்ள வனாகவும் இறைவன் படைத்திருக்கிறான். முயற்சியை இறைவனே திருமறையில் பாராட்டியிருக்கிறான். உண்பது, உறங்குவது, பேசுவது நடப்பது முதலிய எல்லாக் காரியங்களுக்கும் அவனைப் பொறுப்பாளியாக்கிவிட்டு வீட்டின் மூலையில் கையைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருப்பது தவறு. இதை இஸ்லாம் மறுக்கிறது. இவ்வாறு முயற்சியை அழிப்பது பெருங்குற்றம்.

எனவே இப்போது நாம் இறை நம்பிக்கையையும் சொந்த முயற்சியையும் ஒருங்கே ஆராய வேண்டும். எது குறித்து இறைவன் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். எது குறித்துச் சொந்த முயற்சியை நம்ப வேண்டும், என்பதை இங்கு நாம் விரிவாக ஆராய்வோம்.

உண்பது, குடிப்பது, உறங்குவது, உழுவது, விற்பனை செய்வது முதலியவை வாழ்க்கையில் ஒவ்வொரு மனிதனுக்கும் ஏற்படக்கூடிய சூழ்நிலைகள். இவற்றில் இறை நம்பிக்கை வைப்பது எப்படி என்று முதலில் ஆராய்வோம்.

பசியோடிருக்கும் உங்களுக்கு முன்னால் உங்கள் மனைவி அறுசுவை உண்டியைக் கொணர்ந்து வைத்திருக்கிறாள். இந்தக் கட்டத்தில் நீங்கள் சொந்த சக்திக்கும் முயற்சிக்கும் வேலை கொடுக்கத்தான் வேண்டும். அப்படிச் செய்யாமல் "நான் முயற்சி செய்வதாவது! ஒரு போதும் முடியாது. நான் இறை நம்பிக்கையுள்ளவன். நான் அசையமாட்டேன், இறைவனே என் பசிக்குப் பொறுப்பாளி. என் முயற்சியின்றியே அவன் என் பசியைத் தணிக்கட்டும்!" என்று நீங்கள் வாதாடினால் அது பைத்தியக்காரத்தனம். இறைவன் பசியைப் படைத்தான். அதற்குரிய உணவையும் படைத்தான். எனவே உணவின்றி உங்கள் பசியை அவன் கண்டிப்பாய்த் தணிக்க மாட்டான்.

உணவின்றி பசி தணிய வேண்டும் என்றோ, உணவு தானாக நகர்ந்துவந்து உங்கள் வாய்க்குள் போக வேண்டும் என்றோ நீங்கள் எதிர் பார்த்தால் அது அறியாமை. இதற்கு இறை நம்பிக்கை என்னும் பெயர் நிச்சயமாய்க் கிடையாது.

நீங்கள் உழுது பயிர் செய்கிறீர்கள். நாற்று நடாமல் கதிர் வளர்வதை எதிர்ப்பார்ப்பது இறை நம்பிக்கையல்ல. இதற்குப் பெயர் மடமை. கலவி இல்லாமல் உங்கள் மனைவியின் வயிற்றில் குழந்தை வளரவேண்டும் என்று எதிர்பார்ப்பதும் இத்தகையதுதான். மர்யம் (அலை) அவர்கள் கலவியிலீலாமல் ஈஸா நபியைப் பெற்றெடுத்தது உண்மைதான். ஆனால் அந்தப் பேறு உங்கள் மனைவிக்கும் கிடைக்க வேண்டும் என்று எதிர்பார்க்காதீர்கள். அப்படி நீங்கள் எதிர்பார்த்தால் 'பித்தன்' என்ற பட்டத்தைப் பொதுமக்கள் பலவந்தமாக உங்களுக்கு சூட்டி விடுவார்கள்.

அப்படியானால் இதுபோன்ற கட்டங்களில் இறை நம்பிக்கை வைப்பது எப்படி?

பசியைப் படைத்த இறைவன் அதற்குரிய உணவையும் படைத்திருக்கிறான். அதை எடுத்து உபயோகிப்பதற்கு கையையும் அதில் இயக்கத்தையும் அவன் படைத்திருக் கிறான். அவன் தான் உங்களுக்கு உணவு கொடுக்கிறான். வேறு எவராலும் உங்கள் பசிக்கு உணவு கொடுக்க முடியாது. இந்த வரிகளை நீங்கள் முதலில் தெரிந்து கொள்ளுங்கள். இதில் நம்பிக்கை வையுங்கள். இதுவும் இறை நம்பிக்கை தான்.

உங்கள் முன்னால் வைக்கப்பட்டிருக்கும் உணவைக் கையால் எடுத்து வாயில் போட்டுச் சாப்பிடுகிறீர்கள் நீங்கள். உங்கள் கை இந்த வகையில் உங்களுக்குப் பெரியதோர் உதவியைச் செய்கிறது.

ஆனால் கையையும் நீங்கள் முழுக்க முழுக்க நம்பிவிடக் கூடாது. எந்த வினாடியும் அது உணர்வற்றுப் போகலாம். அல்லாஹ்வின் சக்திக்கு முன்னால் அது எம்மாத்திரம்! எனவே உங்கள் கரத்தில் ஆரோக்கியத்தையும் இயக்கத்தையும் உண்டாக்கிய இறைவனைப் பாராட்டுங்கள். அவன் நாடினால் எந்த வினாடியும் உங்கள் கையிலுள்ள ஆற்றலைப் பறித்துவிட முடியும் என்று நம்புங்கள். இதுவும் இறை நம்பிக்கைதான்.

எதிரிலிருக்கும் உணவையும் நீங்கள் நம்பிவிடக் கூடாது அதனால் ஏற்படும் விளைவுகள் உங்களுக்குத் தெரியமாட்டா. இறைவன் நாடவில்லை என்றால் எதிரிலிருக்கும் உணவை உங்களால் உட்கொள்ள முடியாது என்று நம்புங்கள். பக்கத்திலிருந்து நச்சரவம் ஒன்று பாய்ந்து வந்தால் உங்களால் என்ன செய்ய முடியும்? உங்களால் அங்கு உட்கார்ந்திருக்கவே முடியாது. அந்தச் சில வினாடிகளில் உங்கள் பசி, ருசி, ஆர்வம் எல்லாம் மறைந்து போய்விடும்!

இப்படி எல்லாம் விபரீதம் ஏற்படாதவாறு இறைவன் காப்பாற்றுகிறான் அல்லவா? இந்த நன்றியுணர்வைத் துறந்து விடாமல் சாப்பிடுங்கள்; குடியுங்கள்; களைப்புத் தீர உறங்குங்கள். இதுதான் இறை நம்பிக்கை. இறை நம்பிக்கையாளர்கள் இப்படித்தான் நடக்க வேண்டும்.

எனவே இத்தகைய மன நிலையை உண்டாக்கிக் கொண்டு, எதிரில் மணம் பரப்பும் உணவைக் கையால் எடுத்துச் சாப்பிடுங்கள். இது இறை நம்பிக்கைக்கு முரண்பட்டதல்ல.

இப்போது நம் பிரச்சினையை வேறொரு கோணத்திலிருந்து ஆராய்வோம்.

மூட்டை முடிச்சுகளுடன் ஓர் ஊரைவிட்டு மற்றோர் ஊருக்குப் பிரயாணப்படுகிறவர்கள் தேவையான அரிசி, கோதுமை, மாவு, ரொட்டி முதலிய எதுவும் இல்லாமல் புறப்பட்டார்கள். இறைவன் மீது முழு நம்பிக்கை கொண்ட அவர்கள் இப்படிப் பிரயாணப்பட்டது அதிசயமல்ல. ஆனால் தேவையான அரிசி, கோதுமையுடன் புறப்படுவதும் குற்றமல்ல. முன்னோரில் பலர் இப்படியும் பிரயாணம் செய்திருக்கிறார்கள். இதனால் இறை நம்பிக்கைக்கு எந்த விதத்திலும் குந்தகம் ஏற்படாது. பிரயாணத்தின்போது சாப்பாட்டு வசதி மிகக் குறைவாக வேயிருக்கும். தேவையான உணவு வகைகள் கைவசமிருந்தால் அவசியம் நேரும்போது உபயோகித்துக் கொள்ளலாம்.

ஆனால் இப்படிப் பிரயாணப்படுகிறவர்கள் அந்த உணவு வகைகளை நம்பிவிடக்கூடாது. இறைவன் மீதே அவர்கள் முழு நம்பிக்கை வைக்க வேண்டும். அவன் அன்பு இல்லையேல் அந்த உணவுப் பொருள்களுக்கு எந்த நேரத்திலும் ஆபத்து ஏற்படக்கூடும்.

என்றாலும் உணவுப் பொருள் இல்லாமல் பிரயாணப் படுவதைத் தவறு என்றும் சொல்லிவிட முடியாது. இறைவன் மீது மங்காத நம்பிக்கையுள்ளவர்கள் இப்படிப் பிரயாணப் படலாம். எனினும் இப்படிப் பிரயாணம் செய்கிறவர்கள் பசியைப் பொறுத்துப் பொறுத்துப் பழகியிருக்க வேண்டும். உணவு கிடைக்காதபோது இலை தழைகளையோ கனிவர்க் கங்களையோ உணவாகக் கொண்டு திருப்தியடையத் தெரிந்திருக்க வேண்டும். இந்தத் தகுதியில்லாதவர்கள் தேவையான உணவுப் பொருள் இல்லாமல் புறப்படக் கூடாது. அப்படிப் புறப்படுவது 'ஹராம்'-பெருங்குற்றம். ஏனெனில் இது தற்கொலைக்கு நிகரான ஒரு செயல்.

இப்படி இறை நம்பிக்கையையே ஆதாரமாக வைத்துப் பிரயாணப்பட்ட முன்னோரில் சிலர் ஊசி, கத்திரிக்கோல், கயிறு வாளி முதலிய அனைத்தையும் சேர்த்து வாரிக் கொண்டு போயிருக்கிறார்கள். உணவுப் பொருள் ஒன்றைத் தவிர்த்து மற்ற அனைத்தையும் அவர்கள் சுமந்து கொண்டார்கள்.

"இந்தப் பொருள்களை எல்லாம் எடுத்துச் செல்வது இறை நம்பிக்கைக்கு முரண்பட்டதல்ல" என்று அவர்கள் கூறினார்கள்.

இதிலும் நியாயம் இருக்கத்தான் செய்கிறது. பிரயாணத்தில் தண்ணீர் வசதி மிகக் குறைவு. நீண்ட பிரயாணத்திற்குப் பிறகு எப்போதாகிலும் ஒரு கிணறு தென்படும். கிணற்றுக் கடியிலுள்ள தண்ணீர் தனக்குத் தானாக மேலேறி வந்து விடுவதில்லையே! போதாததற்கு ஐங்காலத் தொழுகைக்காக வும் தாகத்தைத் தணிப்பதற்காகவும் தண்ணீர் பெரிதும் தேவைப்படும். பசியைப் பொறுத்துக் கொண்டாலும் தாகத்தைப் பொறுத்துக் கொள்ள முடியாது. எனவே அவர்கள் கயிற்றையும் வாளியையும் உடன் எடுத்துக் கொண்டார்கள்.

பெரும்பான்மை அவர்கள் ஒரே துணியுடனேயே பிரயாணம் செய்தார்கள். போக்குவரத்து வசதியில்லாத அந்தக் காலத்தில் பிரயாணம் செய்வதென்றால் பெரிதும் சிரமம் அனுபவிக்க வேண்டியிருந்தது. பிரயாண நடவடிக் கைகளில் துணி கிழிந்து போகக் கூடும். எனவே, ஊசியையும் நூலையும் அவர்கள் சேர்த்துக் கொண்டார்கள்.

ஆனால் அப்போதைய பிரயாணத்திற்கும் இப் போதைய பிரயாணத்திற்குமிடையில் வேற்றுமையுண்டு. போக்குவரத்து வசதிகள் நிறைந்த இக்காலத்தில் மேற் குறிப்பிட்ட எந்தத் தொல்லையும் பிரயாணிக்கு ஏற்படுவ தில்லை. எனவே தற்போதைய சூழ்நிலையில் உணவுப் பொருளோ இதர சாமான்களோ இல்லாமல் பிரயாணப் படுவது இறை நம்பிக்கைக்கு மாறுபடாது.

ஆனால் ஒன்று நிச்சயம், நீங்கள் எத்துணைத்தூரம் தற்காப்பு செய்து கொண்டாலும் நடப்பது நடந்தே தீரும். எனவே உங்கள் சக்திக்கு உட்பட்ட காரியங்களில் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளுங்கள். உங்கள் சக்திக்கு அப்பாற்பட்ட காரியங்களுக்கு இறைவனைப் பொறுப் பாளியாக்கி விடுங்கள்.

ஒரு மலையுச்சிக்கு நீங்கள் செல்கிறீர்கள். சுற்று வட்டாரத்தில் பல மைல்களுக்குத் தண்ணீரின் பெயரையே கேட்க முடியாது. கண்ணுக்கு எட்டிய தூரம் வரை மலைத் தொடர்கள் தெரிகின்றன. நீல விண் திரையையும் வரண்டு போன முரட்டுப் பாறைகளையும் தவிர்த்து வேறு எதுவும் பார்வையில் படவில்லை. விண்ணைத் தொட்டுக் கொண்டிரு க்கும் அந்த மலைக்கு யாரும் வரமுடியாது. எனவே பிறரது உதவியும் கிடைப்பதற்கு வழியில்லை.. கரடு முரடான அதன் பாதை மற்றவர்களை மேலே ஏறவிடாமல் தடுக்கிறது. குரலெடுத்துக் கூப்பாடு போட்டால் எதிரொலிகள், பல வினாடிகள் வரை தொடர்ந்து கேட்கின்றன. ஆனால் கூப்பாட்டுக்குப் பதில் தரக்கூடிய மனித இனம் பல மைல் தூரத்திற்கு இருப்பதாகவே தெரியவில்லை. இப்படி ஒரு சூழ்நிலையைக் கற்பனை செய்து கொள்ளுங்கள்.

இதுபோன்ற ஒரு மலையுச்சியில் உட்கார்ந்து கொண்டு, "இறைவனே! உன் மீது நான் முழு நம்பிக்கை வைத்திருக் கிறேன். சுற்று வட்டாரத்தில் தண்ணீர் கிடையாது. எனவே நீ தான் என் தாகத்தைத் தணிக்க வேண்டும். என்னிடம் அரிசி கிடையாது.. எனவே நீ தான் என் பசியைப் போக்க வேண்டும்!" என்று பிரார்த்திப்பது சுத்தமான முட்டாள்தனம். இது தற்கொலைக்கு நிகரான செயல். எனவே இத்தகைய முயற்சிக்கு மார்க்கத்தில் நிச்சயமாக அனுமதி கிடையாது.

முற்கால பக்தர் ஒருவர் இப்படித்தான் நடந்து கொண்டாராம் அவர் இறை பக்தியுள்ளவர். இறைவன் மீது முழு நம்பிக்கையும் வைத்திருந்தார். ஊரை விட்டுப் புறப்பட்டு வந்த அவர் ஒரு மலையுச்சிக்கு ஏறினார். இறை வணக்கத்து க்கு அதுமிகப் பொருத்தமான இடம் என்று அவருக்குத் தோன்றிற்று. அவ்வளவுதான்; அங்கேயே ஜாகை போட்டு விட்டார்! "நான் யாரிடமும் எதுவும் கேட்கமாட்டேன். என் இறைவன் எனக்குத் தேவையான உணவைக் கொண்டு வந்து தரட்டும்!" என்று சபதம் வேறு செய்து கொண்டார்! ஒரு வாரம் வரை எப்படியோ பல்லைக் கடித்துக் கொண்டு நாட்களை ஓட்டி விட்டார். இதற்கிடையில் அவரது நிலை படு மோசமாகி விட்டது. பலவீனம் உடல் முழுவதும் பரவிற்று. கண்கள் மங்கத்தொடுத்தன.

இதற்கு மேல் அவரால் நின்று வணங்க முடியவில்லை. எனவே உட்கார்ந்தபடி இறைவனை வணங்கினார். இப்படி ஒருவாரம் கழிந்தது. ஆழமான நம்பிக்கையினால்தான் அவரால் இத்தனை நாட்கள் பசியைப் பொறுக்க முடிந்தது. இன்னும் சிறிது நேரத்தில் அவர் இறந்துவிடுவார்போல் தோன்றிற்று. ஆனால், இறைவன் அவருக்காக உணவை ஏந்திக் கொண்டு வரவில்லை! நாலாபுறமும் பார்த்தார். யாரையும் காணவில்லை. செத்து மடிவதைத் தவிர்த்து வேறு வழியேயில்லையா?

வேதனையும் ஏமாற்றமும் பிரார்த்தனையாக வெளிப்பட்டன. "இறைவனே! நான் உயிரோடு இருக்க வேண்டும் என்றால் எனக்குரிய உணவை-எனக்கு நீ பங்கிட்டு வைத்திருக்கும் உணவை என்னிடம் கொண்டுவா! இல்லை யேல் என்னை உன் பக்கம் அழைத்துக் கொள். நான் மரணத்தைத் திருப்தியோடு ஏற்கத் தயாராயிருக்கிறேன்!"

எங்கும் பரவியிருந்த அமைதியைக் கிழித்துக் கொண்டு அசரீரிக் குரல் ஒலித்தது: "உமக்கு நான் நிச்சயமாக உணவளிப் பேன். ஆனால் நீர் இங்கேயே உட்கார்ந்திருக்கக் கூடாது. நீர் பக்கத்திலுள்ள ஊருக்குப் போக வேண்டும்; மக்களோடு மக்களாகப் பழக வேண்டும். இங்கு நீர் உட்கார்ந்திருப்பதைவிட மக்களுக்கு மத்தியில் உட்கார்ந்திருப்பது நல்லது!"

பக்தர் சபதத்தைத் துறந்தார். வேறு வழிதான் எங்கே இருக்கிறது? அவர் தள்ளாடித் தள்ளாடி அடுத்துள்ள

ஊருக்கு வந்தார். அசரீரியின் கட்டளைப்படி ஓர் இடத்தில் உட்கார்ந்து கொண்டார். அந்தப் பக்கம் சென்றவர்களில் சிலர் அவரைப் பார்த்தார்கள். கனிந்த மனம் படைத்த ஒருவர் எதிரில் வந்தார். பக்தர் மீது அவர் பார்வை விழுந்தது. பசியின் முத்திரை அவர் முகத்தில் கோரமாகக் காட்சியளித்தது.

சிறிது நேரத்தில் பக்தருக்கருகில் உணவுத்தட்டு வந்து விட்டது. திருப்தியோடு உட்கொண்ட பிறகு இறைவனுக்கு நன்றி செலுத்தினார் பக்தர்.

மீண்டும் அசரீரிக் குரல் ஒலித்தது. "ஒரு மனிதனுக்கும் மற்றொரு மனிதனுக்குமிடையில் நான் ஆழமான தொடர்பு களை உருவாக்கியிருக்கிறேன். இதில் நான் மறைத்து வைத்திருக்கும் தத்துவங்கள் எண்ணற்றவை. அவற்றை எல்லாம் நீர் உடைத்தெறியத் துணிந்துவிட்டீர். மனிதத்தொடர்பு இல்லாதவாறு என்னிடம் நேரடியாகவே உதவி கேட்டீரல்ல வா? நான் நினைத்தால் அது ஒன்றும் அசாத்தியமல்ல. உம் தேவைகளை என் சக்திக்கரங்களால் முடித்துத்தர முடியும். என் சக்திக்கு அப்பாற்பட்டது எதுவுமில்லை என்றாலும் நேரடியாக உதவி செய்வதைவிட ஒரு மனிதனுக்கு மற்றொரு மனிதன் உதவி செய்வதையே நான் பெரிதும் விரும்புகிறேன்..."

இறைவன் மீது நீங்கள் வைக்கும் நம்பிக்கை எப்படி இருக்க வேண்டும் என்பதை நீங்கள் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே இதை நான் எழுதினேன். இறைவனை எப்படி நம்பவேண்டுமோ அப்படி நம்புங்கள். சொந்த முயற்சியை எப்படிப் பிரயோகிக்க வேண்டுமோ அப்படிப் பிரயோகியுங்கள். வரம்பைக் கடந்துவிடாதீர்கள் அப்புறம் உங்கள் நம்பிக்கைக்கும் முயற்சிக்கும் எத்தகைய மதிப்பும் இருக்காது.

எனவே இறைவனை நம்பிக்கொண்டு முயற்சிகள் அனைத்தையும் இழந்துவிடுவது சரியல்ல. மார்க்கத்தில் இதற்கு அனுமதியில்லை. தவிர இறைவன் மனிதனின் முயற்சிக்கு அபாரமான ஆற்றலைக் கொடுத்திருக்கிறான். இந்த இறையருளைப் பயனின்றிப் பாழ்படுத்துவது மாபெரும் குற்றம். எங்கு முயற்சி செய்யவேண்டுமோ அங்கு முயற்சி செய்யுங்கள். எங்கு இறை நம்பிக்கை கொள்ள வேண்டுமோ அங்கு இறை நம்பிக்கை கொள்ளுங்கள்.

"அப்படியானால் சம்பாத்திய முயற்சியில்லாமல் கையைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருப்பது குற்றமா?" என்று நீங்கள் கேட்கலாம்.

குற்றம் என்று சொல்ல முடியாது. முயற்சி என்பது சிறப்பு மிக்கதாயிருந்தாலும் இறை நம்பிக்கை என்பது அதை விடச் சிறப்பு மிக்கதாயிற்றே! எனவே எல்லா இடத்திலும் முயற்சியைத் துறப்பது குற்றம் என்று தீர்ப்பளித்துவிட முடியாது.

நீங்கள் குறிப்பிட்டிருப்பதுபோல் ஒருவன் சம்பாதிக்கா மல் வீட்டில் உட்கார்ந்து கொண்டு மற்றவர்களின் உதவியை எதிர்பார்ப்பதாகவே வைத்துக் கொள்வோம். இதனால் அவன் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. ஏனெனில் எதிர்பாராத விதத்தில் அவனுக்கு உணவும் பொருளுதவியும் கிடைக்கக் கூடும். ஆனால் இத்தகைய உதவிகள் உரிய நேரத்தில் கிடைப்ப தில்லை. சில சமயம் சற்றுத் தாமதம் ஏற்படுவதும் உண்டு. அதுவரை அவன் பொறுமையோடிருக்க வேண்டும். எனவே இது குற்றமல்ல.

ஆனால் வீட்டு வாசலை அடைத்துத் தாளிட்டுக் கொண்டு "இறைவனே எனக்கு உதவி செய்!" என்று அவன் பிரார்த்தித்தால் அதில் அர்த்தமில்லை. மார்க்கத்தில் அதற்கு அனுமதியில்லை. இந்த முயற்சியைக் குற்றம் எனத் துணிந்து கூறலாம். எனினும், சொந்தச் சம்பாத்தியத்திற்குத் தனிப்பட்ட மதிப்பு எப்போதும் உண்டு.

சிலருடைய உள்ளம் இறைவனைச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருக்கும். அல்லும் பகலும் அவர்கள் இறை வணக்கத் திலேயே மூழ்கியிருப்பார்கள். வீனையும் உறக்கத்தையும் அவர்கள் பொருட்படுத்தமாட்டார்கள். அறுசுவை உண்டி கொடுக்காத இன்பத்தை அவர்களுக்கு இறைவணக்கம் கொடுக்கும். தூக்கத்தில் கிடைக்க முடியாத அமைதி அவர்களுக்கு இறை சிந்தனையில் கிடைக்கும்.

இத்தகையவர்கள் வீட்டின் மூலையில் உட்கார்ந்து கொண்டு இறைவணக்கம் புரிந்தால் தேவையான அனைத்தும் அவர்களுக்குக் கிடைக்கும். இதில் ஒரு தத்துவமுண்டு. வருமானத்தைப் பொருட்படுத்தாதவர்களின் காலடியில்

செல்வங்கள் குவிகின்றன. இதை நீங்களும் அனுபவித்துப் பார்க்கலாம். நீங்கள் அதைத் தேடியலைந்தால் அது உங்களை விட்டு விலகியோடும். அதை நீங்கள் அலட்சியம் செய்தால் அது உங்களைத் தேடிப்பிடிக்கும். ஆனால், உண்மையிலேயே அதை நீங்கள் அலட்சியம் செய்ய வேண்டும். இல்லையேல் இது சாத்தியமில்லை.

உலகில் எத்தனையோ பிரச்சினைகள். அவை அனைத்திலும் அறிஞர்கள் கருத்து வேற்றுமை கொண்டிருக்கிறார்கள். "ஆனால் ஒவ்வொரு மனிதனுக்கும் குறிப்பிட்ட ஆயுள் இருப்பதுபோல் குறிப்பிட்ட வருமானமும் நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது என்ற ஒரே ஒரு விஷயத்தில் தான் அறிஞர்கள் ஏகோபித்த கருத்து வைத்திருக்கிறார்கள்!" என்று இப்னு அப்பாஸ் கூறுகிறார்கள். மனிதனை மரணிக்க வைப்பது இறைவன். மனிதனுக்கு வருமானம் கொடுப்பதும் அவன்தான்.

பெருமானார் கூறுகிறார்கள்: "முறைப்படி நீங்கள் இறை நம்பிக்கை கொண்டால், பறவையினத்துக்கு உணவளிப்பது போல் அவன் உங்களுக்கும் உணவளிப்பான்... அப்புறம் நீங்கள் பிரார்த்தனை செய்தால் மலையே நகர்ந்துவிடும்!"

ஈஸா நபி கூறினார்கள்: "பறவையைப் பாருங்கள். அது உழுவதுமில்லை; அறுவடை செய்வதுமில்லை; நாளைக்கு வேண்டுமே என்று சேமித்து வைப்பதுமில்லை; ஒவ்வொரு நாளும் இறைவன் அதற்கு உணவளிக்கிறான்...."

ஈஸா நபி தொடர்கிறார்கள்: "பாருங்கள், சிந்தித்துப் பாருங்கள். பறவையை விடப் பெரிய வயிறு எங்களுக் குண்டு! என்று நீங்கள் வாதாடினால் மாடு, குதிரை, ஒட்டகம் முதலிய மிருகங்களைப் பாருங்கள். வயிற்றில் மட்டுமல்ல பலத்திலும் உங்களைப் பார்க்கிலும் அவை பெரியவை. அவற்றிற்கு இறைவன் எப்படி உணவளிக்கிறான் என்று எண்ணிப் பாருங்கள்!"

அறிஞர் ஒருவர் கூறினார்: "மனிதர்கள் அனைவருமே இறைவன் அளித்ததைத் தான் சாப்பிடுகிறார்கள். ஆனால் சிலர் மற்றவர்களிடம் கையேந்திச் சாப்பிடுகிறார்கள். வேறு சிலர் வர்த்தக முயற்சியில் சம்பாதித்துச் சாப்பிடுகிறார்கள்."

எனவே நீங்கள் எதற்கும் கவலைப்பட வேண்டியதில்லை. உங்களுக்குக் குறிப்பிட்ட ஆயுட்காலம் இருப்பதுபோல் உங்கள் வருமானத்துக்கும் ஒரு பங்கீடு உண்டு. உங்களுக்குரிய உணவு எப்படியும் உங்களிடம் வந்துவிடும்.

இப்போது வேறொரு கோணத்திற்கு உங்கள் சிந்தனையின் முகத்தைத் திருப்புங்கள்.

வருமானம் தேடுவது குற்றமல்ல. அது இறை நம்பிக்கைக்கு முரண்பட்டதல்ல. ஆனால் கொள்ளை லாபம் சம்பாதிப்பதற்காக மிக நுட்பமான வழியில், பிரவேசிப்பது சரியல்ல. இது எந்த விதத்திலும் இறை நம்பிக்கையில் சேராது. மக்களின் நிலையை எண்ணிப் பார்க்கும்போது நம்மால் வேதனைப் படாமலிருக்க முடியாது. இதுபோன்ற காரியங்களில்தான் அவர்கள் தம் நேரம் முழுவதையும் செலவிடுகிறார்கள்.

மக்களின் இந்த நிலைமைக்கு அடிப்படைக் காரணம் என்ன? பொருளின்மீது அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் பேராசை அவர்களை இப்படியெல்லாம் செயலாற்றத் தூண்டுகிறது. எனவே இதற்குப் பேராசைதான் காரணம். பேராசைக் காரர்களின் உள்ளத்தில் இறை நம்பிக்கைக்கு இடமேது?

இறை நம்பிக்கையாளர்கள் சம்பாத்தியம் செய்யக் கூடாது என்று நீங்கள் தீர்மானித்து வைத்திருந்தால் அந்தத் தீர்மானத்தை உடனுக்குடன் மாற்றிக் கொள்ளுங்கள். ஏனெனில் பெருமானார் இறை நம்பிக்கையாளர்களை அப்படி எல்லாம் வருணிக்கவில்லை.

இதுபோன்ற விரும்பத்தகாத நுண்ணிய முயற்சிகளைத் தான் நாம் அறிஞர் சஹ்லின் கருத்தில் பார்க்கிறோம். அவர் இறை நம்பிக்கைக்கு இப்படிப் பொருள் கொடுத்தார்: "நுண்ணிய முயற்சிகளையும் ஆராய்ச்சிகளையும் துறப்பதுதான் இறை நம்பிக்கை. இதுபோன்ற முயற்சியும் சிந்தனையும் இறைவனுக்கும் மனிதனுக்குமிடையில் திரைகளாகத் தொங்குகின்றன!"

எனவே இங்கு நாம் புதியதொரு விவரத்தைத் தெரிந்து கொள்கிறோம். சில முயற்சிகள் இறை நம்பிக்கையை நொறுக்குகின்றன; வேறு சில முயற்சிகள் இறை நம்பிக்கையுடன் இணைந்து நடைபோடுகின்றன. எனவே

இறை நம்பிக்கைக்குப் பாதகம் ஏற்படாதவாறு முயற்சி செய்வதில் தவறு கிடையாது. நீங்கள் கொண்டிருக்கும் இறை நம்பிக்கை இத்தகைய முயற்சிகளுக்குத் தடை விதிக்காது.

உண்மையான இறை நம்பிக்கையாளர்களைப் பற்றிய வாழ்க்கைக் குறிப்புகள் வரலாற்று ஏடுகளில் குவிந்து கிடக்கின்றன. வரலாற்று நூல்களை ஆராயுங்கள். அவர்கள் எப்படி நடந்தார்களோ அப்படி நடக்க முயற்சி செய்யுங்கள். அவர்கள் உங்களுக்கும் எனக்கும் உலகிலுள்ள அனை வருக்கும் வழிகாட்டிகள். எனவே நாம் கண்ணை மூடிக் கொண்டு அவர்களைப் பின்பற்றலாம்.

அவர்களில் சிலர் அரிசி, கோதுமை, ரொட்டி முதலிய எதுவும் இல்லாமல் மானிட வாடையுமற்ற பகுதிகளில் சுற்றிக் கொண்டிருந்தார்கள். ஏழெட்டு நாட்கள்வரை பட்டினி கிடக்கத் தயாராயிருந்தார்கள். உணவு கிடைக்காத போது கனிவர்க்கத்தின் உதவியால் பசி போக்கவும் அவர்களுக்குத் தெரியும். எதுவுமே கிடைக்காதபோது திருப்தியுடன் மரணத்தை ஏற்கத் துணிந்திருந்தார்கள்.

ஆனால் சாதாரண மனிதர்களால் இப்படி நடக்க முடியாது. இவர்களின் படித்தரம் நம் கற்பனைக்கு அப்பாலுள்ளது. இந்த வழியில் அவர்கள்–அடையும் இன்பம் நம் சிந்தனைக்கு மேலேயுள்ளது. இவர்கள் ஒரு சாரார்.

வேறு சிலர் தம் வீட்டிலோ பள்ளி வாசலிலோ அமைதி யாக உட்கார்ந்து கொண்டு இறைவணக்கம் புரிந்தார்கள். உணவுக்கும் வருமானத்துக்கும் இவர்கள் எந்த முயற்சியும் செய்வதில்லை. போவோரையும் வருவோரையும் தொல்லைப் படுத்துவதுமில்லை. யாரேனும் உதவி செய்தால் திருப்தியுடன் பெற்றுக் கொள்வார்கள்; யாரேனும் அழைப்புக் கொடுத்தால் விருந்துக்குப் போவார்கள். இவர்கள் வேறொரு சாரார்..

மற்றும் சிலர் மனிதவாடையற்ற வனங்களில் சுற்றித் திரிவதுமில்லை; கையைக் கட்டிக் கொண்டு வீட்டில் உட்கார்ந் திருப்பதுமில்லை. 'பொருளீட்டும் முறை' என்ற நூலில் நான் விவரித்ததுபோல் அவர்கள் வெளியில் சென்று வாணிபம் செய்தார்கள். அவர்கள் இறைவனை நம்பினார்களே தவிர, கை யிலுள்ள சரக்கையோ மூலதனத் தையோ சிறிதும் நம்பவில்லை.

ஏனெனில் சரக்குக்கும் மூலதனத்துக்கும் ஆபத்து ஏற்படுவது சாத்தியமே. எனவே இவர்களும் இறை நம்பிக்கை யாளர்கள்தாம். ஆனால் ஒரு நிபந்தனை; அவர்கள் சரக்கையும் மூலதனத்தையும் முழு மனத்துடன் நம்பிவிடக் கூடாது.

எழுத்தாளனின் கரத்தில் எழுதுகோல் கட்டுண்டிருப் பது போல் இறைவனின் சக்திக்கரத்தில் அனைத்துமே கட்டுண்டிருக்கின்றன என்று அவர்கள் நம்ப வேண்டும். எழுது கோலுக்குத் தனிப்பட்ட இயக்கம் இல்லாதது போல் சரக்குக்குப் பிரத்தியேக இயக்கம் இல்லை என்பதை அவர்கள் உணர வேண்டும். மிகப் பெரும் வர்த்தக ஸ்தாபனங்கள் எல்லாம் எப்படிப் பாழாயின என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்த்தால் இதிலுள்ள உண்மை தெரியும்.

வியாபாரத்திற்கு மூலதனம் தேவைதான். இறைவனின் பேரருள் மட்டும் என்ன? அதுவும் தேவைதான். ஏனெனில் மூலதனம் இருந்தால் மட்டும் வியாபாரத்தில் முன்னேறிவிட முடியாது. வர்த்தக நடவடிக்கைகளில் எளிதில் தெரிந்து கொள்ள முடியாத எத்தனையோ ஆபத்துக்கள் மறைந்திருக் கின்றன. அவற்றை உங்களால் தவிர்க்க முடியாது. அது மனிதனுக்குச் சாத்தியமில்லை. அந்த ஆபத்துக்களைக் களைந்தெறிவது மனிதனுக்குச் சாத்தியமாயிருந்தால், ஆரம்பிக் கப்பட்ட எந்த ஸ்தாபனமும் தோல்வியைக் கண்டிருக்க முடியாது! எனவே இது போன்ற ஆபத்துக்களைத் தடுப்பதற்கு இறைவனின் உதவி தேவைப்படுகிறது. இதனால்தான் நான் சொல்கிறேன்- மூலதனத்தைப் பொருட்படுத்தாமல் இறைவன் மீது முழு நம்பிக்கை வையுங்கள் என்று! கையிலிருக்கும் மூலதனமும் சரக்குகளும் திருட்டுப் போகக்கூடும்!

ஆகவே, இறைவன் மீது முழு நம்பிக்கை வைத்துக் கொண்டு சம்பாத்திய முயற்சிகளில் ஈடுபடுவது குற்றமல்ல. முதல் 'கலீபா' அபூபக்ர் (ரலி) அவர்களின் வாழ்க்கையில் நடந்த சம்பவம் ஒன்று இதற்குப் பெரிதும் ஆதரவு தருகிறது.

முஸ்லிம் பெருங்குடி மக்களை ஆட்சிபுரிவதற்காக அபூபக்ர் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தார்கள். இது மாபெரும் பொறுப்பு. பொழுது திரும்பிற்று. அவர்கள் கடைத்தெருவுக்கு வந்தார்கள். தம்மிடமிருந்த துணிகளையும் இரும்புக் கவசங்களையும் விலை கூறினார்கள்.

நண்பர்களில் சிலர் இதை வெறுத்தார்கள். "ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கும் தாங்கள் இப்படி எல்லாம் செய்யலாமா?" என்று கே ட்டார்கள்.

கலீபாவின் விடை கணிசமான அளவுக்கு இருந்தது. "என் மனைவி மக்களின் பொறுப்பை நான் துறக்க முடியாது. அவர்களையே நான் சரிவரக் காப்பாற்றவில்லை என்றால் மற்றவர்களை என்னால் எப்படிக் காப்பாற்ற முடியும்? பதவி ஏற்றிருக்கும் நான் முன்னைவிட அதிக அக்கறையுடன் நடந்து கொள்ள வேண்டாமா?"

இங்கு நீங்கள் சற்று ஆராய வேண்டும். அபூபக்ர் அவர்களின் உள்ளத்தில் இறை நம்பிக்கை கிடையாது என்று உங்களாலும் சொல்ல முடியாது. என்னாலும் சொல்ல முடியாது. அவர்களுக்கு இறை நம்பிக்கை இல்லை என்றால் வேறு யாருக்குத்தான் அது இருக்கப்போகிறது? பெருமானாருக்கு அடுத்தபடியாக அவர்கள் அசையாத இறை நம்பிக்கையையும் பெற்றிருந்தார்கள். அதனால்தான் அவர்கள் ஆட்சிப் பொறுப்பைப் பெற்றார்கள். இறை நம்பிக்கையுள்ள முஸ்லிம் பெருங்குடி மக்களை இறை நம்பிக்கையற்ற ஒருவரால் ஆட்சி புரிய முடியாது.

இப்படியிருந்தும் அவர்கள் சம்பாத்திய முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். இதை வைத்துப் பார்க்கும்போது, இறை நம்பிக்கையாளர்கள் கட்டோடு முயற்சியைத் துறக்க வேண்டியதில்லை என்று நமக்குத் தெரிகிறது.

அபூஜஅபர் ஹத்தாதைப் பற்றி நீங்கள் நிறையப்படித் திருப்பீர்கள். இவர் யார் தெரியுமா? ஜனைதுல் பக்தாதியையே நான் இப்படிக் குறிப்பிடுகிறேன். அவருக்கு இப்படியும் ஒரு பெயர் இருந்தது. அவருடைய இறை நம்பிக்கை மிக உயர்ந்தது. அவர் கூறிய பொன்மொழிகள் தெய்வீகத் துறைக்குப் பெரிதும் துணை புரிகின்றன.

இதோ ஜனைத் பேசுகிறார்; நீங்களே கேளுங்கள்: "என் உள்ளத்தில் பொங்கிக் கொண்டிருந்த இறை நம்பிக்கையை நான் இருபது ஆண்டுகள் வரை மறைத்து வந்திருக்கிறேன். அந்த இருபது ஆண்டுகளும் நான் கடைவீதியில் தான் இருந்தேன். தினம் எனக்கு இரண்டரை ரூபாய் வருமானம் கிடைத்தது-"

ஆனால் எல்லோருக்கும் ஒரே விதமான சூழ்நிலை அமைவதில்லை. வியாபாரத்தில் தலையிடும் சிலர் இறை வணக்கத்தையே மறந்து விடுகிறார்கள். பொழுது முழுவதும் வியாபாரத்தைப் பற்றியே எண்ணிக் கொண்டிருப்பதால் அவர்களால் இறைவணக்கத்தை எண்ணியும் பார்க்க முடிவதில்லை. பகல் நேரத்தை வியாபார நடவடிக்கைகளில் கழித்து விடுவதால் இரவு வந்ததும் அவர்கள் களைத்துப் போய்ப் படுக்கையில் விழுந்து பிணமாகி விடுகிறார்கள்.

இத்தகையவர்கள் வியாபாரம் செய்யக் கூடாது. இறை வணக்கத்துக்குக் குறுக்கே நிற்கும் எதையும் இஸ்லாம் அனுமதிக்காது. ஆனால் கடையை மூடிவிட்டு மற்றவர்களிடம் யாசகம் கேட்பதும் சரியல்ல. எனவே வியாபாரத்தைவிட்டு விட எண்ணுகிறவர்கள் ஒன்று போதிய வசதியுள்ளவர்களாக இருக்க வேண்டும். அல்லது இறைவன் மீது முழு நம்பிக்கை வைத்துப் பொறுமையோடிருக்கப் பழகியவர்களாக இருக்க வேண்டும்.

சுருக்கமாகச் சொல்வதானால், இறை நம்பிக்கை யாளர்கள் இறைவனைத் தவிர்த்து வேறு எதன் மீதும் பற்றுதல் கொள்ளக் கூடாது எனலாம்.

ஆதாரம் வேண்டுமா? இதோ அறிஞர் ஒருவரின் கருத்து நம் வாதத்துக்கு ஆதரவு தருகிறது. அவர் பல ஊர்களைச் சுற்றிப் பார்த்தவர். பிரயாணத்தில் அவர்கண்ட அதிசயம் ஒன்றை இங்கு விளக்குகிறார்: "ஒரு தடவை நான் கில்ரு (அலை) அவர்களைக் கண்டேன். என்தொடர்பை அவர்கள் பெரிதும் விரும்பினார்கள். ஆனால் அவர்கள் மீது பற்றுதல் ஏற்பட்டு விடுமோ என்ற அச்சத்தால் நான் பிரிந்து வந்து விட்டேன். அவர்கள் மீது நான் பற்றுதல் கொண்டிருந்தால் அது என்னுடைய இறை நம்பிக்கைக்குக் களங்கம் கற்பித்து விடும்!"

-உண்மையான துறவிகளின் மன நிலை எப்படி இருக்கும் என்ற விவரம் இங்கு வெகு விநயமாகச் சுட்டிக் காட்டப்படுகிறது.

'பொருளீட்டும் முறை' என்ற நூலில் நான் எழுதியிருக்கும் விவரங்களை மீண்டும் ஒரு தடவை படித்துப் பாருங்கள். வியாபாரம் செய்வது எப்படி, மார்க்கத்திற்கு முரண்படாதவாறு வர்த்தக நிலையத்தை முன்னுக்குக்

கொண்டு வருவது எப்படி, வியாபாரிகள் கவனிக்க வேண்டிய நிபந்தனைகள் யாவை என்பன போன்ற எல்லா விவரங்களையும் அதில் நான் எழுதியிருக்கிறேன்.

அந்த முறையை யொட்டி நீங்கள் வியாபாரம் செய்தால் அதில் யாரும் குறை சொல்ல முடியாது. ஆனால் அப்படி நடப்பது மிகச் சிரமமான ஒன்று என்பதையும் நீங்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். இத்தகைய வியாபாரம் எந்த விதத்திலும் இறை நம்பிக்கைக்கு முரண்படாது.

ஒரு மனிதனிடம் இறை நம்பிக்கை இருக்கிறதா, இல்லையா என்று எப்படித் தெரிந்து கொள்வது? அதற்கு ஏதேனும் வழியுண்டா?

நிச்சயமாக உண்டு. சிறந்து விளங்கிய உங்கள் வர்த்தக நிலையம் சீர் குலைந்தாலும், திரண்ட செல்வம் கொள்ளை யடிக்கப்பட்டாலும் நீங்கள் கவலைப்படக் கூடாது. இதனால் உங்கள் அமைதிக்குப் பாதகம் ஏற்படக் கூடாது. இப்படி நீங்கள் நடந்து கொண்டால் உங்களிடம் இறை நம்பிக்கை இருக்கிறது என்று அர்த்தம்.

வாழ்க்கை என்பது வெற்றிகளாலும் தோல்விகளாலும் உருவான ஒரு கூட்டுப் பொருள். எனவே, மனிதனின் வாழ்க்கையில் இந்த இரண்டும் அவசியம் இருக்கும். சில வேளை வெற்றியடையும் அவன் வேறு சிலவேளை தோல்வியடைகிறான். ஒரு சமயம் வியாபாரத்தில் லாபம் அடையும் மனிதன் மறு சமயம் அதில் இழப்பைக் காண்கிறான்.

வெற்றியும் தோல்வியும், லாபமும் இழப்பும் இறைவனின் தீர்ப்புகள். அவற்றை வேறு எவராலும் மாற்றியமைக்க முடியாது. எனவே இறை நம்பிக்கையாளர்கள் வெற்றியையும் தோல்வியையும் ஒரே விதமான மன நிலையுடன் அனுபவிக்க வேண்டும். இறைவனின் பேரன்பை அவர்கள் நம்ப வேண்டுமே தவிர, வியாபார நடவடிக்கைகளில் தோன்றி மறையும் சூழ்நிலைகளை நம்பக் கூடாது.

நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? "மூலதனத்தைப் போட்டுச் செயலாற்றும் ஒருவன் கைவசமுள்ள சரக்குகளை நம்புவது இயற்கை. அந்த இயற்கையை எப்படி மாற்றுவது?" என்று கேட்கிறீர்களா?

கேளுங்கள்: வியாபாரத்திற்கும் வருமானத்திற்கும் சரக்குகள் தேவைதான்; நான் மறுக்கவில்லை. ஆனால் எந்த மூலதனமும் இல்லாமல், எந்தச் சரக்கும் இல்லாமல் எத்தனையோ பேர் இந்த உலகில் உயிர் வாழ்கிறார்கள் என்பதை எண்ணிப் பாருங்கள். இறைவன் சர்வசக்தன். அவன் நாடினால் மூலதனமேயில்லாமல் மனிதனுக்கு வருமானத்தைக் கொடுக்க முடியும். அப்படித்தானே அவன் அனேகருக்கு வருமானம் கொடுக்கிறான். இந்தப் பரந்த உலகில் வியாபாரிகளைவிட, தொழிலாளிகளைவிட வேலையற்றவர் களே அதிகமாக இருக்கிறார்கள். அவர்கள் எப்படி வாழ்கிறார்கள் என்று தயவு செய்து எண்ணிப் பாருங்கள்.

பெரிய மூலதனம் போட்டு வியாபாரம் செய்யும் எத்தனையோ பேர் குறுகிய காலத்தில் அனைத்தையும் இழந்து விடுகிறார்கள். எண்ணிப் பாருங்கள். எனவேதான், "செல்வத்தையும் வறுமையையும் ஒரே வித மன நிலையுடன் அனுபவியுங்கள்" என்று நான் சொல்கிறேன்.

"தூக்கத்திலிருந்து கண் விழிக்கும் போது நான் இருக்கும் நிலையைப் பற்றிக் கவலைப்படுவதில்லை. வறிய நிலையானாலும். செல்வ நிலையானாலும் நான் ஏற்றுக் கொள்கிறேன். அவற்றை நான் பொருட்படுத்துவதில்லை. ஏனெனில் இவற்றில் எது எனக்கு நன்மை தரவல்லது என்று எனக்குத் தெரியாது!" என்று உமர் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்.

நீங்கள் இப்படியெல்லாம் நடக்க வேண்டும். இந்த மனப்பக்குவம் இன்னும் உங்களுக்கு ஏற்படவில்லை என்றால், உங்கள் இறை நம்பிக்கை இன்னும் பூரணமடையவில்லை என்பதே பொருள். இந்த மன்ப் பக்குவத்தை அடைவதற்கு முயற்சி செய்யுங்கள்.

ஆனால் இந்த மனப்பக்குவத்தை அடைவது அப்படி ஒன்றும் இலகுவான காரியமல்ல என்பதையும் நான் ஒப்புக் கொள்கிறேன். சிறந்த மேதைகள் கூட இந்த நிலையை அடையவில்லை என்று நான் நினைக்கிறேன்.

அபூ சுலைமான் தாராணீ என்பவர் சிறந்த மேதைகளில் ஒருவர். ஆனால் அவரது வேதனையை நீங்களே பாருங்கள்.

"இறை நம்பிக்கையின் படித்தரங்கள் பலவற்றையும் நான் அனுபவித்தேன். இந்த படித்தரம் ஒன்றுதான் எனக்கு இன்னும் கிடைக்கவில்லை; அதன் வாடையையும் நான் முகர்ந்து பார்க்கவில்லை!" என்கிறார் அபூசுலைமான். அவர் பல படித்தரங்களைக் கடந்தவர்தாம். ஆனால் அவர் கடைசிப் படித்தரத்தின் வாடையையும் அனுபவிக்கவில்லை. ஏனெனில் இதை அடைவது மிகச் சிரமமான வேலை. அபூசுலைமான் போன்ற மேதைகளே அடைய முடியாத ஒன்றைச் சாதாரண மனிதர்களால் எப்படி எளிதில் அடைய முடியும்? ஆனால் அது உங்களுக்குச் சாத்தியமில்லை என்றும் சொல்லிவிட முடியாது. எளிதில் அடைவது சாத்தியமில்லை; அவ்வளவுதான்.

இறைவன் மீது பொதுவாக எல்லோருக்கும் நம்பிக்கையுண்டு. அவனை யாரும் நம்ப மறுப்பதில்லை. நாத்திகனும் இக்கட்டான நேரத்தில் இறையருளை எதிர்பார்க்கத்தான் செய்கிறான்; அவன் மீது நம்பிக்கை வைக்கத்தான் செய்கிறான்.

ஆனால் அந்த இறை நம்பிக்கை முழு உருவத்துடன் தோன்ற வேண்டுமானால் மேற்கொண்டு சில விவரங்களை நம்ப வேண்டும். அகில மனைத்திலும் நீக்கமற நிறைந்து நின்று அனைத்தையும் இயக்குகிறவன் இறைவன் ஒருவனே என்பதை நீங்கள் நம்ப வேண்டும். வாழ்க்கையில் தோன்றி மறையும் இன்பமும் துன்பமும், வெற்றியும் தோல்வியும் மனிதனுக்குப் பயன்தரவல்லவை என்பதை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும், இப்படியெல்லாம் நீங்கள் நம்ப வில்லை என்றால் உங்கள் உள்ளத்தில் முழு இறை நம்பிக்கை ஏற்பட முடியாது.

உங்கள் நம்பிக்கையைப் பற்றியும் என் நம்பிக்கையைப் பற்றியும் நான் எதுவும் சொல்லத் தயாராயில்லை. ஆனால் நமது முன்னோர் நமது நம்பிக்கையைவிட மிக ஆழமான நம்பிக்கையைப் பெற்றிருந்தார்கள் என்பதை மட்டும் நாம் சற்று நினைவு கூர வேண்டும். இதற்கு வரலாற்று ஏடுகள் ஆதாரம் தருகின்றன. நம்மைப் போன்ற மனிதர்கள் தாம் அவர்களும். நம்மைப் போலத்தான் அவர்களும் உண்டார்கள். உறங்கினார்கள்; செயலாற்றினார்கள்.

ஆனால், அவர்களின் இறை நம்பிக்கை எவ்வளவு ஆழமானது! இறைவன் மீது அவர்கள் கொண்டிருந்த பற்றுதல் எத்துணை வலிமையானது!

வரலாற்றிலிருந்து சில வரிகளை நாம் அடியில் பார்ப்போம். பக்தர் ஒருவர் ஒரு பள்ளிவாசலில் முகாமிட்டிருந்தார். அது அவருக்குப் புதிய இடம். எனவே அவருக்கு அறிமுகமான யாரும் அங்கு இல்லை.

பள்ளி வாசலில் அவர் முகாமிட்டிருப்பதைப் பள்ளியின் தலைவர் பார்த்தார். "வெறுமனே உட்கார்ந்திருக்கிறீர்களே! ஏதேனும் சம்பாத்திய முயற்சியில் ஈடுபடக்கூடாதா?" என்று கேட்டார். சம்பாத்தியமில்லாமல் யாரும் உயிர் வாழ முடியாது என்று அவர் எண்ணியிருக்க வேண்டும்.

பக்தர் உடனுக்குடன் பதில் கொடுக்கவில்லை. வெகு நேரத்திற்குப் பிறகு அவரது விடை கணீரென்று ஒலித்தது. "இந்தப் பள்ளிவாசலுக்கு அண்மையில் ஒரு மனிதர் இருக்கிறார். தினம் இரண்டு ரொட்டிகள் வீதம் அவர் எனக்குக் கொடுத்து வருகிறார்!"-பக்தரின் விடையில் கிண்டலும் கேலியும் போட்டியிட்டன.

பள்ளியின் தலைவர் திருப்தியடைந்தார். "அப்படியானால் சரி, பேச்சேயில்லை. உங்கள் பசிக்கு அவர் பொறுப்பாளியாக இருக்கிறார். எனவே நீங்கள் சம்பாதிக்க வேண்டியதில்லை!"

பக்தர் வெறுப்புடன் ஏறிட்டுப் பார்த்தார்; அவர் கண்களில் இளக்காரம் சிரித்தது. "என்ன சொன்னீர்? ஏகத்துவத்தை நம்பும் நீரா இப்படிப் பேசுகிறீர்? மனிதனுடைய பசிக்கு மற்றொரு மனிதனா பொறுப்பாளி? உம்முடைய ஏகத்துவக் கொள்கை சரியில்லை. தொழுகையை நடத்தும் பொறுப்பை நீர் எப்படி ஏற்றுக் கொண்டீர்? அதைத் துறந்து விடுவதுதான் நல்லது..."

வரலாற்றிலிருந்து மற்றொரு துண்டு: அணி வகுப்புத் தொழுகையை நடத்தும் தலைவர் ஒருவர் ஒரு பக்தரைப் பார்த்து, "நீங்கள் எப்படி, எங்கிருந்து சாப்பிடுகிறீர்கள்?" என்று கேட்டார்.

பக்தர் விடையளித்தார். "பெரியவரே! உங்களுக்குப் பின்னால் நின்று நான் தொழுகையை நிறைவேற்றியிருக்கிறேன்; அந்தத் தொழுகை வீணாகிவிட்டது என்று இப்போதுதான் தெரிகிறது. எனவே இப்போது நான் மீண்டும் தனிப்பட்ட முறையில் தொழப்போகிறேன். அதற்குப் பிறகு உங்கள் கேள்விக்குப் பதில் தருகிறேன்!"

உங்கள் மனத்தில் குழப்பம் வட்டமிடுகிறது என்றால்- உங்கள் இறை நம்பிக்கை வலுக்குன்றி வருகிறது என்றால் இது போன்ற வரலாறுகளைப் படியுங்கள். மனிதனுக்கு இறைவன் எப்படியெல்லாம் உணவளிக்கிறான் என்பதையும் சீரோங்கி வளர்ந்த வர்த்தக நிலையங்களை அவன் எப்படியெல்லாம் தரைமட்ட மாக்குகிறான் என்பதையும் நன்கு ஆராயுங்கள்; நிறைந்த செல்வம் பெற்ற எத்தனையோ பேர் கொடிய பசியால் வேதனைப்பட்டிருக்கிறார்கள் என்பதைச் சிந்தித்துப் பாருங்கள்.

உங்கள் மனோவியாதியைப் போக்குவதற்கு இதைவிடச் சிறந்த வழியை என்னால் உங்களுக்குக் காண்பிக்க முடியாது.

துறவி இப்றாஹீம் பின் அத்ஹம் அவர்களைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். அவர்களைப் பற்றிய வரலாற்றுத் துணுக்கு அடுத்து வருகிறது.

துறவி இப்றாஹீம் அவர்களுக்கு ஹுதைபா என்பவர் பணி புரிந்து வந்தார். ஹுதைபாவிடம் யாரோ ஒருவர் வினவினார்: "நீர் கண்டவற்றில் அதிசயமான ஒன்றைச் சொல்ல முடியுமா?"

"நான் கண்டவை எல்லாமே எனக்கு அதிசயங்களாகவே தோன்றுகின்றன!" என்றார் ஹுதைபா. "நானும் இப்றாஹீம் அவர்களும் ஒரு சமயம் மக்காவுக்குச் செல்லும் வழியில் பல நாட்கள் தங்கினோம். இதில் அதிசயம் என்ன தெரியுமா? எங்களிடம் சிறிதளவும் உணவுப் பொருள் கிடையாது!"

இது அற்புதம்தான். இறைவனின் ஆற்றலை அறியாதவர் களுக்கு இது அசாத்தியமாகவும் தோன்றலாம். ஆனால் இதைவிடப் பெரிய அற்புதங்களை ஹுதைபா கண்கூடாகப் பார்த்தார்.

அப்புறம் அவர்கள் இருவரும் கூபாவுக்கு வந்தார்கள்; பாழடைந்த பள்ளிவாசல் ஒன்றில் முகாமிட்டார்கள். இப்றாஹீம் பின் அத்ஹமின் பார்வை ஹுதைபாவின் மன நிலையை எடை போட்டது.

"ஹுதைபா! பசியின் முத்திரை உம் முகத்தில் தெரிகிறதே?"

"தாங்கள் சொன்னால் சரிதான்!" என்றார் ஹுதைபா.

சற்றுநேரம் பாழடைந்த பள்ளிவாசல் அமைதியில் குளித்தது. "அப்படியானால் காகிதத்தையும் மைக்கூடு-பேனாவையும் கொண்டுவாரும்!"

துறவியார் காகிதத்தில் இப்படி எழுதினார்கள்: "அல்லாஹ்வின் திருப்பெயரால் ஆரம்பிக்கிறேன். அவன் அளவற்ற அருளாளன்; இணையற்ற அன்பாளன். இறைவனே! நீதான் எல்லோருக்கும் குறிக்கோள். நான் உன்னைப் பாராட்டு கிறேன்; உன் அன்புக்கு நன்றி செலுத்துகிறேன்; உன்னை எப் போதும் எண்ணுகிறேன். இந்த மூன்றுக்கும் நான் பொறுப் பாளி. இவற்றை நான் முறைப்படி நிறைவேற்றி வருகிறேன். நான் பசியுடனிருக்கிறேன்; நேரத்தை வீணாக்குகிறேன்; துணியின்றி அவதிப்படுகிறேன். இந்த மூன்றுக்கும் நீ பொறுப்பாளியாயிரு. உன் உதவியை நான் எதிர்பார்க்கிறேன். உன்னைத் தவிர்த்து வேறு யாரையும் என்னால் பாராட்ட முடியாது-"

கருத்தடங்கிய அந்தக் காகிதம் ஹுதைபாவிடம் ஒப்படைக்கப்பட்டது. "இதைக் கொண்டுபோய் வழியில் எதிர்ப்படும் முதல் மனிதனிடம் கொடுத்துவிடும்!" என்று கட்டளை பிறந்தது.

ஹுதைபா நடந்து கொண்டிருந்தார். எதிரில் ஒரு கோவேறு கழுதை வந்தது. அதன் மேல் ஒருவர் உட்கார்ந் திருந்தார்.

துறவியாரின் கடிதம் அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அவர் சிறிது நேரம் அந்தக் காகிதத்தைக் கண்கொட்டாது பார்த்தார். அவரது கண்கள் கண்ணீரைக் கக்கின. 'இதை எழுதியவர்கள் எங்கே இருக்கிறார்கள்?'.

ஹுதைபா பதிலளித்தார்: "சற்றுத் தூரத்திலிருக்கும் பாழடைந்த பள்ளிவாசலில் தங்கியிருக்கிறார்கள்!"

கழுதைப் பிரயாணி ஒரு பையைக் கொடுத்தார் அதில் ரூ. 1500 இருந்தது!

ஹுதைபாவுக்கு தம் கண்களையே நம்ப முடியவில்லை. யார் அந்தப் பிரயாணி? வழியில் சென்று கொண்டிருந்த ஒருவரிடம் விசாரித்ததிலிருந்து அந்தப் பிரயாணி ஒரு

கிறிஸ்தவர் என்று தெரிந்தது. ஹுதைபா பணப்பையுடன் துறவியிடம் வந்தார்; நடந்ததைச் சொன்னார்; விசாரித்து அறிந்ததைக் கூறினார்.

துறவியார் அமைதியுடன் பேசினார்கள். "அந்தப் பையை அப்படியே வைத்துவிடும். அந்த மனிதர் அடுத்தவினாடி இங்கு வருவார்!"

யாரோ நடந்துவரும் காலடியோசை கேட்டது. இருவரும் ஏறிட்டுப் பார்த்தார்கள். அந்தக் கிறிஸ்தவர் எதிரில் நின்று கொண்டிருந்தார்!

வரலாற்றிலிருந்து வேறொரு துண்டு அடியில் இடம் பெறுகிறது. அபூ யஅகூப் பத்து நாட்கள் பசியோடிருந்தார். இந்தப் பத்து நாட்களும் அவர் மக்காவின் பள்ளி வாசலில் தங்கியிருந்தார். உணவு கிடைக்கவில்லை. பள்ளியைவிட்டு வெளியே போய்விடலாமாஎன்றும் அவர் எண்ணிவிட்டார். அவர் பசி அவருக்கல்லவா தெரியும்? பசியின் காரணமாக அவரது உடல் முழுவதும் பலவீனம் பரவிற்று. தள்ளாடித் தள்ளாடிப் பள்ளியை விட்டு வெளியேறினார்.

அவர் ஒரு பள்ளத்தாக்குக்கு வந்தார். ஒரு பழத்தை அவர் பார்வை தொட்டது. அது அழுகிப்போயிருக்க வேண்டும். ஒதுக்குப்புறமான ஓர் இடத்தில் அது கேட்பாரற்றுக் கிடந்தது. அதை அவர் ஆவலோடு கையிலெடுத்தார். ஆனால் அவரால் அதை உட்கொள்ள முடியவில்லை. அதிலிருந்து வெளியான துர்நாற்றம் குடலைப் பிடுங்கிற்று.

"கொடிய பசிக்குப் பிறகு உங்களுக்கு இந்த அழுகிய உணவுதான் கிடைத்ததா?"

அபூ யஅகூப் திடுக்கிட்டுத் திரும்பினார். அருகில் யாரோ ஒருவர் நின்றுகொண்டிருந்தார். அவர் அரபி யரல்ல என்று அவர் அணிந்திருந்த உடை கூறிற்று. வந்தவர் உட்கார நின்றவரும் உட்கார்ந்தார்.

வந்தவர் பேசினார். "உங்கள் முகத்தில் பசியின் சின்னம் தெளிவாகத் தெரிகிறது. நீங்கள் பல நாட்கள் பட்டினி கிடந்திருக்க வேண்டும் என்று நான் நினைக் கிறேன். இந்தப் பாத்திரத்தில் உங்களுக்குத் தேவையான உணவு வகைகள் இருக்கின்றன. எடுத்துக் கொள்ளுங்கள்".

அபூ யஅகூபுக்கு முன்னால் ஒரு பாத்திரம் வைக்கப் பட்டது. அதில் பலதரப்பட்ட உணவு வகைகள் நிறைந் திருந்தன.

அபூ யஅகூபின் கண்கள் விரிந்தன. "நான் பசி யோடிருப்பது உண்மைதான். ஆனால் நீங்கள் குறிப்பாக என்னைத் தேடிக் கொண்டு வந்திருக்கிறீர்களே, காரணம் என்ன?"

வந்தவர் கனைத்துக் கொண்டார். "இது என்னுடைய காணிக்கை. நான் சந்திக்கும் முதல் மனிதரிடம் இதை ஒப்படைத்துவிடவேண்டும் என்பது என்னுடைய தீர்மானம். நாங்கள் பத்து நாட்களாகக் கடற் பிரயாணம் செய்து இங்கு வந்திருக்கிறோம். என்னுடன் பல நண்பர்கள் இருந்தார்கள்; எங்கள் மரக்கலம் ஓட ஆரம்பித்ததும் ஆபத்து ஏற்பட்டது. உயிர் தப்புவது அசாத்தியம் எனத் தோன்றிற்று. மரக்கலம் பேயாட்டம் போட்டது!"

அபூ யஅகூப் அனைத்தையும் மறந்து கேட்டுக் கொண்டிருந்தார்.

"ஒவ்வொருவரும் பிரார்த்தனை செய்தார்கள். நானும் பிரார்த்தனை செய்தேன். மரக்கலம் குறைவின்றிக் கரை சேர்ந்துவிட்டால் என்னால் இயன்ற காணிக்கையை நான் காணும் முதல் மனிதருக்குக் கொடுப்பதாக இறைவனிடம் முறையிட்டேன். குறைவின்றி நாங்கள் கரை சேர்ந்து விட்டோம். எனவே, இதை நீங்கள் நிறைவுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும்..."

அபூ யஅகூப் இறைவனின் ஆற்றலை எண்ணிப் பார்த்து மகிழ்ந்தார். அவர் தமக்குத் தாமாக இப்படிச் சொல்லிக் கொண்டார்: "உனக்குத் தேவையான உணவு உன்னை நோக்கிக் கடலைக் கடந்து வருகிறது. ஆனால் நீ அவசரப் பட்டு விட்டாய்!"

இப்போது நபித் தோழர்களின் காலத்தில் நடந்த சம்பவம் ஒன்று உங்கள் சிந்தனைக்கு விருந்து கொடுக்கும்.

உமர் (ரலி) அவர்களின் வீட்டு வாசலில் ஒருவர் வேலை பார்த்து வந்தார். "அனைத்தையும் துறந்துவிட்டு நீ உமரின் வீட்டு வாசலில் வேலை செய்கிறாய். உமரிடம் நீ ஒட்டிக்

கொண்டிருக்கிறாய். ஆனால் இறைவனிடம் ஒட்டிக் கொண்டிருப்பது இதைவிட மேலானது. இப் போதே புறப்படு. குர்ஆனைப் புரட்டிப் பார். அப்புறம் நீ உமரின் உதவியை எதிர்பார்க்க வேண்டிய நிலைமை ஏற்படாது!" என்ற அசரீரிக் குரல் ஒலித்தது.

மறுகணமே அவர் வேலையை ராஜினாமா செய்து விட்டார். அவர் கவனம் முழுவதும் இறை வணக்கத்துக்குத் திரும்பிற்று.

அவரை உமரவர்கள் தேடிப்பிடித்தார்கள். "வேலையை விட்டு விட்டீரே, காரணம் என்ன?"

விடை மிகத் தெளிவாக வெளிவந்தது: "நான் திருக்குர்ஆனைப் புரட்டிப் பார்த்தேன். எனவே உமரின் தேவையோ உமரின் சந்ததியாரின் உதவியோ எனக்கு அவசியமாகப்படவில்லை!"

"இறைவன் உமக்கு அருள் பாலிக்கட்டும்! ஆனால் திருக்குர்ஆனில் நீர் அப்படி எதைக் கண்டீர்?" - இது உமரவர்கள் வீசிய வினா.

மறுவினாடி விடை வந்தது. "நான் திருக்குர்ஆனைப் பார்த்தேன். உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் வாக்குறுதியும் உங்களுக்குத் தேவையான உணவும் விண்ணகத்தில் இருக்கின்றன' என்னும் இறைவசனம் என் கவனத்தைக் கவர்ந்தது. விண்ணகத்திலிருக்கும் என் வருமானத்தையும் உணவையும் நான் ஏன் மண்ணகத்தில் தேட வேண்டும்?"

உமர் அவர்களின் கண்கள் கலங்கின. "உண்மை! முற்றிலும் உண்மை!" என்று அவர்கள் முணுமுணுத்தார்கள். அப்புறம் அவ்விருவரும் நண்பர்களாகி விட்டார்கள்! உமரவர்கள் அவரைக் காணும்பொருட்டு அவர் இருந்த இடத்திற்கு வரத் தொடுத்தார்கள்.

இத்தகைய வரலாற்றுத் துணுக்குகளை நீங்கள் எப்போதும் படிக்கலாம். வரலாற்று நூல் முழுவதும் இதுபோன்ற சம்பவங்கள் குவிந்து கிடக்கின்றன. இவற்றில் உங்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டு விட்டால் அப்புறம் உங்கள் இறை நம்பிக்கை தானாக வளர ஆரம்பித்துவிடும்.

7. பொறுப்பாளியின் நம்பிக்கை

இதுவரை நான் தனி மனிதனின் இறை நம்பிக்கையைப் பற்றியே எழுதி வந்தேன். ஆனால் தனி மனிதன் நடப்பது போல் குடும்பப் பொறுப்புள்ளவன் நடக்க முடியாது. நடக்கவும் கூடாது.

இறை நம்பிக்கையுள்ள ஒருவன் பசியால் இறந்து விட்டான் என்று வைத்துக் கொண்டால், அதனால் கெடுதி ஒன்றும் கிடையாது. அவனுடைய இறை நம்பிக்கைக்கு இறைவனின் பாராட்டுக் கிடைக்கும். ஆனால் குடும்பப் பொறுப்புள்ள ஒருவன். இப்படி நடக்கக் கூடாது. இது தற்கொலை செய்து கொள்வது போன்றதாகும். அவனுடைய பொறுப்பின் கீழ் பல உயிர்கள் காத்திருக்கின்றன. எனவே தனி மனிதனின் இறை நம்பிக்கைக்கும் குடும்பஸ்தனின் இறை நம்பிக்கைக்குமிடையில் வேற்றுமை ஏற்படுகிறது.

இந்த அத்தியாயத்தில் இந்த வேற்றுமையைச் சற்று விரிவாக ஆராய்வோம். பட்டினி கிடப்பதற்கும் மரணத்தை வரவேற்பதற்கும் துணிவுள்ள தனி மனிதன் இறை நம்பிக்கையுடன் வீட்டிலேயே உட்கார்ந்திருக்கலாம்; அவன் சம்பாதிக்க வேண்டியதில்லை என்று நான் குறிப்பிட்டேன்.

ஆனால் குடும்பப் பொறுப்புள்ள ஒரு மனிதன் இப்படிக் கையைக் கட்டிக் கொண்டு வீட்டில் உட்கார்ந்திருக்கக் கூடாது. ஏனெனில் மனைவி மக்களைப் பட்டினி போட்டுச் சித்திரவதை செய்வதற்கு மார்க்கத்தில் அனுமதியில்லை. பசியைப் பொறுக்க வேண்டும் என்றோ மரணத்தை வரவேற்க வேண்டும் என்றோ கூறி அவர்களை வற்புறுத்துவது சரியல்ல. இதை இஸ்லாம் மறுக்கிறது.

எனவே நீங்கள் இறை நம்பிக்கையில் கடைசிப் படித்தரத்தை அடைந்திருந்தாலும், உங்கள் மனைவி மக்களை அனுசரித்துச் சம்பாத்திய முயற்சியில் ஈடுபடத் தான் வேண்டும். இப்படித்தான் அபூபக்ர் (ரலி) அவர்கள் தம் குடும்பத்தை அனுசரித்துச் சம்பாத்திய முயற்சியில் ஈடுபட்டார்கள்; துணிகளையும் இரும்புக் கவசங்களையும் விற்பனை செய்தார்கள்.

ஆகவே, மனைவி மக்களை நாதியற்ற சூழ்நிலையில் விட்டு விட்டு "இறைவன் காப்பாற்றுவான்!" என்று வரட்டு வேதாந்தம் பேசுவது 'ஹராம்'-பெருங்குற்றம். மார்க்கம் இதை வன்மையாகக் கண்டிக்கிறது.

நீங்கள் இப்படி நடக்கக் கூடாது. இல்லையேல் அவர்களைக் கொலை செய்த குற்றம் உங்கள் தலையில் விழும். மறுமையில் இறைவனின் விசாரணைக்குப் பதில் சொல்ல வேண்டி ஏற்படும்.

குறைந்தது மூன்று நாட்களுக்கேனும் பட்டினி கிடக்கத் தெரிந்தவர்கள்தான் இந்த வழியில் வெற்றியடைய முடியும். ஆனால் மனைவியையும் மக்களையும் இப்படிப் பசியால் வாடவைப்பது கூடாது. அவர்களுடைய பொறுப்பு உங்கள் கையிலிருக்கிறது. அவர்களுக்கு ஏற்படும் விபரீதம் குறித்து இறைவனுக்கு நீங்கள் பதில் சொல்ல வேண்டி ஏற்படும்.

குடும்பத்தை முறைப்படி நிர்வகிப்பதற்காக மனிதன் அரும்பாடு படுகிறான். பொருளீட்டும் வழியில் அவன் அனுபவிக்கும் துன்பங்கள் எண்ணற்றவை. வருமானத்தை விரிவுபடுத்தும் பொருட்டு அவன் எவ்வளவோ சிந்திக்கிறான்.

இந்தச் சிந்தனைக்குச் சிறிதும் தேவையில்லை. வரக் கூடிய வருமானம் வந்தே தீரும். அதை எந்தச் சக்தியாலும் தடுக்க முடியாது. உங்களைச் சுற்றிலும் நடக்கும் சம்பவங்களை உற்றுப் பாருங்கள். இதிலுள்ள உண்மை தெரியும். முயற்சி செய்ய முடியாதவர்களுக்கும் ஓடியாடி சம்பாதிக்கத் தெரியாதவர்களுக்கும் அவன் எப்படி வருமானம் அளிக்கிறான், பசிக்கு எவ்வாறு உணவு கொடுக்கிறான் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவில்லையா?

இப்போது நீங்கள் முயற்சி செய்கிறீர்கள்; ஓடியாடிச் சம்பாதிக்கிறீர்கள். முயற்சிகளையும் சம்பாத்தியத்தையும் நம்புகிறீர்கள். இறைவனை நம்புவதற்குத் தயங்குகிறீர்கள்.

ஆனால் இந்தப் பரந்த மண்ணுலகில் கால் வைப்பதற்கு முன், உங்கள் உடலில் இயக்கமும் முயற்சியும் ஏற்படுவதற்கு முன் நீங்கள் எப்படி இருந்தீர்கள் என்பதை கொஞ்சம்

எண்ணிப் பாருங்கள். நீங்கள் சிறியதொரு சதைத் துண்டாக இருந்தீர்கள். அப்போது நீங்கள் முயற்சி செய்யவில்லை. முயற்சியில்லாமல் உங்களுக்கு உணவு கிடைத்தது. வேளை தவறாமல் உங்களுக்கு அவன் உணவு கொடுத்து வந்தான். அவன் எவ்வளவு ஆழமான அன்புள்ளவன்! அப்போது அன்பு செலுத்திய அவன் இப்போது அன்பு செலுத்த மாட்டானா? உங்களுக்கேன் இந்த அவநம்பிக்கை?

சொந்த வாழ்க்கையை உற்றுப் பார்க்கும் எந்த மனிதனாலும் இறைவனின் பேரன்பை மறுக்க முடியாது.

ஒரு துளியிலிருந்து உருவானவன் மனிதன். அந்தத் துளி இருள் சூழ்ந்த கர்ப்பப்பையினுள் சிறிது சிறிதாக வளர்ந்தது. அது தானாக வளரவில்லை. இறைவனால் அது வளர்க்கப்பட்டது.

சிறிது நாட்களில் அது ஒரு சதைத் துண்டாக மாறுகிறது. அதற்கு வேண்டிய உணவு தாய் சாப்பிடும் உணவிலிருந்து கிடைக்கிறது. தொப்புளின் வழியாகச் செலுத்தப்படும் இந்த உணவு வியக்கத்தக்க பல வளர்ச்சிகளைக் கொடுக்கிறது.

சில மாதங்களில் குழந்தை பிறக்கிறது. இந்தக் கட்டத்தில் இறைவன் தாயின் உள்ளத்தின் அன்பைப் பொங்கச் செய்கிறான். அவள் உதிரத்திலிருந்தே அமுதை உருவாக்குகிறான். இதில் குழந்தையின் முயற்சிக்கோ தாயின் முயற்சிக்கோ சிறிதும் இடம் கிடையாது!

பருவம் வந்ததும் கற்க வேண்டிய அவசியமும் இறைவழியில் நடக்க வேண்டிய தேவையும் ஏற்படுகின்றன. இப்போதும் அவனுக்கு இறைவனின் அன்பு இருக்கத்தான் செய்கிறது. அவன் குழந்தையாயிருந்த போது பெற்றோரும் உற்றாரும் மட்டிலும் அவன் மீது அன்பு செலுத்தினார்கள். ஆனால் இப்போது முஸ்லிம்கள் அத்தனைபேரும் அவன் மீது அன்பைச் சொரிகிறார்கள்; அவன் தேவையை முடித்துக் கொடுக்கக் காத்திருக்கிறார்கள். அனுதாபம் காட்டுவதற்கும் உதவி செய்வதற்கும் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். எனவே இந்தக் கட்டத்தில் அவன் மீது அன்பு செலுத்துகிறவர்கள் பல்லாயிரம் பேர்!

பெற்றோரற்ற அனாதைக் குழந்தைகளைப் பாருங்கள். அனாதைகளை ஆதரிப்பதற்கென்று தனிப்பட்ட மனிதர்களும் கூட்டு ஸ்தாபனங்களும் காத்து நிற்கின்றன. பெற்றோரின் ஆதரவு இல்லாத அந்தக் குழந்தைகள் பசியால் செத்துவிடுவதில்லை. பசியால் மாண்ட எந்த அனாதைக் குழந்தையும் வரலாற்றில் இடம் பெறவில்லை.

எல்லாம் வல்ல இறைவன் பேரன்புடையோன்; அவன் அன்பு எப்போதும் மனிதனுக்குண்டு.

"அனாதைகள் ஆதரவு இல்லாதவர்கள்; எனவே பொது மக்கள் ஆதரவு கொடுக்கிறார்கள். மற்றவர்களுக்கு இந்த ஆதரவு எப்படிக் கிடைக்க முடியும்?" என்று நீங்கள் கேட்கலாம்.

பொது மக்களின் ஆதரவு எல்லோருக்கும் கிடைத்து விடுவதில்லை. ஒரு மனிதன் புனிதமான வழிகளில் தன்னுடைய முழு நேரத்தையும் செலவிடுகிறான் என்று அவர்கள் அறியும்போது அவன் மீது இயற்கையிலேயே அவர்களுக்கு அன்பு ஏற்படுகிறது. எனவே ஒரு மனிதன் மக்களை மறந்து புனித வழியில் பிரவேசித்தால் அவனுக்கு மக்களின் ஆதரவு எப்போதும் கிடைக்கும். ஆதரவற்றவர்கள் என்ற எண்ணத்துடன் அனாதைகளை ஆதரிக்கும் அவர்கள், புனிதமான செயல்களில் ஈடுபடுகிறவன் என்ற எண்ணத்துடன் அவனுக்கு ஆதரவளிப்பார்கள்; ஆனால் அவர்களின் ஆதரவைப் பெறுவதற்காகப் புனித வழியில் நடப்பது சரியல்ல; இது முகஸ்துதி, மார்க்கம் இதை மறுக்கிறது.

இப்படியெல்லாம் நீங்கள் ஆராய்ந்து பார்த்தீர்களானால் உங்கள் உணவுக்கும் வருமானத்துக்கும் இறைவன் பொறுப்பாளியாயிருக்கின்றான் என்பதை ஏற்றுக் கொள்வீர்கள். அப்புறம் உங்கள் இறை நம்பிக்கைக்கு எந்த ஆபத்தும் வராது. ஒன்று மட்டும் நிச்சயம்; இறை நம்பிக்கை கொண்ட எவரும் பசியால் மாண்டதில்லை!

8. சேமிப்பது குற்றமா?

பொதுவாகச் சேமித்து வைப்பது குற்றம் என்றோ, குற்றமல்ல என்றோ சொல்லிவிட முடியாது. சூழ்நிலையை யொட்டி இந்தத் தீர்ப்பு மாறுபடும்.

இறை நம்பிக்கையின் உச்சியில் வாழ்ந்த பெரியோர் நமக்குத் தேவைப்பட்டதை எடுத்துக் கொண்டார்கள். உண்ண உணவு, உடுத்த உடை, இருக்க இல்லம் ஆகிய வற்றைத் தவிர்த்து மற்ற அனைத்தையும் அவர்கள் ஒதுக்கித் தள்ளி விட்டார்கள். எனவே பசிக்குச் சாப்பிடுவதும் அணிவதற்குத் துணி வாங்குவதும் இருப்பதற்குச் சிறியதொரு வீடு வாங்குவதும் குற்றங்கள் அல்ல. இவர்கள் எதையும் சேமித்து வைப்பதில்லை. ஆனால் இப்படி எல்லோராலும் செயல்பட முடியாது.

வேறு சிலர் ஓராண்டுக் காலத்திற்குத் தேவையான உணவுப் பொருள்களைச் சேமித்து வைத்துக் கொள்கிறார்கள். இவர்களை இறை நம்பிக்கையாளர்கள் என்று சொல்ல முடியாது. சேமித்து வைக்கும் குணம் உயிரினங்களில் மூன்றே மூன்றுக்குத்தான் இருக்கிறதாம். எலி, எறும்பு, மனிதன்!

இன்னும் சிலர் முப்பது நாற்பது நாட்களுக்குச் சேமித்து வைக்கிறார்கள். அறிஞர் சஹ்லின் கருத்துப்படி இதுவும் கூடாது. ஆனால் மற்ற அறிஞர்கள், "நாற்பது நாட்களுக்குத் தேவையான பொருள்களை சேமித்து வைப்பதால் இறை நம்பிக்கைக்குக் களங்கம் ஏற்படாது. இதற்கு மேல் அதிகப்படுவது கூடாது!" என்று கூறுகிறார்கள். அபூதாலிப் மக்கீ அவர்கள் இதையும் மறுக்கிறார்கள். "நாற்பது நாட்களுக்குத் தேவையானதைவிட அதிகமாகச் சேமித்து வைப்பதும் ஆகும்!" என்பது அவர்களின் கருத்து.

எனவே இது அறிஞர்களுக்கு மத்தியில் ஆழமான கருத்து வேற்றுமையைப் பெற்றுவிட்டது. ஏகோபித்த கருத்து அறவே கிடையாது.

எதிர் காலத்தை எண்ணிப் பார்க்கிறவர்கள் பணத்தைச் சேமித்து வைக்கத்தான் செய்வார்கள். ஆசையும் திட்டமும் வளரும் போது சேமிப்பும் வளரத்தான் செய்யும். இப்படிச் சேமிப்பதில் குற்றமில்லை என்பது என் கருத்து. ஆனால்

சேமிக்காதிருப்பது சாலச் சிறந்தது. இப்படி நடப்பதற்கு மனோதிடம் தேவை என்பதையும் நீங்கள் மறந்துவிடக் கூடாது.

வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்கி வைப்பது குற்றமல்ல. அவை நமக்கு அன்றாடம் தேவைப்படுகின்றன. ஆனால் மாரிக்காலத்திற்குத் தேவையான துணிகளைக் கோடைக்காலத்தில் வாங்காதீர்கள். இத்துணை ஆழமான முன்னெச்சரிக்கை உங்களுக்குத் தேவையில்லை.

பெருமானாரின் காலத்தில் பலதரப்பட்ட துறையினர் வாழ்ந்தார்கள். நபித் தோழர்களில் வியாபாரிகளும் இருந்தார்கள். ஆனால் இறைவனை நம்பிக் கொண்டு வியாபாரத்தை விட்டுவிடுமாறு பெருமானார் யாருக்கும் கட்டளையிடவில்லை. இறைவன் மீது முழுப் பற்றுதல் கொள்வதில்தான் வெற்றி இருக்கிறது என்றும், இம்மையின் விவகாரங்களில் தேவைக்குமேல் பற்றுதல் கொள்ளக் கூடாது என்றும் தான் அவர்கள் போதித்தார்கள்.

எனவே மனோதிடம் பெற்றவர்கள் சேமிப்பே இல்லாமல் வாழட்டும். அதுதான் அவர்களுக்கு நல்லது. பலவீனமான இதயத்தைப் பெற்றவர்கள் தேவையின் அளவுக்குச் சேமித்து வைக்கட்டும். இது இவர்களுக்கு நல்லது. ஆகவே சேமிப்பது சில வேளை விரும்பத்தகாததாகவும் வேறு சில வேளை வரவேற்கத்தகுந்ததாகவும் இருக்கிறது. இது தனி மனிதனைப் பற்றிய பிரச்சினை.

ஆனால் குடும்பப் பொறுப்புள்ள ஒருவனுக்குச் சிறிது சலுகையுண்டு. ஓராண்டுக் காலத்திற்குத் தேவையானவற்றை அவன் சேமித்து வைத்தாலும் அதனால் அவனுடைய இறை நம்பிக்கைக்குப் பாதகம் கிடையாது. ஏனெனில் குடும்பத்தாரின் நலனை யொட்டிச் சேமித்து வைக்க வேண்டிய நிர்ப்பந்த நிலையில் அவன் இருக்கிறான். எனவே அவன் மீது குற்றம் சாட்ட முடியாது. ஓராண்டுக் காலத்திற்குத் தேவையான உணவுப் பொருள்களைக் குடும்ப நலனுக்காகப் பெருமானாரே சேமித்து வைத்திருக்கிறார்கள். என்றாலும் ஓராண்டுக்குத் தேவைப்படுவதைவிட அதிகமாகச் சேமித்து வைப்பது கூடாது. இது இறை நம்பிக்கையுள்ளவர்களின் செயலல்ல!

நபித் தோழர்களில் சேமிப்பேயில்லாத தனிப்பட்ட மனிதர்கள் பலர் இருந்தார்கள். நோன்பு திறப்பதற்காக ஒரு துண்டு ரொட்டியை பிலால் (ரலி) ஒதுக்கி வைத்த போது பெருமானார், "வேண்டாம் அதை யாருக்காகிலும் தானம் செய்துவிடும். இறைவன் மீது அவநம்பிக்கை கொள்ளாதீர்..." என்று கூறினார்கள்.

"எதையும் சேமிக்காதீர்கள்!" என்று உம்மு அய்மன் முதலான பெண்களுக்கும் பெருமானார் கூறியிருக்கிறார்கள்.

பிரேதச் செலவுக்குரிய சேமிப்பும் இல்லாமல் நபித் தோழர்களில் சிலர் இறந்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும்.

மக்களுக்குக் கற்றுக் கொடுக்கும் எண்ணத்துடனேயே பெருமானார் குடும்ப நலத்துக்குச் சேமித்து வைத்தார்கள் என்று எண்ணுகிறேன். அவர்கள் இறைவனை நம்பினார்கள்; கைவசமுள்ள சேமிப்பைப் பொருட்படுத்தவில்லை!

9. தற்காப்பு முயற்சி

உயிரையோ பொருளையோ தற்காத்துக் கொள்ள முயற்சி செய்வது குற்றமல்ல. இறைவனை நம்பியவர்கள் பாம்புப் புற்றில் கையை விட வேண்டும் என்று சட்டம் கிடையாது. சாய்ந்திருக்கும் சுவருக்கு அருகிலோ உளுத்துப் போயிருக்கும் கூரைக்குக் கீழேயோ தூங்கக் கூடாது. மார்க்கம் இதைக் கண்டிக்கிறது. ஏனெனில் எத்தகைய பயனுமில்லாமல் ஆபத்தை விலைக்கு வாங்குவது அறிவுடைமையல்ல.

சீறிக் கொண்டிருக்கும் நச்சரவத்துக்கு முன்னால் போய் விழுவதும் சுவரில் ஓடும் தேளை எடுத்துக் கையில் வைத்துக் கொள்வதும் இப்படிப்பட்டவைதான். வெளியே போகும் போது வீட்டைத் திறந்துபோடுவதும், ஆடு-மாடுகளைக் கட்டி வைக்காமல் அவிழ்த்து விடுவதும் இறை நம்பிக்கையாளர்களின் செயல்கள் அல்ல. கேட் பாரற்றுத் திறந்து கிடக்கும் வீட்டில் திருடர்கள் நுழையக்கூடும். கட்டப்படாத ஆடு-மாடுகள் எங்கேயாவது ஓடிவிடக் கூடும்.

எனவே வீட்டையும் ஆடு-மாடுகளையும் பாதுகாத்துக் கொள்வது குற்றமல்ல. இதனால் இறை நம்பிக்கைக்கு எவ்வித முரண்பாடும் ஏற்படாது.

தம் ஒட்டகம் காணாமற்போய் விட்டது என்று அலறிக் கொண்டு வந்த அரபியர் ஒருவருக்குப் பெருமானார் இப்படிக் கூறினார்கள். "ஒட்டகத்தைக் கட்டிப் போட்டு இறைவன் மீது நம்பிக்கை வையும்!"

நீங்கள் சொல்லலாம். "நான் வரலாற்றில் பார்த்திருக் கிறேன்! வனவிலங்குகளுக்கும் அஞ்சாத எத்தனையோ பேர் வரலாற்றில் மின்னுகிறார்கள். ஒருவர் வனத்தைக் கடந்து கொண்டிருக்கும்போது எதிரில் சிங்கம் ஒன்று தோன்றிய தாகவும் அவர் தற்காப்புக்கு முயற்சி செய்யாமல் அங்கேயே நின்று கொண்டிருந்ததாகவும் வரலாறு கூறுகிறது. ஆனால் உங்கள் விளக்கத்திலிருந்து தற்காப்புக்கு முயற்சி செய்யலாம் என்று தெரிகிறது. தெளிவு படுத்த முடியுமா?" என்று.

நான் கேட்கிறேன்: வரலாற்று நூல்களில் நீங்கள் இதை மட்டும்தானா பார்த்தீர்கள்? சிங்கத்தின் முதுகின் மீது சவாரி செய்த மனித சிங்கங்களைப் பற்றி வரலாற்றில் ஒன்றுமே இல்லையா? வன விலங்குகளை ஆட்டிப் படைத்த பெரியோரைப் பற்றி வரலாறு எதுவும் சொல்லவில்லையா?

பெரியோரில் சிலர் வனவிலங்குகளுக்கு முன்னால் அசையாமல் நின்றது உண்மைதான். புலியை அடக்கியாண்ட மேதைகளும் சிறுத்தையைக் குனிய வைத்த உண்மை மனிதர்களும் இந்த மண்ணகத்தில் தோன்றியிருக்கிறார்கள்.

ஆனால் இதில் அதிசயம் ஒன்றுமில்லையே. அவர்கள் உங்களைவிட மிக மேலான படித்தரத்தில் இருந்தார்கள். எனவே உங்களால் செய்ய முடியாத காரியங்களை அவர்கள் எளிதாகச் செய்து காட்டினார்கள். ஆனால் அவர்களை எந்த விதத்திலும் பாமரர்களுடன் இணைக்க முடியாது.

புலியையும் சிங்கத்தையும் அடக்கியாள்வது இருக் கட்டும்; முதலில் உங்கள் நாயை அடக்கியாளுங்கள். ஆம், சின உணர்ச்சியையே நான் நாய் எனக் குறிப்பிடுகிறேன். அது உங்கள் விரோதியை மட்டுமல்ல, உங்களையும் கடித்துக் காயப்படுத்தும். அதை நீங்கள் அடிமையாக்கி விட்டால் உங்கள் படித்தரம் உயர்ந்துவிடும். அப்புறம் வனவிலங்குகளை

நீங்கள் எளிதாக அடக்கியாண்டு விடலாம். ஆனால் உங்களிடமுள்ள நாயையே உங்களால் அடக்கியாள முடியவில்லை என்றால், அப்புறம் தெருவில் போகும் ஆட்டைக் கூட உங்களால் அடக்கியாள முடியாது.

மீண்டும் நீங்கள் கேட்கிறீர்கள்: "கதவைப் பூட்டிய பிறகு களவு ஏற்படுவதற்கு வழியேயில்லை. இந்தக் கட்டத்தில் இறைவனை நம்புவதும் நம்பாமலிருப்பதும் ஒன்றுதான். களவு போவதற்கு வழி இருந்தால்தானே "இறைவனே, நீயே பொறுப்பாளி. நீ தான் காப்பாற்ற வேண்டும்!" என்று இறைவன் மீது பாரத்தைப் போட முடியும்? நிலைமை அப்படி இல்லை. கதவு தாழிடப்பட்ட பிறகு வீட்டிலுள்ள பொருள்கள் திருட்டுப் போவதற்கு வழியில்லையே!..."

நீங்கள் நினைப்பது முற்றிலும் தவறு. திருடுகிறவர்கள் எல்லாரும் வீட்டு வாசல் வழியாகத்தான் உள்ளே பிரவேசிக்கிறார்களா? பூட்டிய கதவு பூட்டியபடி இருக்கும் போது எத்துணையோ பெரிய திருட்டுக்களெல்லாம் வீட்டுக்குள் நடந்து விடுகின்றன! இப்படி நடந்திருப்பதாக நீங்கள் கேள்விப்பட்டதும் கிடையாதா?

இத்தகைய ஆபத்துகளை மனிதனால் தடை செய்ய முடியாது. இவை அவன் சக்திக்கு அப்பாற்பட்டவை. வேண்டுமானால் அவன் வீட்டுக் கதவுக்குத் தாழிடலாம். அதற்குப் பிறகு ஏற்படக் கூடிய ஆபத்துகளை இறைவனால் தான் தடுக்க முடியும். எனவேதான் வீட்டுக் கதவைப் பூட்டி இறைவன் மீது நம்பிக்கை வையுங்கள் என்று நான் சொல்கிறேன். ஆனால் வீட்டு கதவைத் திறந்துபோடுவது சரியல்ல. ஏனெனில் அது திருடர்களுக்கு அழைப்புக் கொடுப்பது போன்றதாகும்!

ஆட்டையும், மாட்டையும் கட்டிப் போடுவதும் இப்படிப் பட்டதுதான். இது உங்கள் சிந்தனைக்குரியது. இப்படியே ஒவ்வொன்றையும் நீங்கள் ஆராய்ந்து பார்த்தால், இறைவனின் உதவியின்றி ஆபத்துகளைத் தடுக்க முடியாது என்று உங்களுக்குத் தெளிவாகத் தெரியும்.

எனவே வாழ்க்கையில் ஏற்படும் சூழல்களைப் பார்த்துக் கலங்காதீர்கள். உங்கள் பொருள் திருட்டுப் போய்விட்டால் அல்லாஹ்விடம் இப்படிப் பிரார்த்தனை செய்யுங்கள்:

"இறைவனே! நீ எனக்குக் கொடுத்தது அன்பளிப்பா? அப்படியானால் மீண்டும் அதைக் கைப்பற்ற மாட்டாய்! அது இரவல் பொருளா? அப்படியானால் எப்படியும் என்னிடமிருந்து அதை நீ எடுத்துக்கொண்டு விடுவாய். நான் உன் அடிமை. எனவே உன் தீர்ப்புகள் அனைத்தையும் நான் திருப்தியோடு ஏற்றுக்கொள்கிறேன்!"

இப்படி நடந்தால் உங்களால் வாழ்க்கையில் வெற்றியைக் காணமுடியும். செல்வத்தை விரும்பும் நீங்கள் வறுமையை வெறுக்கிறீர்கள். இவற்றில் எது உங்களுக்குப் பயன்தர வல்லது என்ற விவரம் நிச்சயமாக உங்களுக்குத் தெரியாது. செல்வத்தினாலேயே கொல்லப்பட்டவர்கள் எத்தனையோ பேர். செல்வத்தினால் ஏற்படும் துன்பங்களைப் பொறுக்க முடியாமல், "இறைவனே, என்னை ஏழையாக்கி விடுவாயாக!" என்று முறையிடும் செல்வர்களை நீங்கள் கண்டதில்லையா?

எனவே இறைவனை நம்புங்கள். அவன் எது கொடுத்தாலும் திருப்தியுடன் ஏற்றுக் கொள்ளுங்கள். இறைவனின் செயல்கள் எல்லாம் நன்மை பயப்பதாகவே இருக்கும். நன்மை ஏற்படும் என்று எண்ணிக்கொண்டு மனிதன் செய்யும் செயல்கள் பெருந்துன்பத்துக்கு வழி வகுத்து விடுவதில்லையா!

இறைவனை முழு மனத்துடன் நம்புங்கள். உண்மையில் அவனே நம்பிக்கைக்கும் பொறுப்புக்கும் உரியவன்!

10. உடைமை களவாடப்பட்டால்...

உடைமை களவாடப்பட்டால் எப்படி நடந்து கொள்ள வேண்டும். நமது முன்னோர் எப்படி நடந்து கொண்டார்கள் என்று இங்கு நாம் ஆராய்வோம்.

வீட்டை விட்டுப் புறப்படும் இறை நம்பிக்கையாளர்கள் குறிப்பாக ஆறு விதிகளைக் கவனிக்கவேண்டும்.

1. வெளியில் செல்கிறவர்கள் வீட்டைப் பூட்ட வேண்டும். வாசலைத் திறந்துபோட்டுவிட்டு வெளியில் செல்வது கூடாது.

மாலிக் பின் தீனார் வெளியில் செல்லும்போது வீட்டைப் பூட்டுவதில்லையாம்; கதவுகளைக் கயிற்றால் கட்டி வைப்பாராம். "இந்தப் பக்கம் நாய்கள் அதிகம். இல்லாவிட்டால் இதுவும் தேவையில்லை!" என்பாராம். அவர் அடைந்திருந்தது மிக உயர்ந்த படித்தரம். பாமரர்களால் இப்படி நடக்க முடியாது.

2. திருடர்களுக்கு ஆசை ஏற்படக்கூடிய எந்தப் பொருளையும் வீட்டில் விட்டுச் செல்லக் கூடாது.

மாலிக் பின் தீனாருக்கு முகைரா என்ற நண்பர் ஓர் அன்பளிப்புக் கொடுத்தார்.

மாலிக் வாங்க மறுத்து விட்டார். "இது எனக்குத் தேவையில்லை. நீங்களே வைத்துக்கொள்ளுங்கள்."

முகைரா திகைத்தார்; காரணம் கேட்டார்.

மாலிக் பதிலளித்தார். "என் விரோதிகளும் திருடர்களும் இதைப் பார்த்து ஆசைப்படுவார்கள். எனவே திருட முயற்சி செய்வார்கள். அந்தக் குற்றத்துக்கு நான் பொறுப்பாளியாகிவிடக் கூடாது. இது என்னிடம் இல்லையெனில் அவர்கள் திருடமாட்டார்கள் அல்லவா?"

3. பிரயாணத்தில் உடன் எடுத்துச் செல்ல முடியாத பொருள்களை வீட்டில் பத்திரப்படுத்தி, இறைவன்மீது பாரத்தைப் போடவேண்டும். அப்படி அவை திருட்டுப் போய் விட்டால், அந்த முடிவைத் திருப்தியோடு ஏற்றுக் கொள்ள வேண்டும். அதற்காக வருந்தக்கூடாது! அவற்றைத் தர்மம் செய்துவிட்டதாக எண்ணிக் கொள்ளுங்கள்.

தன் தேவையின் அழுத்தத்தால்தான் ஒரு மனிதன் திருடுகிறான். உங்கள் பொருளால் அவன் பயனடையட்டும். "நல்லவனானாலும் கெட்டவனானாலும் உங்கள் சகோதரனுக்கு உதவி செய்யுங்கள்!" என்று பெருமானார் கூறியிருக்கிறார்கள். எனவே உங்கள் அனுமதியின்றி உங்கள் உடைமையில் கைவைத்த திருடனைத் திட்டாதீர்கள்.

4. பத்திரப்படுத்தப்பட்டிருந்த பொருள் திருட்டுப் போய் விட்டதை அறிந்ததும் நீங்கள் கவலைப்படக் கூடாது. முடிந்தால் மகிழ்ச்சியடையுங்கள்! முடியா விட்டால்,

குறைந்தது கவலைப்படாமலாவது இருங்கள். "இப்படித் திருட்டு நடந்திருப்பதில் ஏதோ நன்மை இருக்கவேண்டும்!" என்று எண்ணுங்கள்.

திருட்டுப் போன பொருளைத் தேடுவது குற்றமல்ல. அதற்காகத் தெருவில் போகிற அத்தனை பேரையும் சந்தேகப்பட ஆரம்பித்து விடாதீர்கள்! சந்தேகக் கண் உங்களுக்கு இருக்கவே கூடாது. அப்புறம் உங்கள் வாழ்க்கை முழுவதும் சந்தேக மயமாகிவிடும்!

இந்த விதிகளை அனுசரித்து நடந்த இறை பக்தர்கள் முற்காலத்தில் பலர் இருந்தார்கள்.

ஒரு சமயம் இப்னு உமரின் ஒட்டகம் ஒன்று களவு போய் விட்டது. அவர் தேடிப் பார்த்தார்; கிடைக்கவில்லை. எனவே அவர், "அந்த ஒட்டகத்தை இறைவனின் வழியில் தர்மம் செய்துவிட்டேன்!" என்று சொல்லி விட்டார்.

சிறிது நேரத்திற்குப் பிறகு ஒரு மனிதர் எதிரில் வந்தார். ஓர் இடத்தைக் குறிப்பிட்டு "அங்கு உங்கள் ஒட்டகம் நின்று கொண்டிருக்கிறது!" என்றார்.

இப்னு உமர் எழுந்து நின்றார்; செருப்புகளை அணிந்து கொண்டார். ஆனால் அவர் புறப்படவில்லை. "இறைவனிடம் மன்னிப்புக்கோருகிறேன்!" என்று முணுமுணுத்துக் கொண்டே மீண்டும் உட்கார்ந்து விட்டார்.

வந்தவருக்கு ஒன்றும் புரியவில்லை. "ஏன் உட்கார்ந்து விட்டீர்கள்? அதைப் பிடித்துவரக் கூடாதா?"

இப்னு உமர் கூறினார்: "அதை இறைவனின் வழியில் தர்மம் செய்துவிட்டதாகக் கூறிவிட்டேன். எனவே, அதை மீண்டும் அடையும் உரிமை எனக்குக் கிடையாது!"

5. திருடியவனைத் திட்டக்கூடாது. முடிந்தால் அவனுக்காக இறைவனிடம் பிரார்த்திக்க வேண்டும்.

பெரியார் ஒருவரின் பொருள் ஒன்று திருட்டுப் போய்விட்டது.

"அந்தத் திருடனைக் கெடுக்குமாறு இறைவனிடம் நீங்கள் சாபமிடக் கூடாதா?" என்று ஒரு நண்பர் கேட்டார்.

"நான் 'ஷைத்தானு'க்குத் துணையாக இருக்க விரும்பவில்லை!"-சாபமிடுவது நற்செயலல்ல என்ற உண்மை இங்குச் சுட்டிக் காட்டப்படுகிறது.

"போகட்டும்! திருட்டுப்போன அந்தப் பொருள் திரும்பக் கிடைத்து விட்டால் என்ன செய்வீர்கள்?" என்று நண்பர் கேட்டார்.

பெரியார் பதிலளித்தார்: "அதை நான் தொடவும் மாட்டேன். அந்தத் திருடனுக்கு அதை நான் உரிமையாக்கி விட்டேன்....."

6. திருட்டுச் செயலால் திருடர்கள் இறைவனின் வெறுப்புக்கு இலக்காகினார்களே என்று அவர்கள்மீது அனுதாபம் கொள்ள வேண்டும்.

அலீ பின் புஸைல் என்பவரிடமிருந்து கணிசமான தொகை யொன்று களவுபோயிருந்தது. வீட்டில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்த அவர் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தார். அவரது தந்தை இதைப் பார்த்தார். "ஏன் அழுகிறாய்? திருட்டுப்போன பொருளை எண்ணியா அழுகிறாய்?"

அலீ பின் புஸைல் விடையளித்தார்: "இல்லை. அதற்காக நான் அழவில்லை. ஏழை முஸ்லிம்களின் நிலையை எண்ணி யே நான் அழுகிறேன். இது போன்ற குற்றங்களுக்கு அவர்கள் இறைவனிடம் எப்படிப் பதில் சொல்லப்போகிறார்கள்?-"

திருட்டுக் கொடுத்த ஒருவருக்கு அவர் நண்பர் கூறினார்: "உமக்குத் தீங்கிழைத்த திருடனுக்காக இறைவனிடம் நீர் பிரார்த்தனை செய்யும்!"

திருட்டுக் கொடுத்தவர் இப்படிக் கூறினார்: "என்னால் அவனுக்கு எப்படிப் பிரார்த்தனை செய்ய முடியும்? அவன் இறைவனுக்கு எப்படிப் பதில் சொல்லப் போகிறான் என்னும் கவலை என் மனத்தை ஆட்கொண்டு நிற்கிறது.

11. துன்பத்தைத் தவிர்க்கலாமா?

பசி, தாகம், பிணி முதலிய அனைத்தையும் நான் துன்பங்கள் என்று குறிப்பிடுகிறேன். சாதாரணமாக இந்தத் துன்பங்களைத் தவிர்ப்பதற்கு நாம் முயற்சி செய்கிறோம். தண்ணீரால் தாகத்தைத் தவிர்ப்பது போல், உணவால் பசியைத் தவிர்க்கிறோம். உஷ்ணமேலீட்டால் ஏற்பட்ட வியாதியைக் குளிரான மருந்து மூலம் குணப்படுத்துகிறோம். குளிர் மேலிட்டதால் ஏற்பட்ட வியாதியை உஷ்ணமருந்து மூலம் குணப்படுத்துகிறோம்.

இறை நம்பிக்கையாளர்கள் இத்தகைய முயற்சிகளில் தாராளமாக ஈடுபடலாம். பெருமானாரே வியாதிக்குப் பரிகாரம் செய்திருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால், உயிர் போய்விடும் என்று தெரிந்தால் வியாதிக்கு அவசியம் பரிகாரம் தேட வேண்டும். இந்தக் கட்டத்தில் பரிகார முயற்சியை விடுவது கூடாது-'ஹராம்'!

"மரணம் ஒன்றைத் தவிர்த்து மற்ற எல்லா வியாதிக்கும் மருந்து உண்டு-" என்று பெருமானார் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

அனேக சந்தர்ப்பங்களில் பெருமானாரே மற்றவர்களின் வியாதிக்கு மருந்து சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களின் வைத்திய விளக்கங்கள் ஏராளமானவை. அவர்களின் விளக்கங்களை எல்லாம் ஒன்று திரட்டினார்கள் சில நண்பர்கள். பின்னர் அவை 'திப்புந் நபீ' என்ற பெயருடன் புத்தகமாக வெளிவந்தது.

இந்த நூல் இன்றைக்கும் உங்களுக்குக் கிடைக்கலாம் இது எல்லோருக்கும் எல்லாக் காலத்துக்கும் பயன்படக் கூடிய நூல் என்று நான் கருதுகிறேன்.

ஒரு சமயம் மூஸா நபிக்கு வியாதி வந்தது. ஆனால் அவர்கள் அதற்கு எத்தகைய பரிகாரமும் செய்யவில்லை. "இறைவன் குணப்படுத்துவான்!" என்று அவர்கள் எண்ணியிருக்க வேண்டும்.

பார்க்க வந்தவர்கள் அனுதாபம் காட்டினார்கள். ஏதோ ஒரு மூலிகையைக் குறிப்பிட்டு, "அதை நீங்கள் சாப்பிட்டால் உடனே குணம் தெரியும்!" என்றார்கள்.

ஆனால் மூஸா நபி அதை ஏற்க மறுத்து விட்டார்கள். "நான் எந்தப் பரிகாரமும் செய்யத் தயாராயில்லை. மருந்தின்றி இறைவனே எனக்கு நலம் கொடுக்கட்டும்!"

மூஸா நபியின் வியாதி வளர்ந்தது. இதனால் அவர்கள் பெரிதும் துன்பமடைந்தார்கள். என்றாலும் தம் வியாதிக்குப் பரிகாரம் செய்து கொள்ள அவர்கள் விரும்பவில்லை.

வந்தவர்கள் மீண்டும் கூறினார்கள். "அந்த மருந்து அனுபவத்தில் கண்ட கைகண்ட மருந்து. எங்களுக்கு வியாதி ஏற்படும் போதெல்லாம் அதைத்தான் நாங்கள் சாப்பிடு வோம். உடனே எங்களுக்குக் குணம் தெரியும்?"

மூஸா நபி வெறுப்புடன் தலையசைத்தார்கள். "முடியாது; நான் பரிகாரம் செய்ய மாட்டேன்!"

வியாதியின் வேகம் இன்னும் ஒரு படி மேலே ஏறிற்று.

இந்தக் கட்டத்தில் இறைவனிடமிருந்து செய்தி வந்தது; "மூஸா! அவர்கள் சொல்லும் மூலிகையை உபயோகித்தே நீர் குணமடைய வேண்டும். இல்லையேல் நான் நிச்சயமாக உம்மைக் குணப்படுத்தமாட்டேன்-"

மூஸா நபி நடுங்கினார்கள். இதன் பின்னர் முறைப்படி வைத்தியம் நடந்தது; குணமும் ஏற்பட்டது.

இறைவனிடமிருந்து வந்த இரண்டாம் செய்தி அடியில் இடம் பெறுகிறது: "மூஸா! என்மீது நம்பிக்கை வைத்திருப்பதாகச் சொல்லிக் கொண்டு என்னுடைய தத்துவ அமைப்பையே நீர் உடைத்தெறியத் துணிந்து விட்டீர். மூலிகைகளை நீர் ஏன் வெறுக்க வேண்டும்? அவற்றில் ஆற்றலைத் திணித்து வைத்தவன் நான்தானே?" -எனவே இறை நம்பிக்கையாளர்கள் தம் வியாதிக்குத் தாராளமாகப் பரிகாரம் தேடிக் கொள்ளலாம்.

திருத்தூதர் ஒருவர் தம் ஆண்மை குறைந்து வருவதாக இறைவனிடம் முறையிட்டாராம். இறைவனிடமிருந்து வந்த செய்தியில் அதற்குரிய வைத்தியம் தெளிவாகக் காட்டப் பட்டிருந்தது. "இறைச்சியையும் பாலையும் சேர்த்துச் சாப்பிடும். அவை உமக்குத் தேவையான ஆண்மையைக் கொடுக்கும்!"

வேறொரு திருத்தூதருக்கு முன்னால் முறையீடு ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது. "எங்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் குரூபிகளாக, அழகற்றவர்களாகவே தோன்றுகின்றன. இதற்கு என்ன செய்வது?"

இந்த முறையீடு மேற்குறிப்பிட்ட திருத்தூதரின் வாயிலாக மேலிடத்துக்கு அனுப்பப்பட்டது. இறை அறிவிப்பு இப்படி வந்தது. "கருவுற்றிருக்கும் பெண்களுக்கு மூன்றாம் நான்காம் மாதங்களில் பேரிக்காயைச் சாப்பிடக் கொடுக்க வேண்டும் என்று அவர்களுக்கு நீர் சொல்லிக் கொடும். பேரிக்காய், பிறக்கும் குழந்தைக்கு அழகைக் கொடுக்கும்!"

வியாதியைப் படைத்தவன் இறைவன்; அதை அழிப்பதற்கு மருந்தைப் படைத்தவனும் அவனே. எனவே வியாதிக்குப் பரிகாரம் தேடிக் கொள்வது எந்த விதத்திலும் குற்றமல்ல.

இப்போது உங்கள் சிந்தனைக்கு வேறொரு கோணத்திலிருந்து வேலை கொடுங்கள்.

தாகத்துக்குத் தண்ணீர், பசிக்கு உணவு, வியாதிக்கு மருந்து-இவை நிச்சயமானவை. ஏனெனில் தண்ணீரால் தாகம் தீர்வதும், உணவால் பசி தணிவதும், கைகண்ட மருந்தால் வியாதி குறைவதும் நிச்சயமானவை. எனவே இத்தகைய முயற்சிக்கு இஸ்லாம் தடை விதிக்கவில்லை.

சிலர் தமக்கு ஏற்பட்டிருக்கும் துன்பத்தைத் தவிர்ப்பதற்கு விசித்திரமான பல வழிகளைக் கையாள்கிறார்கள். சிலர் விண்மீன்களையும் வேறு சிலர் கைக்கோடுகளையும் நம்புகிறார்கள். இவற்றில் ஏதேனும் உண்மை இருக்கலாம். என்றாலும் அந்த உண்மையைச் சந்தேகத்திற்கிடமின்றி எடுத்துரைப்பது அசாத்தியமான ஒன்று. எனவே இவற்றில் முழு நம்பிக்கை வைப்பது கூடாது. நாளை நடக்கப்போவதை இறைவன் ஒருவனைத் தவிர்த்து வேறு எவரும் அறிந்திருக்க முடியாது!

அனைத்தையும் அறிந்தவன் இறைவன் ஒருவனே!

12. மருந்துக்கு மறுப்பு

வியாதிக்கு மருந்து தேடுவது குற்றமல்ல என்று நான் குறிப்பிட்டேன். முன்னோரில் பெரும்பாலோர் தம் வியாதிக்குப் பரிகாரம் தேடியிருக்கிறார்கள். அதே சமயத்தில் முன்னோரில் ஒரு சாரார் தம் வியாதிக்கு எத்தகைய பரிகாரத்தையும் மேற்கொள்ளவில்லை என்பதையும் நம்மால் மறுக்க முடியாது. பெருமானாரே பரிகாரத்திற்கு ஆதரவு கொடுத்திருக்கும்போது அந்த முன்னோர் ஏன் பரிகாரத்தை வெறுத்தார்கள்? இறைவன் மீது அவர்கள் கொண்டிருந்த முழுப் பக்திதான் இதற்குக் காரணம்.

அபூபக்ர் (ரலி) அவர்களின் வாழ்க்கையில் நடந்த சம்பவம் ஒன்றை இப்போது பாருங்கள்.

அவர்கள் நோயுற்றிருந்தார்கள். "வைத்தியனைக் கூப்பிடட்டுமா?" என்று ஒருவர் கேட்டார்.

"வைத்தியனா! என்னை அவன் பார்த்து விட்டானே!"

"அவன் என்ன சொன்னான்?" என்று நண்பர் கேட்டார்.

விடை பளிச்சென்று வந்தது. "நான் எண்ணியதைச் செய்து முடிக்கும் ஆற்றல் உள்ளவன்" என்றே சொன்னான்! இங்கு அபூபக்ரவர்கள் இறைவனையே வைத்தியன் எனக் குறிப்பிடுகிறார்கள் என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும்.

அபுத் தர்தா நோயுற்றிருந்தபோது, "வைத்தியனைக் கூப்பிட்டால் என்ன?" என்று யாரோ கேட்டார்கள்.

கிடைத்த விடை இதுதான்: "வைத்தியன்தானே என்னை நோயாளியாக்கியிருக்கிறான்!"

ரபீவு என்பவருக்குப் பக்கவாதம் ஏற்பட்டிருந்தது. "வைத்தியம் செய்தால் என்ன?" என்று நண்பர்கள் கேட்டார்கள்.

ரபீவு தெளிவாகப் பதில் கொடுத்தார். "இதற்கு நான் முயற்சி செய்தது உண்மை. ஆனால் ஆது, சமூது, முதலான முன்னோர்களை எண்ணிப் பார்த்ததும் என் மனம் மாறி விட்டது. அவர்களில் நோயாளிகளும் இருந்தார்கள்! வைத்தியர்களும் இருந்தார்கள். அவர்கள் அனைவருமே அழிந்து போய் விட்டார்கள்...."

அஹ்மத் பின் ஹன்பல் இப்படிக் கூறுகிறார்: "முழு இறை நம்பிக்கையுடன் செயலாற்றுகிறவர்களை நான் விரும்புகிறேன். அவர்கள் இறைவனை நம்ப வேண்டுமே தவிர, மருந்துகளை நம்பக் கூடாது. வைத்தியனே நேரில் வந்து கேட்டாலும் அவர்கள் தம் வியாதியைக் கூறக் கூடாது!"

"உடலிலோ பொருளிலோ குறைவு ஏற்பட்டாலும் அதைப் பொருட்படுத்தாமல் இறையெண்ணத்தில் லயித்திருப்பவனே உண்மையான இறை நம்பிக்கையாளன்!" என்று அறிஞர் சஹ்ல் கூறுகிறார். ஆன்மீகத் துறையில் இவரது கருத்துக்கு முக்கியத்துவம் உண்டு என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும்.

இங்கு நீங்கள் நன்கு ஆராய வேண்டும். பெருமானார் வைத்தியத்தை மறுக்கவில்லை என்பதும் அவர்கள் அதற்கு ஆதரவு கொடுத்திருக்கிறார்கள் என்பதும் நீங்கள் தெரிந்த விவரங்கள். அதே சமயத்தில் பெருமானாரை அப்படியே பின்பற்றிய சிலர் வைத்தியத்தை வெறுக்கிறார்கள்.

பெருமானாரைவிட இறை நம்பிக்கையில் உயர்ந்தவர் எவரும் இருக்க முடியாது. அவர்கள் தம் பசியைப் பொருட்படுத்தாமல் மற்றவர்களின் பசியைத் தணித்தார்கள். மிக உயர்ந்த நிலையில் வாழ்ந்த அவர்கள், மக்களுக்கு நடு நிலைமையைக் கற்றுக் கொடுத்தார்கள்.

பெருமானார் மிக உயர்ந்த படித்தரத்தில் இருந்தாலும் மற்றவர்களுக்கு நடுநிலைமையைத்தான் கற்றுக் கொடுத்தார் கள்; ஆனால் நடுநிலையைத் தெரிந்து கொண்ட சிலர் தமக்குத்தாமாக உயர்ந்த நிலைக்கு முன்னேறியிருக்கிறார்கள். வைத்தியத்தை மறுப்பது இந்த முன்னேற்றத்தின் விளைவு என்பது என் கருத்து.

பெருமானாரின் போதனைக்கும் இந்த இறை நம்பிக்கையாளர்களின் நிலைமைக்குமிடையில் முரண்பாடு கிடையாது என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள விரும்பினால் அடியிலுள்ள விவரங்களை ஆழ்ந்து படியுங்கள்.

வைத்தியத்தை மறுப்பது சரியில்லை என்றும், மரணம் ஏற்பட்டுவிடும் என்று தோன்றினால் வைத்தியம் செய்யா திருப்பது குற்றம் என்றும் நான் குறிப்பிட்டேன். ஆனால்,

வைத்தியத்தைக் கட்டோடு ஒதுக்கித் தள்ளும் உரிமையைச் சிலர் பெற்றிருக்கிறார்கள்.

1. இவர்கள் ஞானோதயம் பெற்றவர்கள். மர்ம மான விவரங்கள் அனைத்தையும் இலகுவாகத் தெரிந்து கொள்ளும் ஆற்றல் இவர்களுக்குண்டு, தம் வாணாள் முடிந்துவிட்டது என்றும் எந்த மருந்தும் தமக்குப் பயன்படாது என்றும் இவர்கள் அறிந்தால் வைத்தியத்தை ஒதுக்கிவிடலாம். இந்த உண்மைகள் கனவுலகிலோ ஞானோதயத்திலோ பிரதிபலிக்கக் கூடும். மனத்தெளிவைப் பற்றிய முழு விவரம் 'உள்ளத்தின் விந்தைகள்' என்னும் நூலில் இடம் பெற்றிருக்கிறது.

அபூபக்ர் (ரலி) அவர்கள் வைத்தியத்தை மறுத்ததற்கு இதுதான் காரணம் என்பது என் கருத்து.

அவர்கள் ஞானோதயம் பெற்றிருந்தார்கள் என்பதற்கு அடியிலுள்ள சம்பவத் துணுக்கு போதிய ஆதாரமாகும்.

அவர்களின் மனைவி கருவுற்றிருந்தார். வயிற்றில் வளர்வது பெண் குழந்தை என்று அவர்கள் குறிப்பிட்டார் கள். அதன்படியே நடந்தது. வயிற்றிலிருக்கும் குழந்தையை ஞானோதயத்தால் அறிந்து கொள்ளும் ஆற்றலுள்ள அவர்களுக்குத் தம் வாணாளின் இறுதி எல்லையை அறிந்து கொள்வது அசாத்தியமா?

2. இம்மையை மறந்து மறுமையின் எண்ணத்தில் லயித்திருப்பவர்கள் இவர்கள், மறுமையில் தம்மை எதிர் கொண்டழைக்கும் இன்னல்களைப் பற்றியும் வேதனை களைப் பற்றியும் இவர்கள் அல்லும் பகலும் எண்ணிக் கொண்டிருப்பார்கள். இதனால் தமக்கு ஏற்பட்டிருக்கும் வியாதியே அவர்களுக்குத் தெரிவதில்லை. வியாதியே தெரியாதபோது அவர்களால் எப்படி வைத்தியத்தை எண்ணிப் பார்க்க முடியும்?

3. இவர்கள் மிக மோசமான வியாதியால் பாதிக் கப்பட்டவர்கள். பலர் மருத்துவம் செய்ய முன் வரலாம். ஆனால் தம் வியாதியின் நிலையை எண்ணிப் பார்க்கும்போது எந்த மருந்தும் பயன்படாது என்றே அவர்கள் எண்ணு வார்கள். எனவே படைத்தவனிடமே பொறுப்பை விட்டு

விடுவார்கள். நீங்கள் பார்த்ததில்லையா? ஒரு பொருள் கெட்டுப்போய்விட்டால், அதை உருவாக்கியவனின் உதவியைத்தானே நாம் நாடுகிறோம்?

4. வியாதியினால் ஏற்படும் துன்பங்களைச் சகித்துக் கொள்வதன் மூலம் இறையன்பை எதிர்ப்பார்ப் பவர்கள் இவர்கள். பொறுமைக்கு மார்க்கத்தில் பெருமதிப் புண்டு. வியாதி இருந்தால்தானே பொறுமையோடு இருக்க முடியும்? எனவே இவர்கள் தம் வியாதிக்குப் பரிகாரம் தேடுவதில்லை.

நோயாளிக்கு இறைவனின் அன்பு உண்டு என்னும் கருத்து பெருமானாரின் பொன்மொழியிலிருந்துத் தெறிக்கிறது? "திருத்தூதர்களாகிய நாங்கள் மற்ற அனைவரையும்விடத் துன்பவசப்பட்டவர்கள். ஒரு மனிதன் பெற்றிருக்கும் இறை நம்பிக்கைக்குத் தக்கவாறு இறைவன் அவனுக்குத் துன்பமளிக்கிறான். பலவீனமான நம்பிக்கை யுள்ளவர்கள் அதிகமாகத் துன்புறுத்தப்படுவதில்லை!"

"தங்கத்தை நெருப்பால் புடம்போடுவதுபோல் இறைவன் மனிதனைத் துன்பத்தால் புடம் போடுகிறான்" என்பதும் நபிக் கருத்துத்தான். "எனவே மக்களில் சிலர் புடம்போட்ட தங்கமாக வெளிவருகிறார்கள்.

"உண்மை முஸ்லிம்கள் ஆரோக்கியம் பொருந்திய உள்ளத்தையும் ஆரோக்கியமற்ற உடலையும் பெற்றிருப் பார்கள்!" என்று இப்னுமஸ்ஊத் கூறுகிறார்கள்.

எனவே மேற்குறிப்பிட்ட நான்காம் தரத்தினர் வியாதியைப் பெரியதொரு பேறு என்று கருதுகிறார்கள். எனவே அதை அழிப்பதற்கு அவர்கள் முயற்சி செய்வதில்லை. வைத்தியனுக்கோ வைத்தியத்துக்கோ மதிப்புக் கொடுப்பதில்லை!

முன்னோரில் சிலர் தம் வியாதியை எந்த வைத்தியனிட மும் சொல்லாமல் மறைத்து வந்திருக்கிறார்கள். நோய் எந்த விளைவை உண்டாக்கும்? அது உடலைப் பலவீனப்படுத்து மே தவிர, உள்ளத்தைப் பலவீனப்படுத்தும் ஆற்றல் அதற்குக் கிடையாது. எனவே நலமுள்ளவர்கள் நின்று வணங்கும் போது இவர்கள் உட்கார்ந்து வணங்க வேண்டி ஏற்படும்.

ஆரோக்கியசாலிகள் நின்று வணங்கும் வணக்கத்தைவிட, நோயுள்ளவர்கள்-தம் நோயைப் பொறுத்துக் கொண்டு-உட்கார்ந்து வணங்கும் வணக்கம் சிறந்தது என்று இவர்களுக்குத் தெரியும்.

ஆரோக்கியமுள்ளவர்களுக்கு இறை வணக்கத்தால் சிரமம் ஒன்றும் கிடையாது. அவர்கள் தம் கடமைகளை எளிதாக நிறைவேற்றி விடலாம். ஆனால் நோயாளிகளால் இப்படி நடக்க முடியாது. இவர்கள் மிகுந்த சிரமங்களுக் கிடையில்தான் இறை வணக்கத்தில் கூட ஈடுபட வேண்டி யிருக்கும். எனவே இவர்களின் வணக்கம் மிகச் சிறந்தது.

"சிரமங்களுக்கிடையில் உருவாகும் நற்காரியங்கள் மிகச் சிறந்தவை!" என்று பெருமானார் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

"நீங்கள் வெறுக்கும் ஒன்று உங்களுக்கு நன்மை தரக்கூடும்!" என்ற இறை கருத்தும் இதைத்தான் சுட்டிக் காட்டுகிறது.

ஆகவே வியாதி என்பது உடல் சம்பந்தப்பட்ட வணக்கங்களைத் தடுக்குமே தவிர, உள்ளம் சம்பந்தப்பட்ட வணக்கங்களைத் தடுக்காது. எனவே சஹ்ல் இப்படிக் கூறுகிறார்: "உடல் வியாதி ஓர் இறையருள்: மனோவியாதி ஓர் இறை தண்டனை!"

எனவே இந்த நான்காம் பிரிவினர் தம் வியாதிக்குப் பரிகாரம் தேடிக் கொள்ளாமலிருப்பது குற்றமல்ல.

5. தாம் கடந்த காலத்தில் செய்த தவறுகளை எண்ணி வருந்துகிறவர்கள் இவர்கள். அவற்றிற்குரிய தண்டனைகளை எப்படி ஏற்றுக்கொள்வது என்று தெரியாமல் இவர்கள் கலங்குவார்கள். எனவே இவர்கள் தமக்கு ஏற்பட்டிருக்கும் நாள்பட்ட வியாதியை இறைவனின் தண்டனை என்று எண்ணுவரர்கள். இதனால் இருக்கும் சூழலைத் திருப்தியோடு அனுபவிப்பார்கள்.

தாம் செய்த குற்றங்களுக்கு இவர்கள் இந்த முறையில் இறைவனுக்கு அபராதம் செலுத்துகிறார்கள். "ஒரு நாள் வியாதி ஒருவருடக் குற்றங்களுக்கு அபராதம்!" என்பது பெரு மானாரின் கருத்து. ஒரு நாள் வியாதி ஒரு வருடத்திற்கான சக்தியைச் சுறையாடி விடுகிறது என்பது உட் பொருள்,

இத்தகைய சக்தி வாய்ந்த வியாதிகள் எத்தனையோ இருக்கின்றன!

மனிதன் செய்த குற்றங்களுக்கு அவனைப் பீடிக்கும் வியாதிகள் அபராதமாக அமைகின்றன என்ற கருத்தைப் பெருமானார் வெளியிட்டபோது, ஸைத் பின் சாபித் என்ற நபித் தோழர் தம்மை நிரந்தர நோயாளியாக்குமாறு இறைவனிடம் பிரார்த்தித்தார். அவர் வேண்டுகோள் மேலிடத்து அங்கீகாரத்தைப் பெற்றிருக்க வேண்டும். மரணிக்கும் வரை அவர் நோயாளியாகவே இருந்தார்!

மதீனாவைச் சேர்ந்த சில நபித் தோழர்களும் இப்படி இறைவனிடம் முறையிட்டு நீங்காத வியாதியைப் பெற்றிருக்கிறார்கள்!

ஈஸா நபி கூறினார்கள். "துன்பங்களையும் வியாதி களையும் வரவேற்காதவன் உண்மையான அறிஞனல்ல!"

மூஸா நபி நோயாளி ஒருவனைக் கண்டார்கள். அவர் களின் இதயம் கனிந்தது. "இறைவனே! இந்த மனிதனுக்கு நீ அருள்பாலிப்பாயாக!" என்று இறைஞ்சினார்கள்.

மறுகணம் கிடைத்த இறை செய்தியை அடியில் பாருங்கள்: "...இப்போதும் அவன் என்னுடைய அருளில்தான் இருக்கிறான். இதற்குமேல் எப்படி அருள்பாலிக்க முடியும்?"

எனவே இந்தப் பிரிவினர் தம் வியாதிக்கு மருத்துவம் செய்யவில்லை என்றால் நம்மால் அவர்கள் மீது குற்றம் சாட்ட முடியாது.

6. ஆரோக்கியத்துடன் இருந்தபோது தம்மால் முறைப்படி நடந்துகொள்ள முடியவில்லை என்பதை நன்கு உணர்ந்தவர்கள் இவர்கள். அப்போதெல்லாம் தம்மால் நல்வழியில் நடக்க முடியவில்ல என்றும், தெரிந்தோ தெரியாமலோ தப்பான வழியிலேயே தாம் நடந்திருப்பதாக வும் உணர்வார்கள். எனவே மீண்டும் உடல் நலம் ஏற்பட்டால் நிலைமை முன்போல் திரும்பி விடுமோஎன்று அஞ்சுவார்கள்.

தீய செயல்கள் பலவகை. பெரும்பான்மை தீய செயல்கள் நல்ல உடல் நிலையினால்தான் உருவாகின்றன. நோயாளிகளால் அவற்றில் ஈடுபடவே முடியாது.

பீர் அவ்ன் தன்னை இறைவன் என்று சொல்லிக் கொண்ட வரலாறு உங்களுக்குத் தெரியும் என்று நான் நினைக்கிறேன். அவன் பெற்றிருந்த முழு ஆரோக்கியம்தான் இதற்குக் காரணம் என்று அறிஞர்கள் கருதுகிறார்கள்.

அவன் மண்ணகத்தில் 400-ஆண்டுகள் வாழ்ந்தானாம். இதற்கிடையில் அவனுக்கு ஒரு தடவையேனும் சிறு தலைவலி கூட ஏற்பட்டதில்லையாம்! அவனுக்குத் துன்பமயமான வியாதி ஏதும் ஏற்பட்டிருந்தால், தான் இறைவனல்லன் என்பதை உணர்ந்து கொண்டிருப்பான்.

எனவே இந்தப் பிரிவினர் ஆரோக்கியத்தை வெறுத்ததில் அர்த்தமுண்டு. அவர்களின் மனநிலை அப்படி இருந்தது.

நமது முன்னோர் தீய செயலையே வியாதி என்று எண்ணினார்கள். உடலை வாட்டும் எந்த வியாதிக்கும் அவர்கள் முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

இராக் தேசத்தில் சென்று கொண்டிருந்த அறிஞரை அலீ (ரலி) அவர்கள் "இங்கே என்ன விசேஷம்?" என்று கேட்டார்கள். "இவர்கள் காட்டும் மகிழ்ச்சிக்குக் காரணம் என்ன?"

"இன்று அவர்களுக்குப் பெருநாள்!"

அறிஞரின் விடை வாயாப்புக் கொடுத்தது: "பெருநாள்! இறைவனின் கட்டளைக்கு மாற்றம் செய்யப்படாத ஒவ்வொரு நாளும் நமக்குப் பெருநாளே!"

வியாதி என்பது உண்மையில் இறையருள்தான். நன்கு சிந்திப்பவர்களுக்கு இந்த உண்மை தெரியாமற் போகாது. குறிப்பாக அது மனிதனுக்கு மரணத்தையும் மறுமையையும் நினைவுறுத்துகிறது. நற்செயல்களை ஒத்திப் போடும் மானிடனுக்கு அது எச்சரிக்கை விடுக்கிறது, "இன்றே, இப்போதே செயலாற்று. எந்த வினாடியும் உன்னை மரணம் அணுகலாம்!" என்று.

எனவே இந்த ஆறாம் பிரிவினர் ஆரோக்கியத்தை வெறுத்ததோடு வியாதியை விரும்பி வரவேற்றார்கள். கையிலிருக்கும் செல்வத்தைப் பேணிக்காப்பது போல் அவர்கள் தமக்கு ஏற்பட்டிருக்கும் வியாதியைப் பேணிக்

காத்தார்கள். எனவே அதை அழிப்பதற்கு அவர்கள் எத்தகைய முயற்சியும் செய்யவில்லை!

மேற்குறிப்பிட்ட ஆறு பிரிவினரைத் தவிர்த்து மற்றவர்கள் இந்த வழியில் நடக்கக் கூடாது. அவர்கள் பெற்ற மனநிலை எல்லோருக்கும் இருக்க முடியாது. எனவே மற்றவர்கள் தம் வியாதிக்குப் பரிகாரம் தேடிக் கொள்ளத்தான் வேண்டும். ஏனெனில் தற்கொலை செய்து கொள்வதற்கு இஸ்லாத்தில் அனுமதி கிடையாது.

13. தப்புக் கணக்கு

இறை நம்பிக்கை என்பது ஆழம் காணமுடியாத பெருங்கடல் என்று நான் பல தடவைகள் எழுதியிருக்கிறேன். அதிலுள்ள மர்மங்களையும் எளிதில் புரிந்து கொள்ள முடியாத தத்துவங்களையும் முறைப்படித் தெரிந்து கொண்டவர்கள் மிகச் சிலர். எனவே புரிந்து கொள்ளாத வேறு சிலர் இறை நம்பிக்கை குறித்துத் தப்புக் கணக்குப் போட்டு வைத்திருக்கிறார்கள்.

இறை நம்பிக்கையாளர்கள் இறைவனைத் தவிர்த்து வேறு யாரையும்-எதையும் எந்த நேரத்திலும் நம்பக் கூடாது என்றும், நோயுற்றவர்கள் பரிகாரம் தேடக் கூடாது என்றும் அவர்கள் வாதிக்கிறார்கள்.

சற்று ஆழ்ந்து சிந்தனை செய்கிறவர்களுக்கு இந்த வாதத்திலுள்ள விபரீதங்கள் மிகத் தெளிவாகத் தெரியும். சிந்திக்கத் தெரியாதவர்களைப் பற்றி நாம் ஒன்றும் சொல்வதற்கில்லை. அவர்களுக்குச் சிந்தனை கிடையாது; உங்கள் சிந்தனையையும் அவர்கள் நம்ப மாட்டார்கள்.

அவர்களின் வாதம் பெருமானாரின் செயலால் நொறுக்கியெறியப்படுகிறது. பெருமானார் தம் வியாதிக்கு மருத்துவம் செய்திருக்கிறார்கள். நோயாளிகளுக்கு அவர்கள் பரிகாரம் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். இறை நம்பிக்கையாளர்கள் பரிகாரம் தேடக் கூடாது என்ற வாதம் நியாயமானதாயிருந்தால் பெருமானாரின் செய்லுக்கும் கருத்துக்கும் பொருள் என்ன?

வியாதி என்பது மனிதனுக்கு ஏற்படும் நிலைகளில் ஒன்று. பசி, தாகம் முதலியவையும் இப்படிப்பட்டவை தான். இறை நம்பிக்கையாளர்கள் பசியாலும் தாகத்தாலும் செத்து மடிய வேண்டும் என்று பெருமானார் கூற வில்லையே! அவர்கள் தம் பசிக்கு உண்டார்கள்; தம் தாகத்துக்குப் பருகினார்கள்.

நபித் தோழர்கள் சிலர் சிரியாவுக்குப் பிரயாணப் பட்டார்கள். அவர்கள் ஜாபியா என்ற இடத்துக்கு வந்த போது, சிரியாவில் வாந்தி பேதி பரவி வருவதாகவும், இதனால் பலர் மாண்டு விட்டதாகவும் செய்தி கிடைத்தது.

நபித்தோழர்கள் இரண்டு பிரிவுகளாகப் பிரிந்தனர்.

"நாம் சிரியாவுக்குப் போகக் கூடாது!" என்றனர் ஒரு சாரார். "இது தற்கொலை முயற்சிக்கு ஒப்பான செயலாகும்!"

மறு சாரார் இதை மறுத்தனர். "இல்லை, அது தவறு. நாம் போகத்தான் வேண்டும். இறைவன் மீது நாம் நம்பிக்கை வைக்க வேண்டும். இறைவனின் தீர்ப்பை எவராலும் மாற்ற முடியாது. வருவது வந்தே தீரும். மரணத்துக்குப் பயந்தோடுவது சரியல்ல. மரணத்துக்குப் பயந்தவர்களைத் திருக்குர்ஆன் கண்டிக்கிறது.!"

பிரச்சினை கருத்து வேற்றுமைக்கு வித்திட்டு விட்டது எனவே தீர்வு காணும் பொருட்டு உமர் (ரலி) அவர்களின் கருத்தை மற்றவர்கள் எதிர்பார்த்தார்கள்.

"நிலைமை தங்களுக்குத் தெரியும். இப்போது நாம் என்ன செய்ய வேண்டும்? தங்கள் கருத்து என்ன?"

கலபாவின் விடை தெளிவாக வந்தது. "இப்போது நாம் சிரியாவுக்குப் போகக் கூடாது. திரும்பி விடுவதுதான் நல்லது. இது என் கருத்து!"

"அப்படியானால் இது இறைவனின் தீர்ப்பை மாற்ற முயற்சி செய்வதுபோல் ஆகாதா?"-இது முரண்பட்ட கருத்துள்ளவர்களின் மறுப்பு.

"இறைவனின் தீர்ப்பை மாற்ற முயற்சி செய்வதா!" கலீபாவின் விடை கணீரென்று ஒலித்தது. "சிரியாவுக்கு நாம் செல்வதும் செல்லாமல் திரும்புவதும் இறைவனின்

தீர்ப்புகளே; மாடு ஒன்று ஒரு பள்ளத்தாக்கில் மேய்ந்து கொண்டிருக்கிறது. பசுமையான பகுதியும் வறண்ட பகுதியும் அங்கு இருக்கின்றன. எந்தப் பகுதியில் அது மேய்ந்தாலும் அது இறைவனின் தீர்ப்புதான்...."

இந்தக் கட்டத்தில் அப்துர் ரஹ்மான் பின் அவ்ப் அங்கு வந்தார்.

"உங்கள் கருத்து என்ன?" என்பது அப்துர் ரஹ்மான் மீது வீசப்பட்ட வினா.

"என்னிடம் ஓர் ஆதாரம் இருக்கிறது! பெருமானாரிடமிருந்து அதை நானே கேட்டிருக்கிறேன்!" என்றார் அப்துர்ரஹ்மான்.

"இறைவனே பெரியவன்! பெருமானார் என்ன சொன்னார்கள்?" என்று உமர் கேட்டார்கள்.

அப்துர் ரஹ்மான் சொன்னார்: "பெருமானார் சொல்ல நான் கேட்டிருக்கிறேன். 'ஒரு பகுதியில் வாந்திபேதி பரவுகிறது என்று நீங்கள் கேள்விப்பட்டால் அந்தப் பகுதிக்குப் போகாதீர்கள். நீங்கள் வசிக்கும் பகுதியில் அது தோன்றிவிட்டால் மரணத்துக்குப் பயந்து வெளியேறாதீர்கள்!' என்று பெருமானார் கூறினார்கள்-சிரியாவில் நோய் பரவி வருகிறது என்று நாம் கேள்விப்படுகிறோம். எனவே அங்குச் செல்வது சரியல்ல. இது என் கருத்து"

உமர் அவர்களின் முகம் மலர்ந்தது. நபித்தோழர்கள் மத்தியில் ஏற்பட்டிருந்த கருத்து வேற்றுமை மறைந்தது.

நீங்கள் கவனிக்க வேண்டும். மேற்குறிப்பிட்ட நபித் தோழர்கள் எப்படி நடந்திருக்கிறார்கள் என்பதை நீங்கள் உற்றுப் பார்க்க வேண்டும்.

இங்கு ஒரு குழப்பம் ஏற்படுகிறது. 'குடியிருக்கும் பகுதியில் நோய் பரவினால் வெளியேறுவது கூடாது' என்ற கருத்து பெருமானாரின் பொன் மொழியில் தெரிகிறது. இதற்குக் காரணம் என்ன? நோய் பரவிய பகுதிக்குள் பிரவேசிப்பதை அவர்கள் தடுத்திருக்கிறார்கள். ஏனெனில் இது தற்கொலை செய்து கொள்வது போன்றது. ஆனால் நோய் பரவிய பகுதியை விட்டு வெளியேறக் கூடாது என்கிறார்களே, இதுவும் தற்கொலைக்கு நிகரான செயல்தானே?

நீங்கள் நினைப்பது தவறு. ஓர் ஊரில் நோய் பரவினால் அந்த ஊரிலுள்ள வாயு மண்டலம் கெட்டுப் போகிறது. நோய்க் கிருமிகள் எல்லா இடத்திலும் பரவி நிற்க ஆரம்பிக்கின்றன. அவை காற்றில் கலந்திருப்பதால் ஒவ்வொரு மனிதனையும் உடனுக்குடனோ சற்றுத் தாமதமாகவோ நோயாளியாக்கும் வாய்ப்பைப் பெறுகின்றன.

கண்ணுக்குத் தெரியாத அந்தக் கிருமிகள் சுவாசத்தில் கலந்து மனிதனின் உடலுக்குள் சென்று விடுகின்றன. உள்ளுறுப்புகளை அவை தாக்குகின்றன. இந்தத் தாக்குதல் உடனுக்குடன் கண்டு பிடிக்க முடியாவிட்டாலும் சற்றுத் தாமதமாகவேனும் அதன் குணம் வெளிப்படத்தான் செய்யும்.

எனவே ஒரு பகுதியில் நோய் பரவினால் அங்கு வாழும் அத்தனை பேரும் நோய்க் கிருமியுள்ளவர்களாகவே இருப்பார்கள். இவர்கள் ஊரைவிட்டு வெளியேறி விடுவதால் நன்மை ஒன்றும் கிடையாது. உடலுக்குள்ளேயுள்ள கிருமிகள் ஊருக்கு வெளியிலும் ஆபத்தை ஏற்படுத்தக் கூடும். இதனால் வியாதியற்ற பகுதியில் வியாதியைப் பரப்பிய குற்றமும் ஏற்படலாம்.

தவிர, இரண்டொருபேர் இறந்து விட்டார்கள் என்ற காரணத்தை வைத்துக் கொண்டு ஒருவர் பின் ஒருவராக எல்லோரும் வெளியேறி விட்டால், நோயுற்றிருக்கும் முஸ்லிம்களை யார்தான் கவனிப்பார்கள்?

நோய் பரவிய சூழலில் இருப்பதால் மரணம் வந்துவிடும் என்பது நிச்சயமான ஒன்றல்ல. வெளியேறி விடுவதால் மரணத்தைத் தடுத்து விடலாம் என்பதும் உறுதியான ஒன்றல்ல. எனவேதான் பெருமானார் வெளியேறுவதற்கு மறுப்புத் தெரிவித்தார்கள்.

இவை மிக நுண்ணிய விளக்கங்கள். நன்கு ஆராயாதவர்களால் இவற்றைச் சரிவரத் தெரிந்து கொள்ள முடியாது.

வைத்தியம் செய்வது எல்லா நேரத்திலும் சிறப்புள்ளதல்ல. வைத்தியத்தை மறுப்பது எல்லா நேரத்திலும் வெறுப்பிற்குரியதல்ல. சூழ்நிலையை யொட்டித்தான் தீர்மானிக்க வேண்டும் சூழ்நிலை மாறினால் சட்டம் தானாகவே மாறிவிடும்.

ஒரு பகுதியில் கொடியநோய் பரவி வருகிறது என்று வைத்துக் கொள்வோம். அங்குள்ள அத்தனை பேரும் நோயாளியாகி விட்டார்கள். உதவிக்கு யாருமே அங்கு இல்லை. நோயாளிகளைக் கவனித்துக் கொள்வதற்கு ஆரோக்கியசாலிகள் தானே வேண்டும்?

இப்படியொரு சூழல் உருவானால் அந்தப் பகுதிக்குள் நீங்கள் தாராளமாகப் பிரவேசிக்கலாம். இதற்கு மார்க்கத்தில் தடையில்லை. இது மிகச் சிறந்த தியாக உணர்வு என்பதை நான்தானா உங்களுக்குச் சொல்ல வேண்டும்?

முஸ்லிம் பெருங்குடி மக்கள் அனைவரும் ஒரே ஒரு பொருள் போன்றவர்கள். உறுப்பினர்கள் பலர் இருந்தாலும் சமுதாயம் ஒன்றுதானே. உங்கள் கண்ணில் ஏற்பட்ட கோளாறுக்குக் கை ஒத்தாசை புரிவது போல, ஒருவருக்கு மற்றொருவர் ஒத்தாசை புரிய வேண்டும். உங்கள் காதில் கோளாறு ஏற்பட்டால் அதை நீங்கள் அறுத்துப் போட்டு விடுவதில்லையே! இதே போன்று உங்கள் சகோதரனுக்கு நோய் ஏற்பட்டால் அவனை ஒதுக்கித் தள்ளி விடாதீர்கள். சமூகத்தில் உங்களைப் போல் அவனும் ஓர் அங்கம்.

நிலைமை மாறினால் அவனுக்கு ஏற்பட்டிருக்கும் வியாதி உங்களுக்கும் ஏற்படக்கூடும். இதையும் நீங்கள் எண்ணிப் பாருங்கள்!

மேலே நான் குறிப்பிட்ட வேற்றுமைகளை நீங்கள் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும்; இந்தக் கட்டத்தில்தான் பெரும்பாலான அறிஞர்கள், பக்தர்கள் குழப்பத்தை விலைகொடுத்து வாங்குகிறார்கள். ஆனால் சலியாத சிந்தனை எந்தக் குழப்பத்தையும் தணிக்கக் கூடும்.

எங்கும் நிறைந்த இறைவன் எல்லாருக்கும் அருள்பாலிப் பானாக! அவன் எங்கும் நிறைந்தவன்; எதையும் அறிந்தவன்!